## உள்ளுறை

177582


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| | ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாச ஐயங்காருடைய ஆங்கில முகவுரை | ... |
| | ,, ,, ,, தமிழ் மொழிபெயர்ப்பு | ... |
| | நூன்முகம் | ... |
| 1 | தேசபக்த சித்த ரஞ்சன தாசருடைய திருவவதாரம் | |
| 2 | சித்த ரஞ்சன தாசருடைய தந்தையின் அரிய செயல்கள் ... | 5 |
| 3 | தாசருடைய கல்வி யறிவும், தேசாபிமானமும் ... | 8 |
| 4 | தாசர்பெருமான், மணமகளையும் திருமகளையும் குலமகளையும் அடைதல் ... | 14 |
| 5 | ஸ்ரீமான் அரவிந்த கோஷருடைய வழக்கின் வெற்றி ... | 21 |
| 6 | கலியுக கர்ணன் ... | 24 |
| 7 | சமயஞானம் ... | 27 |
| 8 | தாய்ப்பாஷாபிமானமும், பாண்டியத்தியமும் ... | 30 |
| 9 | தேசபக்தியே தெய்வ வழிபாடு ... | 32 |
| 10 | அரசியல் சீர்திருத்தத்திற்காக உழைத்தல் ... | 38 |
| 11 | ஒத்துழையாமை இயக்கத்தின் முன்னேற்றம் ... | 50 |
| 12 | சர்க்காவும், கொடுமையற்ற ஒத்துழையாமையும் ... | 57 |
| 13 | சிறைச்சாலையே தவச்சாலை ... | 61 |
| 14 | சிறைமீட்சியும், சுயராஜ்யக் கட்சியும் ... | 71 |
| 15 | இரட்டையாட்சியை யழிக்க முயற்சித்தல் ... | 82 |
| 16 | உலகநாயகர் நகரத்திற்கும் நாயகரா யிருத்தல் ... | 86 |
| 17 | மாளிகையும் வழங்கிய மாபெரும் வள்ளல் ... | 90 |
| 18 | பிரதிப்பூர் மகாநாடு ... | 98 |
| 19 | இரட்டை யாட்சியின் அழிவு ... | 103 |
| 20 | பாரத மாதாவின் துக்கம் ... | 106 |
| 21 | தலைவர்கள் துயரம் ... | 128 |
| 22 | முடிவுரை ... | 137 |


தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
நூலகம்

177582
சென்னை-600 008.



தேசபந்து சித்த ரஞ்சன தாசர்

# FOREWORD

BY

SRIMAN. S. SRINIVASA IYENGAR, B.A., B.L.,
*(President of the Swarajya party)*

A Nation is best judged by its leaders and its civilization by its products. It has often been made a reproach to us that if we were a great people in the past we are no longer so. Mahatma Gandhi and Desabhandu Das have in their lives, careers and teachings given the most cogent refutation. Our Nation and our civilization are still young in the possession of those ideals of renunciation and sacrifice, of universal love and of that wisdom which is not of this world which made India great in the past. Desabhandu Das has shown that even under the most adverse modern conditions Indians can evolve a code of self-discipline and can base Swaraj upon the wills and affections of the people, a Swaraj as efficient as any that has been devised by the people of the west. He was an embodiment of all that was best and noblest in our culture, a mystic, a poet, a statesman a ruler, an idol of the masses and a leader of the

classes. He brought a penetrating vision, boundless patriotism, matchless energy, stirring eloquence and a gift of personality greater than all, to the task of rebuilding the shattered Indian Nation and the Swaraj that would make the Hindu, Muslim and Christian, the poor and the rich, the learned and ignorant happier and taller. Modern India has produced many great men who have measured their strength against the west but to Das belongs the glory of having demonstrated that India could produce rulers who could beat the Western people at their own game. Sriman M. C. JAYARAM NAIDU has dealt with his theme as a labour of love with fulness, accuracy and sincerity. I have every confidence that it will be found to be both interesting and instructive. True National education means in these days a detailed acquaintance with the lives and deeds of the makers of Modern India, of whom Desabhandu Das stands in the very front rank.

Mylapore,
10th Oct. '25. } (SD) S. SRINIVASA IYENGAR

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4-DEC 1925
MADRAS

# முகவுரை

கௌரவம்பொருந்திய ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் பி-ஏ., பி-எல்., அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட முகவுரைக் கிணங்கிய தமிழ் மொழிபெயர்ப்பு.

ஒரு தேசத்தின் பெருமை, அதன்பாலுள்ள உயர்ந்தோரைக் கொண்டும், அதன் நாகரிகம், அது படைத்த மேதாவிகளைக் கொண்டும் செவ்வனே நிர்ணயிக்கப்படுகின்றன. பண்டைக்காலத்தில் நம் நாட்டினர் பெருமை படைத்திருந்தவரே யாயினும், தற்காலத்தில் நாம் அவ்வாறு இல்லை என்று நம்மை அயலார் பன்முறை பழித்துக் கூறி வருகின்றனர். மகாத்மா காந்தியடிகளும் தேசபந்து தாசரும், தங்கள் சரித்திரங்களாலும், ஒழுக்கங்களாலும், போதனைகளாலும் அந்தப் பழிப்புக்கு உறுதியான எதிர் உரை யளித்திருக்கின்றனர். நம் தேசமும் நம்முடைய நாகரிகமும், பண்டைக்காலத்தில் நம் நாட்டைச் சிறப்பித்த,—உலக இன்பங்களை வெறுத்தல், பரித்தியாகம், பரந்த அன்புடைமை, இந்நிலவுலகத்தைச் சாராத பாரமார்த்திக ஞானம் முதலியவற்றை இன்னமும் இப்பொழுதும் பெற்று யௌவன நிலைமையிலேயே இருந்து வருகின்றன. இடையூறுகள் நிறைந்த தற்கால நிலையிலும் இந்தியர்கள், தங்களைத் தாங்கள் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டிய சட்ட திட்டங்களை ஏற்படுத்திக்கொள்ளக் கூடும் என்பதையும், இதுகாறும் மேனாட்டினர் ஸ்தாபித்திருக்கும் சுயராஜ்யத்திற்கு ஒரு சிறிதும் குறையாததாயும், பொதுஜனங்களுடைய கருத்தையும் அன்பையும் ஆதாரமாகக் கொண்டதாயும் உள்ள தொரு சுயராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கூடும் என்பதையும் தேசபந்து தாசர், தெள்ளிதின் விளங்கக் காட்டியுள்ளார். நம் நாட்டுச் சாஸ்திரங்களிற் சிறந்தனவாய எல்லாவற்றையும் தம்முள் திரட்டிய ஓர் உருவமே தேசபந்து தாசர். அவர்,—ஒரு ஞானி; பாவலர், ராஜதந்திரி; ஆட்சியா

ளர்; பொதுஜனங்களுடைய ஆராதனைக்கு ஒரு விக்ரஹம்; எல்லா வகுப்பினர்க்கும் ஒரு தலைவர். சிதறிக் கிடந்த இந்தியசாதியினரைச் சீர்திருத்தி ஒன்று சேர்ப்பதும், ஹிந்துக்கள், மகம்மதியர், கிறிஸ்துவர், தரித்திரர், தனிகக், கற்றூர், கல்லார் ஆகிய அனைவரும் இன்பமும் தைர்யமும் அடையச் செய்வதற் கேற்ற தொரு சுயராஜ்யத்தை ஏற்படுத்துவதும் ஆகிய கடின வேலைகளைச் செய்வதில் கூர்மையான தீர்க்க தரிசன சக்தியையும், எல்லையில்லாத தேசாபிமானத்தையும், இணையற்ற ஊக்கத்தையும், ஆர்வத்தை யுண்டாக்கும் பிரசங்க வன்மையையும், வேறெவற்றினும் சிறந்த காண்போர் மனங்களைக் கொள்ளை கொள்ளும் தமக்கென உரிய தொரு சுபஇயல்பையும் அவர் செலுத்தினர். மேனாட்டாருடன் தம் வல்லமையை அளந்திருக்கும் பெரியவர் பலரைத் தற்கால இந்தியா படைத்துளது; ஆயினும், மேனாட்டினர் எத்துறையில் வல்லுநரோ அத்துறையிலேயே அவரைத் தோற்கடிக்கும் திறமை வாய்ந்த அரசாளுதற் குரியவரை நம் நாடு படைக்கக் கூடும் என்பதை மெய்ப்பித்திருக்கும் அப்பெருமை தேசபந்து தாசர் பாலதே யாதும். ஸ்ரீமான் ம. க. ஜயராம் நாயுடு, தாம் மேற்கொண்ட இவ்வேலையை அன்பினடியாகப் பிறந்த தோர் உழைப்பாகக்கொண்டு ஆர்வத்துடனும், திருத்தத்துடனும், உண்மையுடனும் செய்துள்ளார். இஃது, இன்பமாகவும், நல்லறிவைத் தரத் தக்கதாகவும் இருக்கும் என்பதில் எனக்கு ஏவ்வித நிச்சயமும் உண்டு. இந்நாளில், உண்மைத்தாய தேசீயக்கல்வி என்பது,— இந்திய சாதியினரை ஒழுங்குபடுத்தி இந்தியாவின் முன்னேற்றத்திற்குக் காரணமாயுள்ளவர்களுடைய சரித்திரங்களையும் செயல்களையும் விரிவாக நன்கு கற்பதே யாகும். அத்தகைய பெரியவர்களுள் தேசபந்து தாசர், முதன்மை வாய்ந்தவர்களுள் ஒருவராக விளங்குகின்றார்.

(Sd) எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார்

# நூன்முகம்

தேயபந்து சித்த ரஞ்சன தாசர் பாரதநாட்டுத் தொண்டர்களுள் மிக்க பெருமை வாய்ந்த மகிபர் என்பதை நாம் அனைவரும் கண்ணாரக் கண்டிருக்கின்றோம். அந்தப் பெரியார் நம் நாட்டிற்கு—நமக்காக உழைத்த உழைப்புக்களை நினைக்குந்தோறும் ஒவ்வொருவருடைய மனமும் உருகும் என்பதற் கோர் ஐயமும் உண்டோ? அவர், அங்ஙனம் நிகரற்ற பெரியவராய் விளங்கியதற்குக் காரணம், அவருடைய புத்திக்கூர்மையும், தாய் நாட்டினிடம் கொண்ட அன்பின் பெருக்கும், விடாமுயற்சியுமே யாம். அந்தப் பாரத பக்தருடைய அரிய சரித்திரத்தையும், உயர்ந்த சொற்களையும் நம் நாட்டினர் ஒவ்வொருவரும் படிப்பாராயின், நம் நாடு விரைவில் முன்னேற்ற மடைந்து, உரிமையுடன் விளங்குமென்பதற்குத் தடையும் உளதோ? இக்கருத்திற் கிணங்கவே யாம் அறிந்த அவருடைய உண்மைச் சரித்திரத்தைச் சுருக்கமாகவும், அருமை பெருமை வாய்ந்த அவருடைய சொற்பொழிவுகள் சிலவற்றுடனும் இந்நூலை வெளியிடலாயினம்.

தமிழ் அன்பர் இந்நூலை யாதரிப்பாராகில், இதைப் போலவே மகாத்மா காந்தியடிகள், லோகமான்ய திலகர், கோபால கிருஷ்ண கோகலே முதலியோருடைய சரித்திரங்களையும், சொற்பொழிவுகளையும் செவ்வனே விரைவில் வெளியிடுவோம்.

அன்பர்கள் பலரும் கண்டு களிக்கத் தேயபந்து தாஸருடைய திருவுருவப்படங்களையும் இதிற் சேர்த்துள்ளோம்.

குற்றம் குறைகளிருப்பின் உலகம் பொறுக்க வேண்டுகின்றனம்.

செந்தமிழ்ச்சிந்தாமணிப்
புத்தகசாலை
பெரியமெட், சென்னை
15—8—25.

இங்ஙனம்

நூலாசிரியர்



தாசர்

(நீதிவாதித் தொழிலினராயிருந்த காலத்தின் அழகு)

ஸ்ரீ

# தேசபந்து விஜயம்

## தேசபந்து

## சித்த ரஞ்சன தாஸர்

## திருவவதாரம்

பூவுலகெங்கும் புகழும் உத்தமகுண வீரசிகாமணியாகிய தேசபந்து சித்த ரஞ்சன தாஸருடைய உயர்ந்தகுணங்களையும், அற்புதச்செயல்களையும், சொல்திறமைகளையும், ஒப்பிலா வள்ளல் தன்மைகளையும் பற்றிக் கேட்குந்தோறும், பார்க்குந்தோறும் நம்முடைய மனங்கள் நெக்குருகுகின்றன வல்லவா? தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகிய அப்பெருந்தகையாருடன் மிக நெருங்கிப் பழகுவோரும், அப்பெரும் வள்ளலுடைய உயர்ந்த குணங்கள் முதலியவற்றைக் கண்டு நம்மைப் போலவே கசிந்துருகுகின்றனர். ஒப்பிலா அற்புதமணியாம் அப்பெரும் தாஸருடைய திவ்விய சரித்திரத்தை நம் நாட்டினர் ஒவ்வொருவரும், நாடோறும் படித்து, அவருடைய உயர்ந்த குணங்கள் முதலியவற்றைப் பின்பற்றி நாட்டைக்காப்பதுடன் எல்லாம்வல்ல இறைவன் திருமாமணி மண்டபம் அடைந்த அவர் மனம், சாந்தியுறுமாறு அக்கடவுள் திருவடிகளை மன மொழி மெய்களால் வணங்குதலே சிறந்ததென்பதை அனைவரும் நன்கு அறிவர்.

உலகிலுள்ள தேசங்கள் பலவற்றுள்ளும் சமய ஞானத்திலும் சாத்விக குணத்திலும் சிறந்து விளங்குவது நம் பாரத கண்டமே யாகும். நம் சமயம் மிகத்தொன்மையது; சாதிமத பேத மற்றது; எச்சமயத்தையும் தன்னுள் கொள்ளும் தன்மைத்தாய பெருமை யுடையது. இத்தகைய உயர்ந்த சமயத்தின் அன்னையாகிய நம் பாரதமாதா, இற்றைக்குப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னரே நாகரிகம் என்னும் ஆடையையணிந்து நின்றனள். தற்காலத்தில், நாகரிக அணி அணிந்து விளங்குகின்றதென்று சொல்லும் மேனாடுகளில் அநாகரிகம் என்னும் பேய், தலைவிரித் தாடிக்கொண்டிருந்த காலத்தில் நாகரிகக் கடவுளாய்ச் செங்கோலோச்சிச் சிறக்க வீற்றிருந்தவள் பாரதமாதாவே யாவள். அவள், ஆன்ம உணர்ச்சியில் சிறந்து விளங்கினள்; ஒற்றுமை என்னும் உத்தமிக்கு உற்ற உறையுளாகப் பொலிந்தனள்; பூதபௌதிக ரசாயன ஞானம் மிகுந்து உலாவினள்; கணக்கற்ற பேரறிஞரைப் பெற்றுத் துலங்கினள்; மேன் மக்கள் பலரை ஈன்றெடுத்து இனிது வாழ்ந்தனள். இவ்வளவு சீரும் சிறப்பும் பெற்றுப் பெருமையுடனிருந்த நம் பாரதமாதா, தற்காலம் மேனாட்டு நாகரிகத்தைத் தெய்வம் போலப் போற்றிடும் புனிதர்களாலோ, கலியின் கொடுமையினாலோ கையில் தளையுடனும், காலில் விலங்குடனும், உண்ண உணவின்றியும், உடுக்க உடையின்றியும், உரிமையின்றியும், சீர்குலைந்தும், உயர்ந்த நிலைமையிழந்தும், வேடர் வலையிற்பட்ட மான் போலக் கண்களிலிருந்து நீர் ஊற்றென வெதும்பியூற்றத் துயருறுகின்றனள். என்னே காலத்தின் இயல்பு! என்னே கொடுமை!!

உலகில் ஒவ்வொரு நாட்டிலும் தருமம் குறைகிற காலத்தில் சமயாசாரியராகவோ, தேசாபிமான முள்ளவராகவோ



மகாத்மாக்கள் அவ்வப்பொழுது தோன்றுகின்றனர். அவர்கள் செய்யும் செயல்கள் நன்மையையும் வியப்பையும் தரத் தக்கனவா யுள்ளன. அவர்களுடன் நெருங்கிப் பழகுவோரும் அப்பெரியார் தொடங்கும் செயல்கள் 'இன்னவாறு நிகழும்' என அறிய முடியாதனவா யுள்ளன. பல்வேறு நாடுகளில் பல வேறு சமயங்களில் அத்தகைய பெரியார் பலர் தோன்றிப், பிறர் நலந்தேடி, நன்னெறி நாடி, நாட்டிற்காக வாடி இருக்கின்றனர். இப்பொழுது நாம் இழந்து ஏங்கும் கல்கத்தாவின் கற்பகமும், வங்காளத்தின் சிங்கமும், தேசத்தின் பந்துவும், பாரதமாதாவின் உயர்ந்த புதல்வரும், இரவலர்தம் வறுமையை இடித்தோட்டும் வள்ளலும், பிறர் நலங்கருதும் பெரியாருமாகிய சித்த ரஞ்சன தாஸரும் அப்பெரியாருள் ஒருவர் என்பதற்கோர் ஐயமும் உண்டோ? அப்பெரியார் பலருள்ளும் நம் தாஸரே மிக்க வீரமும், திறமையும் பெற்றுச் சிறக்க விளங்கினர்.

உரிமை யெனும் ஒளி பரப்பி அடிமை யெனும் இருளகற்ற வந்துதித்த அந்த ஆண்டகையை, பாரத மாதாவின் அருமருந் தன்ன புதல்வரை, இழந்து நம் பாரத அன்னை, துக்கக் கடலுள் ஆழ்ந்து, உள்ள முருகிக் கண்ணீர் பெருக்கிக் கலங்காமல் என் செய்வாள்? அமலன் நம் அன்னைக்கு விளைவித்த துயரம்தான் என்னே!

வங்காளத்தின் விலங்கைத் தெறித் தெறிந்த சிங்கமாகிய நம் சித்த ரஞ்சன தாஸர், மிகத் தொன்மையதும், ஒரு காலத்தில் வங்க நாட்டையே ஆண்டு நின்ற பெருமையை யுடையதும், உயர் குலத்தின் தாயாகியதும், உயர்ந்த குணங்களுக் கொருகளஞ்சியமாகியதும், மேதாவிகளுக் கிருப்பிடமாகியதும், கண்ணிய நடத்தை யுடையதும், புண்ணிய பழமாகியதும், தன்னலங் கருதாப் பெருக்

தன்மையதும், தாய்ப்பாஷாபிமானம் மிக்கதும், கலைமகள் கழகமாயதும், திருமாமகள் நிலையமாய்த் திகழ்வது மாகிய ஒரு வங்காளியர் நல்ல வைத்திய குடும்பத்தில் 1870-ம் ஆண்டு நவம்பர் மாதம் ஐந்தாம் தேதி யன்று காலை ஆறே முக்கால் மணிக்குச் சற்று மேல் (6மணி 48 நிமிஷங்களுக்கு) சுபலக்கினத்தில் இருளில்லா வுணர் வென்னும் தம்முடைய இலங் கொளியால் இந்நாட்டைக் காக்கக், கீழ்த்திசையில் தோன்றும் கதிரவனைப் போல் அந்நாள் உதித்த அருக்கனுடன் கல்கத்தாவில் திருவவதாரஞ் செய்தார். அவ்வேளை, பாரதமாதா களிப்பென்னுங் கடலுள் ஆழ்ந்து சிறக்க எழுந்தனள். நம் உலகம் திருவுற்றுத் திகழ்ந்தது. இந்நன்னாடும், தன் பாக்கிய மடைந்தது.

நம் பொருட்டுத் தம் தாசனை ஈண்டு அனுப்பிய எல்லாம் வல்ல திருகாரணன் திருவடிகளை என்ன சொல்லி, எவ்வாறு துதிப்போம்? நம் தாசனை ஈன்றெடுத்த இரு முது குரவர்க்கும், பாரத அன்னைக்கும் நாம் என்ன கைம்மாறு செய்ய வல்லோம்? அந்தத் திருத்தொண்டர் தோன்ற எதிர்பார்த்துக்கொண்டிருந்த அந்நாளைப்போல் நமக்கு இனி எந்நாள் அத்தகைய பேருதவியைச் செய்யப் போகிறது? அவர் பிறக்கக் காத்துக் கொண்டிருந்த அந்நன்னாளுக்கு நாம் தந்நாளும் மறவாமல் வந்தன மளிக்கக் கடமை பட்டிருக்கின்றோ மல்லவா? மோலிபுனையா அவ்வேந்தனைப் பெற்றெடுத்து வளர்க்கக் கல்கத்தா மா நகரம் நோற்ற நோன்பின் திறமைதான் எத்தகையதோ? கீழ் வங்காள தேசத்திலிருக்கும் டேக்காவைச் சேர்ந்த பிக்ராம்பூரிலுள்ள டெலிர்பாக் என்னும் கிராமமே தாசர்தம் முதாதைகளுடைய இருப்பிடமாகும்.

---

# அத்தியாயம் 2

## சித்த ரஞ்சன தாஸருடைய தந்தையின் அரிய செயல்கள்

மூப்பெரும் புவியினரும் புகழக் கூடிய ஒப்பிலா வள்ளல் தன்மையினை யுடைய சித்த ரஞ்சன தாசர் குடும்பத்திற் பிறந்த பாபு ரத்ன கிருஷ்ண தாசர், 'அறஞ் செய விரும்பு' என்னும் மூதாட்டியார் மொழியைச் சிரமேற் கொண்டு ஒழுகுபவராயிருந்தார். அவர் அறஞ் செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாய் நின்று, பெரும் புகழ் பெற்றார். சித்த ரஞ்சன தாசருடைய தந்தையின் தாதையாகிய ஜகத்பந்து, ராஜ்ஷாஹியில் அரசாங்க நியாயவாதியாக (பாரிஸ்டராக) இருந்து, ஏராளமாய்ப் பொருளீட்டித், தாம் தேடிய அப்பொருளை யெல்லாம் ஏழைமக்களுடைய துயரங்களைக் களைவதிலேயே செலவிட்டு மகிழ்ந்தார். ஜகத்பந்து, கல்விக் களஞ்சியமும் இனிய பாவலருமாவர்.

ஜகத்பந்துவின் புதல்வராகிய பாபு பூபன் மோகன தாசர் கல்விச் செல்வமும் பொருட்செல்வமும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர். அவர், கல்கத்தா உயர்தர நீதிமன்றத்தில் பிரசித்தி பெற்ற ஒரு நியாயவாதியாக இருந்தார். அவருடைய வாக்கின் வன்மையும், அறிவின் முதிர்ச்சியும் அவருக்கு ஏராளமான பொருளையும் கீர்த்தியையும் ஈந்தன. உயர்ந்தோர் எப்பொழுதும் உலகின் நன்மைக்கே உழைப்பர் என்பதற்கிணங்க மோகன தாசரும், தம்முடைய நியாயவாதித் தொழிலுடன்

நில்லாமல் உலக நன்மையின் பொருட்டு முதலில் 'பிராமோ பப்ளிக் ஒபீனியன்' என்னும் பத்திரிகைக்கும், பின்னர், 'வங்காள பப்ளிக் ஒபீனியன்' என்னும் பத்திரிகைக்கும் ஆசிரியராகவிருந்து, அவற்றை மிகத்திறமையுடன் நடாத்தி, வங்க நாட்டுப் பத்திராதிபர்களுள் ஒருவராகச் சிறந்து விளங்கினர்.

மோகன தாசர் தேயபக்தி மிக்கவர். செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல் என்னும் ஆன்றோர் உரைப்படி அவர், தம் பொருளை யெல்லாம் வறுமைப் பிணியால் வாடிய தம்முடைய ஏழை உறவினர்க்கே ஈந்து வந்தார். தம்முடைய உறவினருள் எண்ணிறந்தவர்க்கு அவர், உணவையும் உடையையும் நிழலையும் கொடுத்த தல்லால் கல்விச் செல்வத்தையும் அவர்கள் பெற்றிட உதவினர். வளவனே யாயினும் அள வறிந்து அழித்துண்ண வேண்டு மல்லவா? அளவு கடந்து அப் பெரியார், தம்முடைய உறவினரைத் தாங்கினர்; ஆதலின், தாம் சம்பாதித்த அளவிட வொண்ணுப் பொருளை யெல் லாம் இழந்தவ ரானர்; கடனென்னும் பேய் வாயினும் அகப்பட்டவரானர். அற்றத்திற் கழகு சூழ விருத்தல் என்பதற் கிணங்கக், கடன் பட்டும் தம் உறவினரை அவர் கைவிட்டார் அல்லர்; என் கடன் பணி செய்து கிடப்பதே என்று மனத்திற் கொண்டு, கடன் பட்டும் தம் கிளைஞருக்குப் பணி செய்து நிற்பவரானர். வாங்க வாங்கக் கடனும் மிகுந்தது. கடன் பெருகப் பெருக மோகன தாசருடைய மனக்கலக்கமும் பெருகியது. அவர், தாம் பட்ட கடனைக் கழிக்க இயலா மைக்கு மிகவும் வருந்தினர்; தாம் கடன் படக் காரணரா யிருந்த தம்முடைய சுற்றத்தினரை அப்பொழுதும் மறந்தார் அல்லர். பிறர் நலமே மிகப் பெரிதாகக் கருதும் அப்பெரியா



ருடைய செயல்தான் என்னே! வியப்பு! வியப்பு!! அவர் வாங்கிய கடன் நாளேற வேற வளர்ந்து, வட்டியுடன் முதிர்ந்து, முடிவில் பதினறு லட்சம் ரூபா யாயிற்று. கடனின் கொடுமையை யறியலானர் மோகன தாசர்.

அவர், தமக்குக் கடன் கொடுத்தவர்களுடைய நிர்பந்தங் களுக்குள்ளாகி, விஷங் கொண்ட மீனைப்போலும், பாம்பின் வாயிற் பட்ட தேரையைப்போலும் வாடித், தாம் பட்ட கடனைத் தீர்க்க யாதொரு வழியுமின்றி வருந்தும் உள்ளத்தராய், நீதிமன்றத்தைநாடி, நீதிமன்றக்காப்பும் பெற்றூர். என்னே விதியின் கொடுமை! அவர், கடனுக்காக நீதிமன்றக்காப்புப் பெற்றதனுலுண்டாகியவேதனை அவருடைய குடும்பத்தை மிகவும் வாட்டியதென்று கூறவும் வேண்டுமோ? அவர் பிறந்த குடும்பத்தின் பெருமையை அந்தத் துக்க விருள் மறைக்காமல் என் செயும்? அந்தோ! பெரிதும் துன்பம்! பாபு பூபன் மோகன தாசர் மற்றென் செய்வார்? கிளைஞருக்கே யீந்து ஏழையானர்; கடனும் பட்டுச் சுற்றத்தாரைக் கைவிடாமற் காத்தார்; கடனைக் கழிக்க இயலாமற் கலங்கினர்; நீதிமன்றக் காப்பும் பெற்றூர். ஐயோ பாவம்! அந்த உதாரகுண பெரியவர் அடைந்த நிலைமைதான் என்னே! நினைக்குந் தோறும் நம் உள்ளங்கள் நெக்குருகுகின்றன வல்லவா? மிகவும் பரிதாபம்! பரிதாபம்!! உத்தமரைக் கடவுள் பரீட்சிப்பது இவ்வாறேபோலும்?

குமுதவல்லியாரை மணந்த திருமங்கை ஆழ்வார், சோழமன்னனுக்குச் செலுத்த வேண்டிய பகுதிப்பணத்தைச் செலுத்தாமல், அப்பணத்தை யெல்லாங் கொண்டு நாடோறும் ஆயிரத் தெட்டுப் பாகவதர்களுக்கு அறுசுவை யுண்டி அமைத்திட்டு வர, அதை யறிந்த சோழன், அந்த ஆழ்வாரைப் பிடித்துச் சிறையி லிட்டதைப் போலவும், ஐதாரப்

பாக்கம் நவாப் தாநீஷாவினிடம் தாசில் உத்தியோகத்திலமர்ந்த இராமதாசர், தாம் குடிகளிடமிருந்து வசூலித்த நிலத்தீர்வை முதலிய பணத்தை எல்லாம் அந்த நவாப்புக்கு முறையே செலுத்தாமல், பத்திராசலத்தில் எம்பெருமான் கோயில் திருப்பணிகளுக்குப் பல ஆண்டுகள் வரையில் உபயோகப்படுத்தி முடிவில் அந்த நவாப்பினால் சிறையில் அடைக்கப்பட்டதைப் போலவும் அல்லவா நம் தாசர் தந்தையின் சரித்திரமும் ஒருவகையிற் காண்கிறது?

# அத்தியாயம் 3

## தாசருடைய கல்வி அறிவும், தேசாபிமானமும்

மோகன தாசருடைய இரண்டாம் பிள்ளையும் முதல் திருக்குமாரருமாகத் தோன்றிய தோன்றலாம் நம் சித்த ரஞ்சன தாசருக்குச் சகோதரர்கள் இருவரும், இரண்டு சகோதரிகளும் இருக் ன்றார்கள். அவருடைய சகோதரர் ஒருவராகிய ஸ்ரீமான் பிரபல்ல ரஞ்சன தாசர், இப்பொழுது பாடலிபுரம் உயர்தர நீதிமன்றத்தில் நியாயாதிபதியாக இருக்கின்றார். மற்றொருவராகிய ஸ்ரீமான் எஸ். ஆர். தாசர், இதுகாலை, கல்கத்தாவில் ஒரு பெரிய நீதிவாதியாக இருக்கின்றார். சித்த ரஞ்சனருடைய சகோதரிகள் இருவரும் தேசபக்தியில் ஈடுபட்டு, ஒத்துழையாமை இயக்கத் தோற்றத்தின் போது சித்த ரஞ்சனருடன் கூடி உழைத்தது நாம் அறிந்த விஷயமே யாகும். நிற்க,

சித்த ரஞ்சனர் செவ்வனே பிறைச் சந்திரனைப் போல் வளர்ந்து, உரிய காலத்தில் கல்வி கற்கத் தொடங்கினார்



உடல் வளர வளர அவருடைய கல்வியும் அறிவும் வளர்ந்து கொண்டே வந்தன. அஞ்ஞான இருளகற்ற வந்த மெஞ்ஞான பானு அவராதலின், அவரிடம் குடிகொண்ட கல்விக்கும், நுண்ணறிவுக்கும் எல்லையும் உண்டோ? இளம் பருவத்திலேயே உயர்ந்த குணங்களுக்கெல்லாம் அவர் உறையுளாக விளங்கினார். தாம் பிறந்த குலத்தின் பெருமையுடன் குடும்பத்தின் அரிய குணங்களும் அவரிடம் நன்கு விளங்கின. தந்தையின் அறவொழுக்கம் அவரை நாடியது. பாட்டனாருடைய கவித்திறமை, அவரைத் தேடிவரத் தொடங்கிற்று. அவர் தோன்றிய குடும்பத்தில் இயற்கையாகவே இருந்த தேசபக்தி அவரை யணுகலாயிற்று. தாய்ப்பாஷாபிமானமும் அவர் மனத்திற் குடிகொள்ள ஆரம்பித்தது. இத்தகைய அரிய பெரிய குணங்களெல்லாம் சித்த ரஞ்சனரிடம் பொலியலானமை நியாயமே யல்லவா? கல்லாமற் பாகம் படும் குலவித்தை என்று மூதறிஞர் ஓதியது பொய்த்துப் போகுமா? 'மோகன தாசர் வாங்கிய கடனைத் தீர்க்க முடியாமற் காப்புச் சரண் பெற்றார்' என்னும் தாழ்ந்த சொல் அவருடைய குலப் பெருமையையும் குடும்பத்தின் உயர்வையும் வாட்டியதெனினும், அது நம் சித்தரஞ்சனருக்கு அளவற்றபுகழைக் கொடுத்ததுடன் முன்னேற்றத்திற்குரிய வழியையும் காட்டியோடிப்போயிற்று. அது ரஞ்சனருடைய உயர்ந்த குணங்களை விளக்கிக் காட்டியதுடன் அவருக்கு நாட்டின் நட்பையும் உண்டாக்கி மறைந்தோடியது என்பதை நாம் இச்சரித்திரத்தில் நன்கு காணலாம்.

சித்த ரஞ்சன தாசர் இளமையிற் பவானிப்பூரிலுள்ள லண்டன் பாதிரி கல்லூரியிற் படித்து 1886 - ம் வருஷத்தில் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேர்ந்தார். பின்னர், கல்கத்த மாகாண கலாசாலையில் இரண்டு ஆண்டுகள் கல்வி பயின்று

1890-ம் ஆண்டில், தமக்கு இருபது ஆண்டுகள் நிறையு முன்னரே பி - ஏ; பட்டமும் பெற்றார். அவர் கல்லூரியில் மாணவராக இருக்கும் போதே கல்வித்திறமையிலும் வாக்கு வன்மையிலும் மிகுந்தவராய் விளங்கினார்.

“என்னுடைய சகோதரர் ஸ்ரீமான் சித்த ரஞ்சன தாசரும் நானும் ஒன்றாக வளர்ந்தவர்கள். நான் நான்கு வருஷக் குழந்தையாகவும் என் உடன் பிறந்தோன் இரண்டாண்டு சிறுவனாகவும் இருக்குங் காலத்தில் என்னுடைய அன்னை இறந்து பட்டனர். அன்று முதல் என்னுடைய சிற்றன்னையாகிய சித்த ரஞ்சனருடைய தாயே எங்களுக்கு அன்னையாயினர். நான் பதின்மூன்றாம் ஆண்டை யடையும் வரையில் அவரே என்னை வளர்த்து வந்தனர். பின்னர், நான் இங்கிலாந்திற்குக் கல்வி பயிலச் சென்றேன். அந்த இளவயதிலேயே சித்த ரஞ்சனர், சிறுவர்களாகிய எங்களுக்குத் தலைவராக் விருந்து, எங்களை அடிக்கடி ஒருங்கே கூட்டிப் பிரசங்கம் செய்வது வழக்கம்” என்று ஸ்ரீமான் எஸ். ஆர். தாசர், ‘சர்வெண்ட்’ என்னும் பத்திரிகையில் எழுதி யிருப்பதிலிருந்தே நம்முடைய சித்தரஞ்சனர், இளமைப் பருவத்திலேயே வாக்குவன்மையிற் சிறந்திருந்தவர் என்பது நன்கு விளங்கும்.

பி - ஏ; பட்டம் பெற்றதும் சித்த ரஞ்சனர், ‘இந்திய சிவில் சர்விஸ்’ போட்டிப் பரீட்சைக்காக இங்கிலாந்திற்குச் சென்றார். நன்றாகப் படித்து அந்தப் பரீட்சையில் அவர் தேர்ச்சிபெற்றாரெனினும், அவருக்கு உத்தியோகம் கிடைக்கவில்லை. அவருக்கு உத்தியோகம் கிடைக்காமல் போனதற்குக் காரணம், அவர் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த காலத்தில் நிகழ்ந்த இரண்டொரு நிகழ்ச்சிகளே யாகும். அவர் படிப்பதற்காக இங்கிலாந்திற்குச் சென்றிருந்த போது, பாரத



மாதாவின் திருத்தொண்டர்களுள் முதன்மையானவரும், தேசபக்தர்களுக் கெல்லாம் பெருங் குருவானவரும், நம் நாட்டுத் தலைவர்களுள் சிரோமணி யென விளங்குபவருமாகிய ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜி பாராளு மன்றத்தி (பார்லியமெண்டி)ற்கு ஓர் அபேட்சகராக நின்றார். அவருக்கு உதவியாக நம் தாசர் பல விடங்களில் உபந்யாசங்கள் செய்தார். தாசருக்கு அந்த உபந்யாசங்கள் இங்கிலாந்திலும், இந்தியாவிலும் ஒப்பற்ற கீர்த்தியையும் உயர்மதிப்பையும் தந்தன. அப்பொழுது, ஸ்ரீமான். ஜான் மக்ளீன் என்னும் பாராளு மன்றத்தின் அங்கத்தினர் ஒருவர், தாம் செய்த ஓர் உபந்யாசத்தில் இந்துக்களையும் முகம்மதியர்களையும் தூஷித்துப் பேசினார். அந்த உபந்யாசத்தைக் கேட்டதும் சித்த ரஞ்சனருடைய மனம் பதை பதைத்தது. தருணவாதித்த னெனத் தாரணியில் நம்மிடையே வந்து தோன்றிய தாசர், தம் தேயத்தவர்களை, பாரத அன்னையின் மக்களைத் தூஷித்த துரையினிடம் எல்லையற்ற கோபங் கொண்டார். அத்தகைய அடாத செயலினிடம் யாருக்குத்தான் கோபம் உண்டாகாது? அங்ஙனம் உண்டான கோபத்தினால் சித்த ரஞ்சனர் யாதேனும் அடாதது செய்யத் துணிந்தனரா? இல்லை, இல்லை. உலகெலாம் புகழும் உயர்மதி படைத்த உத்தமரான அவர், கீழ்மக்களுக்குரிய அத்தகைய செயலுக்குட் படுவாரோ? ஆதலின் அவர், உண்மையை யறிவுறுத்தி, அந்தத் துரையின் அறியாமையை விளக்க எண்ணங்கொண்டார்; உடனே இங்கிலாந்திலிருந்த தம்முடைய இந்திய சகோதரர்களை எல்லாம் ஒருங்கே கூட்டி, ஸ்ரீமான் ஜான் மக்ளீன் பிரசங்கத்தைக் கண்டித்து, எதிர் பிரசங்கமொன்று செய்தார்; அந்தப் பிரசங்கத்தில் துரை அவர்கள் கூறிய

அனைத்தும் தவறென்று நன்கு விளக்கிக் காட்டினார். அந்தப் பிரசங்கத்தின் பயனாக ஸ்ரீமான் மக்லீன் துரை மன்னிப்புக் கேட்டுக் கொள்ள நேர்ந்ததுடன் தம்முடைய அங்கத்தினர் பதவியையும் இழந்து போக வேண்டியவ ரானார். ஐயோ பாவம்! ஜான் மக்லீன் துரை, தாம் ஆராயாமல் மொழிந்த தாழ்ந்த சொற்களுக்காகத் தம்முடைய உயர்ந்த பதவியையும் இழந்தார். ஆய்ந்தோய்ந்து பாராதான் சாகக்கடவன் என்பது பழமொழி யன்றோ?

“ யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு ”

என்னும் தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனார் திருமறைமொழி ஸ்ரீமான் ஜான் மக்லீன் துரையினிடம் மெய்த்த தென்ன வியப்பா?

அதுகாலை, ஆங்கில் பிரதம மந்திரியாக விருந்த ஸ்ரீமான் கிளாட் ஸ்டன் துரையினுடைய தலைமையில் நம் தாசர், இந்தியாவின் விஷயங்களைப் பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். சிவில் சர்விஸ் போட்டிப் பரீட்சையில் தேறுத லடைந்தும் அவருக்கு உத்தியோகம் கிடைக்காமற் போனதற்குக் காரணம் இதுவேயாகும் என்று சிலர்கூறுவர்.என்னே! அவர் கூற்றிருந்தவாறு மிகவும் நன்று! அந்த உத்தியோகத்தின் தன்மைக்கும் சித்த ரஞ்சனருடைய அறிவின் முதிர்ச்சிக்கும் அஜகஜாந்தர சம்பந்தமு மில்லை என்று கடவுள் அறிந்து, அவரை அந்த உத்தியோகத்திற்குள் புகுத்தி வருத்தாமல் காப்பாற்றி யிருத்தல் வேண்டும். அல்லது, தம் திருத்தொண்டரை உலக நன்மைக்கு உழைக்கத் தோற்றுவித்த பாரத மாதா, தம்முடைய தாசரைத் தம் திருப்பணியினின்று



வீண் பணிக்குட் செல்லவிடாமல் தடுத்தாட்கொண்டிருத்தல் வேண்டும்.

அங்ஙனம் ரஞ்சனர் செய்த அந்த உபந்யாசத்தினால் அவருடைய புத்திக் கூர்மையும், தேசாபிமானமும், சகோதர வாஞ்சையும் உலக முற்றும் தெற்றென விளங்கின. தேவிற் சிறந்த திருமால் உலகத்தை ஓரடியால் அளந்ததை யொப்ப, அவருடைய தாசரும் உலகத்தை அறிவென்னும் அடியால் அளந்தார். உலகம் யாவையும் தம் திருவயிற்றில் அடக்கிக் காக்கும் உம்பர் நாயகராகிய திருநாரணனைப் போலவே, அவர் தம் திருத்தொண்டரும் உலகத்தைப் புகழுடம்பால் மூடினர். பரீட்சையில் தேர்ந்தும் உத்தியோகம் பெறாமைக்கு அவர் வருந்தின ரல்லர். உடனே நீதிவாதி (பாரிஸ்டர்) தொழிலுக்குப் படிக்கத் தொடங்கினார். வல்லவருக்கு எதுதான் அரிது? செவ்வனே படித்துச் சில ஆண்டுகளுக்குள் அவர், அந்தப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார்; பாரத அன்னையைக் காண விரும்பினார்; உடனே 1893-ம் ஆண்டு இங்கிலாந்தை விட்டொழித்துப் பாரதகண்டத்தில் அடிவைத்தார். கறவையைப் பிரிந்த கன்றுபோல் வாடிய தாசர், தம் தாய் நாட்டைக் கண்டதும் இன்பக் கடலாடினர் என்று கூறவும் வேண்டுமோ? தாசர்தம் தேயபக்தியை எங்ஙனம் அளவிட்டுச் சொல்லக் கூடும்? சித்த ரஞ்சன தாசர் உலக ரஞ்சன தாசரே யல்லவா?

---

# அத்தியாயம் 4

## தாசர் பெருமான், மணமகளையும் திருமகளையும் குலமகளையும் அடைதல்

கல்கத்தாவை யடைந்ததும் சித்த ரஞ்சனர், நீதிவாதித் தொழிலை மேற்கொண்டார். அவர், அந்தத் தொழிலில் மிகத் திறமை வாய்ந்தவரெனினும், அவருடைய தந்தையினால் உண்டாகிய பழி அவரை ஒருபுறம் வாட்டிற்று; அவருடைய இளமைப் பருவம் அவரை மறுபுறம் வருத்தியது; குடும்ப பாதுகாப்புச் சுமை அவருடைய உள்ளத்தை உருக்கியது. அந்தோ பாவம்! என்ன செய்வார் ரஞ்சனர்? அவருக்குக் கல்கத்தா உயர்தர நீதி மன்றத்தில் அதிக வருமானம் கிடைத்திலது. தம் வருவாயினால் தம்முடைய பெருங் குடும்பத்தைக் காக்க அவரால் இயல வில்லை. அவருடைய வருமானக் குறைவிற்கு அவர் தந்தை நீதிமன்றக் காப்புப் பெற்றதே காரணம் போலும். அத்தகைய பெருந் துன்பங்களெல்லாம் தம்மை வாட்ட, ரஞ்சனர் அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தினா ரல்லர். அவருடைய மனம் எப்பொழுதும் தைரிய லட்சுமிக்குக் கோயிலாக அமைந்திருந்தது. இடைவிடாமல் எந்நேரமும் அவருடைய முகத்தில் வீரலட்சுமி தாண்டவ மாடிக் கொண்டிருந்தனள். தைரியத்தையும் விடா முயற்சியையும் ஒருபோதும் கைவிடாத அந்த அறிஞர், அத் துன்பங்களுக்குப் பயப்படுவாரா? கல்கத்தா உயர்தர நீதி மன்றத்தில் தமக்கு அதிக வருமானம் வாராதென்று அறிந்த



வுடனே அவர், வெளியூர் நீதிமன்றங்களுக்குச் சென்று தம் தொழிலை மிகத் திறமையுடன் நடாத்தலானார்.

"முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.
தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்."

என்னும் பொய்யாமொழிப் புலவருடைய பொருள் பொதிந்த மொழிகளுக் கிணங்க, நம் தாசருடைய முயற்சிகள் நன்கு பயன்பட்டன. "தாம் மேற்கொண்ட தொழிலைச் செய்தற்கு அருமையான தென்று நினைத்துத் தளராமல் முயற்சியோடு இருப்பவர்க்கு, அம்முயற்சியே அத்தொழிலை முடித்தற்கேற்ற பெருமையை யுண்டாக்கும். மேற்கொண்ட காரியத்தை முற்றுப்பெறச் செய்யாமல் விட்டவரை யுலகம் விட்டு நீங்கிப் போதலால், மேற்கொண்ட காரியத்தைத் தளர்ச்சி யின்றி முடித்தல் வேண்டும். எல்லார்க்கும் உபகாரஞ் செய்த லென்னும் மேம்பாடு முயற்சி யுடையாரிடம் நிலைபெற்றுளது. முயற்சி யில்லாதவனிடம் பிறர்க்கு உபகாரஞ் செய்யுந்தன்மை யொருவாற்றானும் இன்றாம். இன்பத்தை விரும்பாமல் அதற்குக் காரணமாகிய முயற்சியை விரும்புகின்றவர், தம்முடைய உறவினர் நட்பினர் முதலியோருடைய துன்பங்களை யொழிப்பர். சோம்ப லுடையவனிடம் மூதேவியும், அஃதில்லாதவனிடம் சீதேவியும் வசிப்பர். அறியவேண்டுவன வற்றை யறிந்து தொழில் செய்யாமையே யார்க்கும் பழியாம். தாம் மேற்கொண்ட தொழிலைத் தளர்வின்றி முயற்சியோடு செய்பவர், பயனை விலக்கும் ஊழ்வலியையும் விலக்குவர்" என்னும் ஆன்றோர் கட்டுரைகளை நன்கு ஓதியுணர்ந்த சித்த

ரஞ்சனர், விடாமுயற்சியுடனும், தம்முடைய முயற்சி பயன் படக்கூடிய தக்க இடங்களையும் நன்றாகக் கண்டறிந்து, உழைத்து, எதிர்பாராத அளவற்ற பயனை யடைந்தார். எல்லாம் உணர்ந்த பேரறிஞராகிய ரஞ்சனருக்கு எதுதான் கைகூடாதது? நாளடைவில் அவருடைய வருமானமும் புகழும் அளவுக்கு மீறிச் சென்றன. வெளியூர் நீதிமன்றங்களில் ஒப்புயர்வற்ற பெரிய நீதிவாதியாக விளங்கினார்.

தம்முடைய குடும்பம், வாங்கிய கடனைக் கொடுக்காத தென்பதைத் தாசர் மறந்தார் அல்லர். அப்பழி, அவருடைய உள்ளத்தை எப்பொழுதும் வாட்டிக் கொண்டே இருந்தது. குற்றமற்ற குடும்பத்தி லுதித்த அவரை அஃது ஏன் வருத்தாது? குலத்தளவே யாகும் குணம் என்று சான்றோர் உரைத்தது வீணாகுமா? எவ்வகையி லாயினும் தம் தந்தையார் பட்ட கடனைத் தீர்த்துத், தம்முடைய குடும்பம் சுமந்து நின்ற இழிந்த சொல்லை யகற்றத் துணிந்தார் ரஞ்சனர். தம் பிதாவின் பெயர் இழிவு படா வண்ணஞ் செய்யக் கருதிய அவர், நீதி மன்றத்தில் மனு கொடுத்துத், தம்முடைய தந்தைக்காகப் பிறந்திருந்த இன்சால் வெண்ட் உத்தரவை ரத்து செய்யும்படி கேட்டுக் கொண்டார். அதைக் கண்டு நியாயாதிபதிகளும் மற்றையோரும், ரஞ்சனருடைய அரிய செயலினிடமும் அற்புத குணத்தினிடமும் முறையே அளவற்ற வியப்பும் விருப்பும் அடைந்தனர். இதுவரையில் இவ்வாறு செய்தவர் நம்முலகத்தில் ஒருவரும் இலர். இங்ஙனம் பிறந்திருந்த இன்சால்வெண்டை ரத்து செய்து, தம்முடைய தந்தை பட்டிருந்த கடன்களை எல்லாம் ஏற்றுத் தீர்த்தவர் முதன் முதலில் தாசர் பெருமானே யாவர். அவர், தம் தந்தைக்குக் கடன் கொடுத்து நஷ்டப்பட்டுப் போனவர்களை



எல்லாம் வரவழைத்து, அவர்களுடைய பாத்தியங்களைப் புதுப்பித்து, அவர்களுக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுக்க முன்வந்தார். அப்பொழுது, மோகன தாசருக்குக் கடன் கொடுத்தவர்களும், கல்கத்தா மாநகரிலுள்ள மற்றைய மக்களெல்லாரும் தாசரிடம் கொண்ட அன்பிற்கு அளவும் உண்டோ? எல்லாரும் ரஞ்சனருடைய உத்தம குணத்தைப் போற்றிப் புகழ்ந்தனர்; மெச்சி உச்சிமேற் கொண்டனர்; அவரை வாயார வாழ்த்தினர்; மனமார மாட்சிமை படுத்தினர்.

மோகன தாசர் பட்ட கடன்களை எல்லாம் தீர்த்ததனால் ரஞ்சன தாசர்; புகழென்னும் மணமகளை மணந்தவரானார். உலக முற்றும் அவருடைய அற்புதச் செயல்களா லுண்டாகிய புகழ் பரவி நிரம்பியது. அவரடைந்த பெருமையை அளவிட இயலாது. மணமகளுடன் உத்தமர் என்னும் பெயரையும் பெற்றார் அவர். உறவினர் அனைவரும் அவரைப் போற்றலானார்கள்; உடன்பிறந்தோர் அவரைத் துதிக்கலானார்கள்; அன்பர்கள் அவரை வாழ்த்தலானார்கள்; அறிஞர்கள் அவரிடம் மிக்க அன்பு பாராட்டலானார்கள். ரஞ்சனருடைய அறவொழுக்கம் எல்லைக் குட்பட்டதன்று. அவ்வொழுக்கமே அவருக்குப் பின்னால் 'தேசபந்து' என்னும் உயர்ந்த பட்டப் பெயரைக் கொடுத்தது. நாளுக்கு நாள் ஒன்றன்பின் ஒன்றாக அவருடைய உயர்ந்த குணங்களெல்லாம் வெளிப்பட்டன. இதுகாறும் அவருடைய திறமையையும், புத்திக்கூர்மையையும் உயர் குணத்தையும் மறைத்து நின்ற அவருடைய தந்தையினா லுண்டாகிய பழியாம் காரிருள், இப்பொழுது முழுகலைகளுடன் பிரகாசிக்கும் கதிரவனைக் கண்டதே போலாயிற்று. இணையற்ற அவருடைய அற்புதத் திறமைகள் வெளித் தோன்றின.

சித்த ரஞ்சனர் வெளியூர் நீதிமன்றங்களில் தம்முடைய தொழிலை நடத்தி வருகிற காலத்தில் ஸ்ரீமான் சாரட் சந்திர சேன் என்னும் புகழ்பெற்ற நீதிவாதி அவருக்கு மிக்க உதவி செய்து வந்தார்.

“எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.”

என்னும் செந்நாப் புலவருடைய சீரிய மொழிக்கு மாறுபடச் சித்த ரஞ்சனர் நடப்பரோ? ஒருகாலும் அங்ஙனம் நடக்கமாட்டார் அல்லவா? ஆதலின், நம் ரஞ்சனர், தாம் இவ்வுலக வாழ்வை நீத்துப் பரமபதத்தை யடைகிறவரையில் சாரட் சந்திர சென் என்னும் பெரியாரையும், அவர் செய்த நன்றியையும் மறந்தார் அல்லர். செந்தாமரைச் செல்வியாம் திருமகளார், தம்முடைய திருவடி நீழலைத் தாசர்தம் தலைமேற்படத் திருவருள் புரிந்தார். 1897-ம் வருடம் ரஞ்சன தாசர் ஒப்புயர் வற்ற தொரு பெரிய நீதிவாதி யாயினார். அப்பொழுது, அவருடைய வருமானமும் முன்னிலும் பதின்மடங்குக் கதிகமாயிற்று. முதலில் அவர், தம்முடைய தொழிலைத் தொடங்குங்கால் வாட்டி நின்ற இடையூறுகள் இப்பொழுது எங்குச் சென்று இறந்து பட்டனவோ? அங்ஙனம் அவர் முன்னேற்றமடைதற்கும் சீமானாதற்கும் அவருடைய விடாமுயற்சியே காரணமாகும் என்பதை யாம் மற்றும் கூறவும் வேண்டுமோ? ஊக்கமுடைமை யாக்கத்திற் கழகு என்னும் அரிய பழமொழியை அனைவரும் பின்பற்றி நடத்தல் வேண்டும் என்பதை வற்புறுத்திக் கற்பித்தார் அல்லவா நம் தலைவராம் ரஞ்சனர்?

அறிவின் பெருக்கினாலும் விடாமுயற்சியினாலும் எல்லையற்ற உழைப்பினாலும் உயர்ந்த செயல்களினாலும் மணமகளை



யும் திருமகளையும் அடைந்த தாசர், “மனிதராகப் பிறந்தார் அடையும் உறுதிப்பொருள்கள் நான்கு. அவை,—அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாம். அவற்றுள், வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாதலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவ தல்லது ‘ஏனைய மூன்றையும் போல் நூல்களாற் கூறப்படுவ தல்ல. அறமெனப் பெரியோரால் கூறப்படுவன,—ஒழுக்கம், வழக்கு, தண்டம், என்பனவாம். வழக்குந் தண்டமும் நூல்களானும் உலக வழக்கானும் அறியப் படுவன வாம். ஒழுக்கமட்டுமே மக்கட்கு இன்றியமையாச் சிறப்பிற்று. அது, வருணந்தோறும் வேறுபடுதலால், பொதுவியல்பு பற்றி இல்லறம் துறவறம் என இருகூறுபடும். இல்லறமென்பது,—கற்புடை மனைவியோடு அன்பும் அருளுந்தாங்கி, விருந்து புறந்தந்து, அருந்தவர்ப்பேணி, ஐவகை வேள்வியும் ஆற்றிப், பெருநலந்துய்க்கும் பெற்றித்து. ஆதலின், இந்நிலையில் நின்றார், ‘துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் துணையாவர். இந்நிலைமையின் உயர்வை நன்கு ஆராய்ந்தே ஆன்றோர் பலரும் ‘இல்லற மல்லது நல்லற மல்ல’ எனக் கூறுவாராயினர். இத்தகைய உயர்ந்த நிலையைச் சிறிதும் இடையூறின்றி நடத்தற்கு அழகும் திருவும் நற்குணம் முதலியனவும் ஒருங்கே அமைந்த மனைவி ஒருத்தி இருக்கவேண்டியது இன்றியமையாத தாகும். மற்றும், பிள்ளைப்பேறில்லாதவர் புத்தென்னும் நரகத்தை யடையவர் என்று வேதங்கள் கூறுகின்றன. என்னுடைய முன்னோர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை எல்லாம் செவ்வனே செய்யவும், உலகத்திற்கு நன்மை புரியவும், என்னுடைய குலம் நீடித்து விளங்கவும் நற்குண நற்செயல்கள் அமைந்த குலமகள் ஒருத்தியை யான் மணக்க

வேண்டியவனு யிருக்கின்றேன் அல்லவா?" என்று தமக்குள் எண்ணி முடித்தார். அந்த 1897-ம் ஆண்டே உயர்குலத் துதித்த உத்தம குணங்கள் நிறைந்த வசந்தி தேவி என்பாரை மிக்க சிறப்புடன் மணம் புரிந்தார் ரஞ்சனர். அந்தத் திரு மணக் கோலத்தைக் கண்டவர் அனைவரும் கண்கள் பெற்ற தனு லுண்டாய பயனைப் பெற்றவராயினர்.

திருமணத்தின் பின்னர் அந்த அம்மையார், குலமகட் கழகு கொழுநனைக் காத்தல் என்பதற் கிணங்கத் தம்முடைய நாயகரிடம் மிக்க அன்பு பூண்டு, அவரைவிட்டுப் பிரியாம லிருந்தும், அவருடைய குறிப்பறிந்து ஒழுகியும், தம்முடைய வீட்டை நாடிவரும் விருந்தினரை நன்கு வரவேற்று, அவர்கள் களிக்கும் வண்ணம் உண்டி முதலியவற்றை யளித்து உபசரித் தும், எக்காலத்தும் உண்மையே பேசியும், கோபமென்னுங் கொடுங்குணத்தை முற்றிலும் பகைத்தும், பூமிதேவி என்று சொல்லத்தக்க பொறுமையைக் கைப்பிடித்தும், கற்பு என் னும் திண்மை நிலைமையி லிருந்து சிறிதும் வழுவா வண்ணம் நடந்தும், இல்லற தருமத்தைக் குறைவின்றிச் செய்தும் இன்பத்துடன் வாழ்ந்து வந்தார்.

அந்த அம்மையின் நல்லொழுக்கத்தைக் கண்ட பலரும்,

"மணமக னுடம்பு போற்ற வல்லவண்
மனைவி யேயென்
றுணர்வினர் மொழியு மாற்ற முவள்செய
லேக்கிப் போலுங்
தணவறு மண்புஞ் சாந்தத் தன்மையு
நன்மை யான
குணமுமோ ருருவங் கொண்டோர் குடிப்பிறந்
தனைய நீராள்"



என்று வியந்துகூறி மெச்சுவாராயினர். அத்தகைய உயர்ந்த குலக்கொடியை யடைந்த ரஞ்சனருக்கு இனி என்ன பாக் கியம் வேண்டி யிருக்கிறது? அவர், தம் அரிய மனைவியுடன் மிக்க இன்பத்துடன் வாழ்ந்து வருவாரானர்.

---

# அத்தியாயம் 5

## ஸ்ரீமான் அரவிந்த கோஷருடைய வழக்கின் வெற்றி

வெளியூர் நீதிமன்றங்களில் கிரிமினல் நீதிவாதியாகப் பெரும்பெயர் பெற்ற ரஞ்சனர், கல்கத்தா உயர்தர நீதிமன் றத்தில் தம்முடைய தொழிலை நடத்தலானர். அப்பொழுது, ஸ்ரீமான் குமார கிருஷ்ண டட் என்பார் ரஞ்சனருக்கு மிக்க உதவிசெய்து வந்தார். சூர் ஆரிய ஜமீன்தாரி வழக்கில் தாச ருடைய வாக்கு வன்மை நன்கு வெளிப்பட்டது. அதைக் கண்டு எண்ணிறந்த நீதிவாதிகள் திகைத்தார்கள். புகழ் பெற்ற நீதிவாதிகள் பலர் அவருடைய நட்பை நாடினார்கள்.

1908-ஆல் அலிப்பூர் பாம் வழக்கில் பாபு அரவிந்த கோஷ் மீது அரசாங்கத்தார் வழக்குத் தொடுத்தனர். அலிப் பூர் மாஜிஸ்டிரேட்டின் முன்னர் அவ்வழக்கின் விசாரணை தொடங்கிற்று. அதுசமயம், சித்த ரஞ்சனர் இருந்த இடம் தெரிய வில்லை. அரவிந்தருக்காக ரஞ்சனர் தோன்றினர் அல்லர். அரவிந்தருக்காகத் தோன்றிய வக்கில்களின் பெயர்களைப் பத்திரிகைகள் விடாமல் வெளியிட்டன. ஆனால்,

சித்த ரஞ்சனருடைய பெயரோ ஒரு பத்திரிகையிலும் ஒருவரும் கண்டி ரல்லர். இஃது அனைவருக்கும் வியப்பை யீந்தது. கல்கத்தாவிலுள்ள நீதிவாதிகளுள் ஒருவரும் அரவிந்தரை யறிந்தவ ரல்லர். ரஞ்சனரைப்போல் அரவிந்தருடன் நெருங்கிப் பழகியவர் ஒருவரும் இரார். எனினும் ரஞ்சன தாசர், அரவிந்தருக்காயினும், தம்முடைய சோதரருக்காயினும் தோன்றாம லிருந்தது மிக்க வியப்பாகவே இருந்தது. அரவிந்தர் மீது அரசாங்கத்தார் வழக்குத் தொடுத்தைப்பற்றி ரஞ்சனர் மிகவும் வருந்தினார். நீதிமன்றத்துள் அரவிந்தரும், தம்முடைய சோதரரும் படும்பாடு ரஞ்சன தாசருடைய உள்ளத்தை யுருக்கிற்று.

ரஞ்சனர் எதிர்பார்த்து நின்ற நாளும் வந்தது. அரவிந்தருக்காக அவர் அமர்த்தப்பட்டார். ரஞ்சனர் அரவிந்தருக்காகப் பாடுபட்டதைப் போல் எந்த நியாயவாதியும் எப்பொழுதும் பாடு பட்டிரார். சுமார் பத்துமாதங்கள் வரையில் இந்த வழக்கு நடந்ததெனினும், ரஞ்சனர் மிக்க பணம் பெற்றார் அல்லர். எவ்வகையிலாயினும் குற்றமற்ற தம்முடைய நண்பரை மீட்க அவர், இரவும் பகலும் பாடுபட்டார். வழக்கு நடந்த காலத்தில் ரஞ்சனர், ஒரு நாளாகிலும் இரவு இரண்டு மணிக்கு முன்னர் உறங்கியிலர். அந்தப் பெரும்பாட்டின் பயனாக அரவிந்தருடைய பெருமையும் மாசற்ற வாழ்வும் வெளிப்பட்டன. அப்பொழுது, தம்முடைய குடும்பத்தைக் காக்க ரஞ்சனர் சிறிதளவு கடன் பட்டாரெனினும், அவருடைய முயற்சி வீணாகப் போக வில்லை. அரவிந்தர் விடுதலை யடைந்தார். ரஞ்சனர், தாம் மேற்கொண்ட பெருமுயற்சிக்காகக் கொஞ்சம் பணமே பெற்றார். ஆயினும், அவர் மிக்க திருப்தி யடைந்தார். அரவிந்தகோஷருடைய வழக்கு



ரஞ்சன தாசருடைய நீதிவாதித் திறமையை நன்கு விளக்கிச் சென்றது; அவருடைய புகழைப் பெருக்கியது; அரவிந்தருடைய நட்பை உறுதிப்படுத்தியது; ரஞ்சனருடைய ஏராளமான வருமானத்திற்கும் மூலகாரணமாய் நின்றது.

அரவிந்த கோஷர் விடுதலை யடைந்த பின்னர் ரஞ்சனர், பல பெரிய வழக்குகளில் தோன்றினார். அவருடைய வருமானம் நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டது. நாகப்பூர் ஹோம்ரூல் சபையின் காரியதரிசியாகிய ஸ்ரீமான் வைத்தியர் மீது தொடர்ந்த ராஜீய வழக்கில் ரஞ்சன தாசர் ஆஜராகி, அப்பீலில் வைத்தியரை விடுதலை யடையச் செய்தார். பர்மாவில் டாக்டர் மேட்டாவின் மீது தேச பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டபோது நீதிபானுவாகிய தாசர், டாக்டர் மேட்டாவுக்காகத் தோன்றி வெற்றி பெற்றார். ரஞ்சனருடைய நீதிவாதித் திறமையை, ஒத்துழையாமையைப்பற்றி அவர், தம்முடைய நீதிவாதித் தொழிலைத் துறந்தபோது தளவாட சம்பந்தமாகத் தோன்றிய வழக்கில் அரசாங்கத்தார் பக்கமாக அவரை அமர்த்தப்பட்டதிலிருந்தே நன்கு அறியலாம். அவர் தோன்றி வெற்றி பெற்ற பெரிய பல வழக்குகளைப்பற்றி யெழுதப்புகின் ஏடுகள் கணக்கின்றி வளரும். பல கூறுவானேன்? சில நாட்களுக்கு முன்பு நடந்த பாவ்லா கொலை வழக்கில் அவருடைய உதவியை நாடினார்கள் என்று வழங்கியதிலிருந்தே அவருடைய ஒப்பற்ற திறமையும் பெருமையும் சொல்லாமலே அனைவர்க்கும் விளங்கு மல்லவா? பாபு சித்த ரஞ்சன தாசருடைய திறமையை யறியாதார் இவ்வுலகில் ஒருவரும் இரார். அத்தகைய திறமை வாய்ந்த அவர் ஏராளமான வருமானம் பெற்றார் என்பது கூறாமலே பலரும் அறிவர்.

# அத்தியாயம் 6

## கலியுக கர்ணன்

"கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக."

கற்பதனாலாய பயன் கற்றவாறு நிற்றலே யாகும். கல்வி ஞானம் நிரம்பப் பெற்ற சித்த ரஞ்சனர், ஆன்ம உணர்ச்சியும் நிரம்பப் பெற்றவர்; மன்னுயிரைத் தம்முயிர்போல் மதிப்பவர். தம்முடைய கல்விப் பயனால் அவர், தம் நலம் நாடிப் பொருள் திரட்டித் தம்முடைய சொந்த சுகபோக வாழ்வில் தோய்ந்து கிடந்தார் அல்லர்; மண் பெண் பொன் ஆகிய மூவ்வாசைகளையும் துறந்தே தூய ஞானியாக விளங்கி யிருந்தார்; தம்முடைய உடல் பொருள் ஆவி மூன்றையும் பாரத உலகத்திற்கே உரிமை யாக்கி வைத்திருந்தார். தம்முடைய இந்து சகோதரர்கள், பாரத மாதாவின் அருஞ் சுதர்கள் பலர் வறுமைப் பிணியால் வாடி, உண்டியும் உடையும் வீடும் இல்லாம லிருப்பதைக் கண்டு, மனம் வெதும்பி, இரக்கங்கொண்டார் அவர்; ஏழைமக்கள் வாடிநிற்கத் தாம் சுகித்திருத்தல் தருமமல்ல வென்று எண்ணினார். அவரல்லவா பாரத மாதாவின் உண்மைப் புதல்வர்? அவர், தம்முடைய வாழ்வை ஏழை மக்களுக்குப் பயன் படுத்தி நிற்றலே தம்முடைய கடமை என்று எண்ணித் தீர்மானித்தார். இஃதன்றோ கற்றதன் பயன்? ஏழைகளுடைய ஆற்றொணாத் துயரங்கள் தம்முடைய மனத்தைக் கரைக்கவே அவர், அவர்களுடைய துன்ப நிலைமை



களைப் பண் படுத்த முன்வந்தார்; தம்முடைய கணக்கற்ற வருமானத்தைக்கொண்டு ஏழைகளுடைய துயரங்களைக் களைய முயன்றார்; எண்ண முடியாத பொருளைச் செலவழித்து அவ்வாறே செய்து முடித்தார்.

சித்த ரஞ்சனர், தம்முடைய தந்தையைப் போலவே கருணைமிக்கவர்; பிறர் வருந்தக்கண்டு பெரிதும் வருந்துபவர்; பிறர் மகிழப் பார்த்து மகிழ்பவர். அவர் ஏராளமான வருமானம்பெற்று வந்தாரெனினும், அவ்வருமானத்தில் முக்காற் பங்குக்குமேல் ஏழைகளுக்கே உதவி வந்தார். மாதந்தோறும் ஐம்பதினாயிரம் ரூபாய்க்குமேல் பணம் சம்பாதித்து வந்தார். அவ்வளவு பொருள் சம்பாதித்து வந்த அப்பெரியார், தம்முடைய இறுதிக்காலத்திற் பயன்பட யாதேனும் வருவாய் ஏற்படுத்தி வைத்துக்கொண்டாரா? ஒன்றும் இல்லை. வருவாயுள் கால் வழங்கி வாழ்தல் என்னும் ஆன்றோர் விதித்த அளவும் தாசரிடம் வெட்க மடைந்தது. அவர் தேடிய பொருள் முழுவதையும் சன்மார்க்கத்திலேயே செலவழித்தார். எத்தனையோ மாணவர்கள் அவருடைய பொருளால் கல்விச் செல்வத்தைப் பெற்றார்கள். கணக்கிட இயலாத எத்தனையோ ஏழைக்குடும்பங்கள் அவருடைய ஆதரவின்கீழ் இருந்து வந்தன. எத்தனையோ நண்பர்கள், எத்தனையோ வியாபாரிகள் அவருடைய பொருளின் உதவியால் எல்லையற்ற பொருளைப் பெற்று வாழ்கின்றார்கள். பொதுஜன நன்மைக்கு எவ்வளவோ பொருள் வழங்கி யுள்ளார்.

மன்னுயிரைத் தம்முயிரேபோல் மதிக்கும் பெருந்தகையராகிய ரஞ்சனர், தாம் ஈட்டிய பொருளை யெல்லாம் தம்முடைய ஒரேபுதல்வருக்குச் சேமித்து வைத்திருந்தால், இப்பொழுது

அந்தப் புதல்வரைவிட உயர்ந்த சீமான் இவ்வுலகில் எவனேனும் உளனோ? ரஞ்சனர் அறவழியில் தேடிய பொருளது; எனினும், அப்பொருளைச் சேமித்து வைக்க அவருக்கு எண்ணமுண்டாக வில்லை. பிறர்க்குதவவே அவர் அவ்வளவு பொருள் சம்பாதித்தார் போலும். பிறர்க்காகவே அவர், தம் ஆயுட்காலம் வரையில் உழைத்து வந்தார்; பிறர் நலம் நாடியே தம் நலம் விடுத்தார்.

தம்முடைய நாட்டிற்காகப் பொன்னையும் கொடுத்தார் ரஞ்சனர்; பொருளையும் விடுத்தார்; சுகபோகங்களையும் மறுத்தார்; கடைசியில் தம்முடைய இல்லத்தையும் கொடுத்தார். என்னே! இரவலர்க்கு இல்லை யென்று சொல்லி யறியா இறைவனும் நம் சித்த ரஞ்சனரை நாம் என்னென்று கூறி யழைப்பது? கலியுக கர்ணன் என்னும் பெயர் அவருக்குப் பொருத்தமா யிருக்குமா? கர்ணன், தானே வருந்திச் சம்பாதித்து வழங்கினன் அல்லன். ரஞ்சனரோ மிகவருந்திப் பொருள் தேடி, வழங்கி வள்ளலானர். இக்காலத்துப் பெரியோர் பலர் நம் சித்த ரஞ்சன தாசரைக் கலியுக கர்ணன் என்று அழைப்பதால், நாமும் அவரை அங்ஙனமே அழைக்கலாயினம். எண்ணிறந்த வள்ளல்களை ஈன்றெடுத்த நம் நன்னடு, தன்னுடைய பெருமை குன்றாம லிருக்க இக்கலி காலத்திலும் ரஞ்சன தாசராம் அற்புத வள்ளலை ஈன்றது போலும். பெரும் புகழையும் சிறப்பையும் அடைந்து நம் நூல்களிற் காணப்படும் மூவேழு வள்ளல்களும், ரஞ்சனருடைய வள்ளல் தன்மையைக் கண்டால் வெட்கி யோடுவார்களே. அவர்களுள் ஒருவரும் நம் தாசரைப்போல் வருந்தி யுழைத்து, வழங்கி யிருக்க மாட்டார்.



நம் தாசர்பெருமானுடைய ஆன்ம உணர்ச்சியின் அழகு தான் என்னே! அறம் தேய்ந்து மறம் ஓங்கி நின்றிடும் இக் காலத்தில் இத்தகைய ஆன்ம உணர்ச்சியுடன் கூடியவர் நம் நாட்டு நாயகமா மணியாகிய சித்த ரஞ்சன தாசர் ஒருவரே யாவர். உயர்வற விளங்கும் ஆன்ம உணர்ச்சி பெற்றிருந்த அப்பெரும் வள்ளல், கருணைக் களஞ்சியம், கல்கத்தாவின் கற்பகம், மானிட வடிவங்கொண்ட தெய்வ மெனினும் பொருந்தா தென்செயும்?

---

# அத்தியாயம் 7

## சமயஞானம்

எந்நாட்டினரும் வியக்கும் பேரறிவு படைத்த நம் நாட்டுப் பெருமானாகிய சித்த ரஞ்சனருடைய சமய ஞானத்தின் பற்றும், தெய்வ வழிபாடும் நம்மால் அளவிட்டுச் சொல்லற் பாலனவோ? அப்புனிதர் வைணவ மதத்தினர். அவருடைய தந்தை, பிரமசமாஜத்தைச் சேர்ந்து, அதன் அபிவிருத்திக்காக மிகவும் உழைத்தவர். சித்த ரஞ்சனர், பிரம சமாஜத்தின் காரண கர்த்தாவாகிய ராஜாராம் மோகன ராயரிடம் மிக்க அன்புடையவர்; எனினும், பிரமசமாஜம் மேனாட்டு நாகரிகத் தடபுடலுடன் கூடியிருப்பதைக் கண்டு அவர்; அதனிடம் தம் தந்தையைப் போல் அவ்வளவு பற்றுவைத்தார் அல்லர். இக்காரணம் பற்றியே ரஞ்சனர், சுவாமி சைதன்யருடைய மடத்தைச் சாரலாயினர். ஆதியந்த மிலா அமலனும் திருநாரணன் அழகிய உருவுடன் எல்லாப் பொருள்

களிலும் எள்ளுக்குள் எண்ணெய்போல் நிறைந்து மறைந்து பொலிகின்றனன் என்பதே ரஞ்சனருடைய துணிபு. ஆ! இக்கொள்கையைத் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டிய பிரகலாத ஆழ்வானுடைய நுண்ணறிவிற்கும் ரஞ்சனருடைய புத்திக் கூர்மைக்கும் யாதேனும் வேறுபாடுளதோ? தேவிற்சிறந்த திருமாலிடம் நம் சித்த ரஞ்சனர் கொண்டிருந்த அன்பின் பெருக்கை இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. அவர், பக்தனாகவே பிறந்தவர்; பக்தியென்னும் கயிற்றால் பரமன் கட்டுண்பான் என்று உணர்ந்தவர்; பக்தி மார்க்கமே முத்திக்குக் காரணமாகும் என்று ஆராய்ந்து அறிந்தவர்; எந்நேரமும் நாராயண நாம பாராயணப் பிரியர்; எப்பொழுதும்,

(முன்னிலைப் பாவல்.)

1. "வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி
கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத்தே.

2. அறுபொரு ளிவனென்றே யமரர்கணந் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே
உண்டவாய் களவினா னுறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே.

3. திரண்டமரர் தொழுதேத்துந் திருமானின் செங்கமல
இரண்டடியான் மூவுலகு மிருடீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே.



(படர்க்கைப் பாவல்.)

1. மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே.

2. பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணுந்
திருவடியுங் கையுந் திருவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே.

3. மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பா னாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராய ணாவென்னா நாவென்ன நாவே."

என்பதற் கிணங்கச் சொல்லி, முன்னிலையிலும் படர்க்கையிலும் பரவிப்பாடித் துதித்து வழிபடுவார்.

வைணவ சமயத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலும், வைணவத்தின் பெருமையை யறிந்து ஆனந்தித் திருப்பதிலும், வைணவ மதத்தின் பெருமைகளைப் பிறர்க் கெடுத்துச் சொல்லுவதிலும், வைணவ கிரந்தங்களை வசன நூல்களாக இயற்றுவதிலும் ரஞ்சனர் மிக்க பற்றும் இன்பமும் உடையவர். அவரால் இயற்றப்பட்ட 'சாகர சங்கீதம்' என்னும் பெயருடைய கீர்த்தனாசாகரம், அவருடைய மெய்ப்பக்தியையுங் கவித்திறமையையும் நன்கு விளக்கும். ரஞ்சனர் அத்-

தகைய பாட்டுக்களை யியற்றியதன் காரணம் பக்தியே யாகும். ஊற்று நீர்போலும் அவருடைய உள்ளத்தில் நாடோறும் ஊறிக்கொண்டிருந்த பக்தி யென்னும் அமிருதம், அவருடைய பாட்டுக்களாம் வாய்க்கால்களின் வழியே வெளிப் போந்தன. பண்பிற் சிறந்த ரஞ்சன தாசர் விஷ்ணுவைத் தொழுபவ ராயினும், பிறமதங்களைத் தூஷிக்கக் கனவிலும் கருதாதவர். விஷ்ணு பக்தியே வீடுபேற்றிற்கு முதன்மை யான தென்பதே அவருடைய மன வுறுதி யாகும்.

# அத்தியாயம் 8

## தாய்ப்பாஷாபிமானமும், பாண்டியத்தியமும்

ரஞ்சனர், வயிற்றுக் கல்வியாம் மேனாட்டுக் கல்வியுடன் நின்றார் அல்லர். அவர், தம்முடைய தாய்ப்பாஷையின் அழகையும் பெருமையையும் நன்றாக அறிந்தவர். தாய் நாட்டினிடம் மெய்ப்பக்தி யுடையவரான அவர், தம்முடைய தாய் மொழியினிடம் அன்பின்றி யிருப்பரோ? புல்லறிவினர் அல்லவா உள் சுவரிருக்கப் புறஞ்சுவர் கோலம் செய்வார் போலத் தம் தாய்மொழியை யொதுக்கிப் பிறமொழிகளைப் பயின்று பேதைகளா யிருப்பர்?

சித்த ரஞ்சனர், தம் தாய்மொழியாகிய வங்கமொழியைப் பயின்று, அப்பாஷையிற் பாட்டுக்கள் இயற்ற வல்ல நல்ல புலமை பெற்றிருந்தார். அவர், வங்கமொழி இலக்கியத் துறையில் 1894-ம் ஆண்டு தம்முடைய அறிவைச் செலுத்தி



னார்; செவ்வனே படித்து நல்ல பாண்டியத்திய மடைந்தனர்; தம்முடைய தாய்ப்பாஷையிற் கவிகள் இயற்றுவதில் அவர் எல்லையற்ற வன்மை பெற்றார். 1894-95-ம் வருஷத்தில் அப்புலவர்பெருமான் 'மலஞ்சா' என்னும் ஒரு நூற்கோவையை வெளியிட்டார். ஆயினும், தம்முடைய விருப்பத்திற் கிணங்க அவர், எப்பொழுதும் இலக்கியத் துறையில் தம் நாட்டத்தை வைத்தார் அல்லர்; தம்முடைய தந்தை சுமந்து நின்ற பழியைப் போக்க இரவும் பகலும் நீதிவாதித் தொழிலில் மிகவும் வருந்தி யுழைத்தார். தாம் ஏற்றுக்கொண்ட தம் தந்தையார் பட்ட கடன் கழிந்தவுடன் மீண்டும் அவர், 1915-ம் ஆண்டு இலக்கிய இலக்கண ஆராய்ச்சியில் தம்முடைய புத்தியைச் சிறிதளவு செலுத்தத் தொடங்கினார். அவ்வருஷத்திலேயே 'நாராயணா' என்ற ஒரு வங்கமொழி மாதப் பத்திரிகையை வெளியிடலானார். மகாமகோபாத்யாய ஹரபிரசாத் சாஸ்திரியார், விபின சந்திரபாலர் முதலிய அறிஞர் பலர் எழுதிய பல கட்டுரைகளுடன் அப்பத்திரிகை வெளிவந்து உலாவிற்று.

பெரும்புலவர் குலத்துதித்த ரஞ்சனர் கவிபாடும் திறமையுடன் விளங்கியது வியப்பாமோ? முற்கூறிய 'மலஞ்சா' என்னும் வங்காளக் கவிமணி மாலையுடன் அவர் நின்றார் அல்லர்; 1895-ம் ஆண்டிற்கும் 1915-ம் வருடத்திற்கும் இடையில் 'மாலா' 'அந்தர்யாமி' 'கிஷோர் கிஷோரி' 'சாகரசங்கீத்' முதலிய அரிய கவிமணி மாலைகளை வெளியிட்டார். இவற்றுள் முதன்மூன்று புத்தகங்களும் வைணவச் சமய சாரங்களுடன் பொலிகின்றன. சாகர சங்கீதம்,—பாற்கடலின் பெருமையையும், அக்கடலில் ஆயிரவாய்ப் பாம்பணையின்மேல் அறிதுயில் இனிதமர்ந்த திருநாராயணனுடைய உயர்வையும்

விளக்குகின்றது. அரவிந்த கோஷர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ள அந்தச் சாகர சங்கீதமே நம் உள்ளங்களை உருக்குகின்ற தென்றால், இன்னும், ரஞ்சனர் வங்காள பாஷையில் இயற்றியுள்ள முதல் நூலையே ஓதுவோமாயின் நம் உள்ளங்கள் என்ன பாடு படுமோ?

“புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனா—நலமிக்க
பூம்புன லூர பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின கால்”

என்று மூதறிஞர் சொல்லும் வண்ணம் ரஞ்சனருடைய பாண்டியத்தியமும் கவித்திறமையும் வல்ல புலவர்களே நன்கு அறிவர். பேதைமக்கள் அவருடைய புலமையை எங்ஙனம் அறியக்கூடும்?

---

# அத்தியாயம் 9

## தேசபக்தியே தெய்வ வழிபாடு

தெய்வ பக்திக்கும் இராஜ பக்திக்கும் துணைக்காரணம் தேசபக்தியே யாகும். சித்த ரஞ்சனருடைய தேசபக்தி மாசற்றது. தெய்வ பக்திக்கும் அரச பக்திக்கும் தேச பக்தியே அடிப்படை என்பதை அவர் முதலிலேயே நன்கு ஆராய்ந்து அறிந்தார்; பாரத மாதாவினிடம் உண்மைப்பக்தி கொண்டார்; அந்த அன்னையின் பொருட்டுப் பெருமுயற்சியுடன் உழைத்துப் பெருமை பெற்றார்.



“குழந்தைப் பிராயத்தி லிருந்தே யான், என்னுடைய தாய் நாட்டை என் முழுமனத்துடன் நேசித்து வருகிறேன். என் முதுமைப் பிராயத்திலும், எண்ணிறந்த குறைகள் வந்தடைந்த காலத்திலும், வன்மையற்ற காலத்திலும், ஆன்ம உணர்ச்சியின் வறுமையிலும் யான் அவ்வாறே என் தாய் நாட்டைக் காதலித்து வருகிறேன். பாரத மாதாவின் உருவத்தை என்னுடைய மார்பகத்தில் மிக்க அழகுடன் விளங்க எப்பொழுதும் மிக்க அன்புடன் வைத்துள்ளேன். இப்பொழுது,—என்னுடைய முதுமைப் பிராயத்தில் அவ்வுருவம், என்றுமில்லா உண்மை யுருவுடனும் மாசில்லாத் தன்மை யுடனும் விளங்குகின்றது” என்று ரஞ்சன தாசர் சில ஆண்டுகளுக்கு முன்னர் கூறியிருப்பதை நன்கு ஆராய்ந்து பாருங்கள். அவர் பாரத மாதாவினிடம் கொண்ட பேரன்பின் பொருமை தெற்றென விளங்கும். தாசருடைய தம் நலங் கருதாத் தன்மைக்கு ஈடும் எடுப்புமற்ற அவருடைய தேசபக்தியே ஏதுவாகும். அவர் பொன்னைக் கொடுத்ததற்கும், பொருளை விடுத்ததற்கும், சுகபோகங்கள் முதலியவற்றை யெல்லாம் துறந்ததற்கும் மூலகாரணம், அவர் பாரத மாதாவினிடம் கொண்டிருந்த அன்பின் பெருக்கே யாகும்.

“ஆசாரியாரயர், தேசபக்தி யன்றி வேறொன்றினையும் நம்புதற் கில்லை யென்று கூறியுள்ளார். வாசாஞானமாகக் கூறும் தேசபக்தியில் யான் நம்பிக்கை வைத்தவ னல்லன். கடவுளிடம் அன்பு பாராட்ட உதவி புரியாதவைகளை யான் நம்புகின்றவன் அல்லன். அப்பெருமானது பெருமையுடன் பொலிவதே ஒருவனுடைய தாய் நாடாகும். நாம் வங்காளத்திற்கு உண்மையை யறிவுறுத்துங்காலும், இந்திய தேயத்திற்கு உண்மையை எடுத்துரைக்கும் போதும் எல்லாம் வல்ல இறை

வனது பேரழகு நம்முடைய உள்ளங்களி லிருந்தும் பொங்கி விழும்.

தேசபக்தி யென்றால் என்னவென்று எனக்குத் தெரிய வில்லை. நான், ஒரு தேசபக்தன் அல்லன். ஒரு நாட்டார் மற்றொரு நாட்டினரைக் கொன்றிடுமாறும், கெடுத்திடுமாறும், அழித்திடுமாறும் தூண்டுகின்ற அத்தகைய தேசபக்தியை யான் மதிப்பவன் அல்லன். அத்தகைய தேசபக்தியை நம் இந்திய தேசம் ஒரு காலத்தும் அறிந்த தன்று. திருநாரணனுடைய திருவிளையாடல்களை மறவாதிருக்க நம் இந்தியர்களை யான் வேண்டுகின்றேன். பாராளும் மன்றம் (பார்லியமெண்ட்) முதலியவைகளில் உயர்ந்த நிலைமையைப் பெற்று விளங்க யான் விரும்புகின்றவ னல்லன். வியாபாரத்தில் முதிர்ச்சிபெற்று விளங்கவும் எனக்கு விருப்ப மில்லை.

நான் நானாகவே இருக்க விரும்புகிறேன். நம் நாட்டிலுதித்தவர் நம் நாட்டினராகவேஇருக்க வேண்டுகிறேன். எனக்கு என்ன வேண்டு மென்று சிலர் என்னைக் கேட்கின்றனர். நம் நாட்டினர் முன்னேற்ற மடைதற்குரிய வழியை நான் கட்டளையிட எனக்கு விருப்ப மில்லை. அஃது ஒருவராலும் செய்ய இயலாத காரியம். அதைக் கடவுளே அறிவர். ஒருவழி வேண்டுபவர்களுக்கு; அஃது எனக்குத் தெரியாதென்றே நான் கூறுவேன். தேசபக்தி யென்று நீங்கள் அழைப்பதுஞ்சரி; சுயராஜ்ய மென்று நீங்கள் சொல்லுவதுஞ் சரி; உரிமையையளிக்கும் வழியை நாம் கண்டறிய வேண்டும். அதுவே நம்முடைய கடமை யாகும். சுயராஜ்யம் கிடைக்கிறது; விரைவில் கிடைக்கிறது" என்று சித்த ரஞ்சனர், சிறைச்சாலையை நீத்து வந்தவுடன் கல்கத்தா மாணவர்களிடம் கூறிய மொழிகளி லிருந்தே அவர் கொண்டிருந்த தேசபக்தியின் தன்மை நன்கு வெளிப்படும்.



"நம் நாட்டினர் ஒவ்வொருவரும், 'என்னுடைய நாட்டை நான் நேசிக்கிறேன். என்னுடைய உரிமையை நான் காதலிக்கிறேன்' என்று கூறிடக் கடமைபட்டிருக்கின்றனர். அவ்வாறு கூறுதல் நியாயவிரோதமாக இருப்பின் நான் குற்றமுள்ளவ னென்றே ஒத்துக்கொள்கிறேன். அங்ஙனம் கூறுதல் நியாய விரோதமாக இருப்பின், அக்குற்றத்திற்காக என்னைத் தூக்கிலிடினும் எனக்குச் சம்மதமே. ஏனெனில்,—நம்முடைய கடமைகளைச் செய்வதினின்று தயங்கி யிருப்பதினும் உயிரை யிழப்பதே நலமென நான் அறிவேன். தற்காலம் இந்தியர்களுள் ஒவ்வொருவரும் செய்தற்குரிய கடமை அஃதொன்றே யாகும்." என்று ரஞ்சன தாசர், கல்கத்தா நகர பரிபாலன சபையிற் செய்த உபந்யாசத்திற் கூறியதை யுற்று நோக்குங்கள். உண்மையான தேசபக்தியின், குற்றமற்ற தேயபக்தியின் இயல்பு தெற்றென விளங்கும்.

பாரத அன்னை கைத்தளையுடனும், கால்விலங்குடனும், உரிமையையும் உயர் பதவியையும் இழந்து நிற்றலைக் கண்டு பெரிதும் வருந்தியவர் சித்த ரஞ்சன தாசரே யாவர். அன்னையின் கைத்தளையையும் கால்விலங்கினையும் தறித்தெறிந்து, அவளுடைய உயர்ந்த நிலைமையை மீண்டும் அவள் பெறுமாறு செய்து, அவளுடைய உரிமையை யளிக்கப் போர்புரிவதே மெய்யான தேயபக்தி யாகும் என்பதை அவர் செவ்வனே அறிந்தார். அன்னையின் உருவம் அவர் முன் என்றும் நின்றது. அன்னையின் திருமுன்னர் அவர் எப்பொழுதும் தொண்டராகவே விளங்கினார். பாரத மாதா மெலிந்து, வாடி, மாசடைந்து, பொலி விழந்து, தலைவிரி கோலமாய்க் கண்ணீர்

உகுத்து, உள்ளமுருகி நின்றிடும் பரிதாபகரமான உருவம், எப்பொழுதும் நம் ரஞ்சன தாசருடைய கண்களின் முன்பு நின்றது. அத்தகைய நிலைமையி லிருக்கும் அன்னையைப் பார்க்குந்தோறும் ரஞ்சனருடைய மனம் பதை பதைத்தது; அவருடைய உள்ளம் உருகிற்று; கண்களி லிருந்து நீர் வடியலாயிற்று. அந்த அன்னையினிடம் அவருக்குப் பக்தி மிகுந்தது. பாரதமாதா விழுந்த உயர்ந்த நிலைமையை மீண்டும் பெறுதற்காக அவர், தம்முடைய உயிரையும் இழக்க அஞ்சினார் அல்லர். அன்னை, தன்னுடைய உரிமையைப் பெறுமாறு செய்வதே தம்முடைய கடமை யென்று அவர் உணர்ந்தார்; அவ்வுரிமையை யடைதற்குரிய வழிகளைக் கண்டறிந்து, அவ்வழிகளிற் சென்று பெரு முயற்சியுடன் இடைவிடாமல் உழைத்தார்; எல்லா நாட்டினரும் மெச்சி உச்சிமேற்கொள்ளும் பெரும்புகழை யடைந்தார்; உண்மைத் தேசபக்தர் என்றும் தேசபந்து என்றும் உலகினர் அனைவராலும் அழைக்கப்பட்டார்.

நேயர்காள்! இஃதன்றோ உண்மையான தேசபக்தி? தேசபக்தர் என்னும் பெயரும், தேசபந்து என்னும் அரிய பட்டப்பெயரும் நம்முடைய தலைவர் சித்த ரஞ்சனதாசர் ஒருவருக்கே பொருந்தும். தேயத்திற்காகத் தம்முடைய உயிரையும் கொடுக்கத் துணிந்த அந்த உத்தம ரல்லவோ உண்மையான தேயபக்தர் ஆவர்? அங்ஙனம் தேசபக்தர், தேசபந்து என்று நம் நாட்டுப் பக்தசிரோமணியாம் சித்த ரஞ்சனரை அழைத்த நம்முடைய நாக்குகளால் எங்ஙனம் கூசாமல், தேசபக்தர் தேசபக்தர் என்னும் போலிப்பெயருடன் புறத்தே தோன்றித் தம் நலங்கருதித் திருட்டு வழிகளிற் பொருளைத் தேடும் தூர்த்தரை, பொய்யாளரை, போலிமக்களை, பேதை



களை, பெரும்புரட்டரைத் தேசபக்தர் என்று அழைக்கலாம்? இத்தகைய கொடிய மாக்கள் ஏன் தேசபக்தர் என்று முன்னுக்கு வரவேண்டும்? இவர்களுடைய செயலின் திறமைகளை உலகம் அறியாதா? வெட்கம்! பெரிதும் வெட்கம்!! தானே கடவுளென்று சொல்லிக் கர்வங்கொண்டிருந்த இரணியனைத் தூணினின்று தோன்றிய நரகேசரி கொன்றதைப் போல் வங்காளச் சிங்கமாம் தேசபந்து சித்த ரஞ்சன தாசருடைய பெயரே, போலித் தேசபக்தருடைய பெயரையும் பெருமையையும் அழித்திடும்.

"நாட்டின் நன்மைக்குச் செய்யும் தொண்டே எந்நாட்டையும் தம் திருவயிற்றில் அடக்கிய நாரணனுக்குச் செய்யும் தொண்டாகும். பொறுமை மிக்க பிராட்டியின் சேவையே பெருமை மிக்க பெருமாளுடைய சேவைக்கு வழியாகும்" என்னும் உண்மைகளை யறிந்து உழைத்தவர் ரஞ்சன தாசரே யாவர். தேச சேவையே தெய்வ வழிபாடு என்று நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனி யெனப் பல வழிகளிலும் விளக்கிக் காட்டிய நல்லாசிரியராம் நம் தாசர் பெருமகனுக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய வல்லோம்? அந்த ஆண்டகையின் அரிய செயல்களுக்குக் கைம்மாறு செய்ய இவ்வுலகில் யாதுளது? ஆயினும், அவருடைய அரிய செயல்கள் நம் நாட்டிற்குப் பெரும்பயனை அளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை வணங்குவதுடன், அவர் உழைப்பைப் பின்பற்றித் தேசபக்தியே தெய்வ வழிபாடு என்னும் கொள்கையை மேற்கொண்டு பாரதமாதாவின் உண்மை மக்களாக விளங்குவோமாயின், ஓரோ வழியில் நாம், அவருக்குக் கைம்மாறு செய்தவராவோம்.

# அத்தியாயம் 10

## அரசியல் சீர்திருத்தத்திற்காக உழைத்தல்

சித்த ரஞ்சன தாசரை அரசியல் துறையில் தலையிட்டு உழைக்குமாறு செய்தது 1917-ம் வருடம் ஆகஸ்டுமீ 20உ யின் பிரசித்தமே யாகும். அவர், அரசியல் துறையிற் சென்று உழைத்ததன் காரணம், அவர் கொண்டிருந்த தேயபக்தியின் பெருக்கே என்பது சொல்லாமலே விளங்கும். 1917-ம் ஆண்டே ரஞ்சனர் அரசியல் துறையில் நுழைந்தாரெனின், அதுகாறும் அவர் அரசியலில் பற்றற்று இருந்தார் என்று கொள்ளலாகாது. இந்திய நாட்டினருள் எல்லா இந்திய மகா நாடு தோன்றிய காலம்முதற் கல்வி ஞானம் பெற்ற இந்திய ரொருவரும், இந்திய அரசியல் துறையில் பற்றற்று இருந்தார் அல்லர். இங்கிலாந்தில் தாதாபாய் நௌரோஜிக்காகப் பல் வேறு இடங்களில் அரிய பிரசங்கங்கள் பல செய்தவரும், ஜான் மக்களீன் துரை அவர்களுக்கு உண்மையை யறிவுறுத்தியவருமாகிய ரஞ்சனர், இந்தியாவின் அரசியலில் சம்பந்த மின்றி யிருந்தா ரல்லர். அன்று தொட்டே ரஞ்சனர், இந்திய சுய அரசாட்சியின் வளர்ச்சியிலும், இந்திய மகா நாட்டிலும், மற்றும், பல மாகாணச் சங்கங்களிலும் மிக்க பற்றுடன் நின்றார். எனினும், அவர் தம்முடைய உடல் பொருள் ஆவி யாகிய மூன்றையும் பாரத மாதாவின் உழைப்பிற்கே உரிமை யாக்கி, வேறு எதையும் பொருட்படுத்தாமல் அன்னையின் அருந்தொண்டிற்கே ஆளாகி அரசியல் துறையில் இறங்கியது 1917 - ம் ஆண்டே யாகும்.



1917 - ம் ஆண்டிற்கு முன்னரே பல ஆண்டுகளாக இந்தியாவிலுள்ள அரசியல் நிபுணர் அனைவரும் சுயராஜ்யம் அல்லது உரிமை அரசாட்சிக்காக மன்றாடி நின்றனர். 1917-ம் ஆண்டின் பிரசித்தம் அந்நிபுணருடைய கருத்துக்களை மாற்றியது. அதுகாறும் உரிமை யாட்சியை வேண்டிநின்ற அவர்கள் அப்பொழுது உத்தரவாத ஆட்சியை வேண்டலானார்கள். ஆங்கில ஆட்சியார் அவ்வாண்டு கொடுத்த சில உரிமைகளை அவர்கள் மறுத்தார்கள். நம் தயாநிதியாகிய சித்த ரஞ்சனரும் அங்ஙனம் மறுத்த கூட்டத்தினருள் ஒருவராவர். ஆயினும், அவர் உடனே அரசியல் அரங்கத்தில் தோன்றினா ரல்லர். இந்தியாவின் அக்கால நிலைமையை இந்திய சகோதரர் ஒவ்வொருவரும் உணர்ந்திட அவர் மிக்க பாடுபட்டார். ஆங்கில பாஷையி லல்லாமல் தாய்ப்பாஷைகளிலும் அதனை யறிவுறுத்த அவர், சில நண்பர்களுடன் கூடியுழைத்தார். இயக்கங்கள் பல தோன்றின. எல்லா இந்திய மகா நாட்டினர் 1917 - ம் வருடத்துப் பிரசித்தத்தை மறுத்தனர். இந்திய நாடு அக்காலத்தில் அல்லோல கல்லோலப்பட்டது. கற்றாரும் கல்லாரும் சுயராஜ்யமே வேண்டினர். இந்த ஆரவாரமே இந்திய நாடு முழுவதும் நடித்துக்கொண்டிருந்தது.

அதுகாலை, ஸ்ரீமான் மாண்டகு துரை இந்தியாவின் நிலைமையை நேரிற் கண்டறிய இங்கடைந்தனர். அது சமயம், இந்தியாவி லிருந்த ஆங்கிலர் பலர், நம் பாரத கண்டம் உரிமை யாட்சிக்குரிய பருவத்தை யடைந்திருக்கவில்லை யென்று வந்த துரை யவர்களிடம் சொன்னார்கள். நற்குணம் வாய்ந்த மாண்டகு துரை மகனார், பாரத மாதாவினிடம் பக்தி மிக்கவர்; ஆங்கில நாட்டில் தோன்றியவ ரெனினும் பாரத கண்டத்தினிடம்

மிக்க அன்புடையவர்; இந்திய மக்களைத் தம்முடைய சகோதரராகக் கொள்பவர்; உண்மையை யாராயும் அறிவு படைத்தவர். ஆதலின், அவர் ஆங்கிலேயர்கள் கூறியவற்றை யெல்லாம் பொருட்படுத்தினார் அல்லர். அப்பொழுது இந்தியாவிலிருந்த கட்சிகள் பலவற்றின் கருத்துக்களைக் கேட்டுணர்ந்தார் அவர். அக்காலத்தில் இந்தியாவில் சிறிதும் ஒற்றுமையில்லாததையும், கட்சிகள் பலவற்றின் கருத்துக்கள் சுயநலம் நாடி முரண்படுவதையும் கண்ட அத் துரை மகனார், 'இந்திய நாடு உரிமையாட்சிக்கு உரிய பருவத்தை இன்னும் அடையவில்லை' என்பதை யுணர்ந்தார்.

பின்னர் இந்தியப் பிரதிநிதியவர்கள் கொடுத்த வாக்கும், இந்திய இராஜப் பிரதிநிதியாருடைய பிரசங்கமும் பாரத நாட்டிற்கு ஒருவகைச் சமாதானத்தை யுண்டாக்கின. ஆயினும், அரசாங்கத்தினால் அளிக்கப்பட்ட சில உரிமைகளை மறுத்து முழு உரிமைகளையும் கொடுக்குமாறு வற்புறுத்த பலவிரோத இயக்கங்கள் தோன்றின. அவ்வியக்கங்களின் தலைவர் பலர், அரசாங்கத்தினால் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர்.

அதிகார வர்க்கத்தினால் அடக்கு முறைச் சட்டங்களின் கீழ் பாதுகாப்பில் வைக்கப்பட்ட இந்திய சகோதரர்களுடைய விடுதலைக்காக ரஞ்சனர் மிகவும் பாடுபட்டார். பல இடங்களில் அரிய பிரசங்கங்கள் பலவற்றைச் செய்தார். அரசாங்கத்தினர் அவற்றைக் கேட்டும் வாளா விருந்தனர். விடாமுயற்சியின் உறையுளாகிய தாசர், அதைரிய மடைந்தார் அல்லர். மீண்டும் மீண்டும் சமயம் வாய்த்த போதெல்லாம் சிறையில் வைக்கப்பட்ட நம் தேயத்தவர்களுடைய விடுதலைக்காக மன்றாடினார்.



"இந்தப் பெரிய கூட்டத்திற் கூடியுள்ளவர்கள் எல்லாரினும் நான் அவர்களைப் பற்றி மிகவும் அறிவேன். அவர்களுடைய உள்ளங்களை நான் நன்கு உணர்வேன். அவர்களுடைய விரோத இயக்கத்தின் காரணம், உரிமை யென்னும் பசியே என்பதை யான் அறிவேன்.........கல்வி கற்ற நம்முடைய இளைஞர் பலர், உலகத்திலுள்ள பிறநாட்டின ரெல்லாரும் உரிமையுடன் விளங்கக் காண்கின்றனர். தங்களுடைய நிலைமையை மற்றைய நாட்டினருடைய நிலைமையுடன் ஒத்திட்டுப் பார்த்து 'நாம் ஏன் இவ்வாறு இருத்தல் வேண்டும். நமக்கும் உரிமை வேண்டும்' என்று கூறிக் கொள்ளுகின்றார்கள்.........அரசாளும் உரிமையை அவர்களுக்கு இன்று கொடுங்கள். விரோத இயக்கத்தைப் பற்றி நீர் மீண்டும் கேளீர்.. அவ்வுரிமையை அவர்களுக்கு இன்றே கொடுங்கள். 'இதோ அந்த உரிமை. ஆட்சியின் கிரமத்தை நாங்கள் மாற்றிட எண்ணியுள்ளோம். அரசாட்சி உங்களுடைய தாகும். குடிகளின் ஆட்சி: குடிகளால் ஆட்சி. உங்களுடைய நாட்டின் நலத்திற்காக உழையுங்கள். உங்களுடைய நாட்டினர் தன்மையைக் காட்டுங்கள். உங்களுடைய சரித்திரத்துறையை வடிவுபடுத்துங்கள்' என்று இத்தேயத்தவர்க்குக் (அரசாங்கத்தினர்) கூறுங்கள். மறுநாளே இந்த விரோத இயக்கம் முடிவுபெறும் என்பதற்கு நான் உத்தரவாதியாக இருப்பேன்" என்று வடித்த ஞான தேசிகராம் ரஞ்சனர், கல்கத்தா நகர பெருங்கூடத்தில் 1918-ம் ஆண்டு மார்ச்சு மாதம் ஐந்தாம் தேதி செய்த பிரசங்கத்தை யுன்னிப் பாருங்கள். ரஞ்சன தாசருடைய அருங் குணத்தின் பெருமை அளவிடற்காமோ என்பதைக் கண்டறியுங்கள்.

"அவர்களை விடுதலை செய்யுங்கள். இஃது அவர்களுடைய நாடு என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளட்டும். அவர்களுக்காக வாடும் ஓர் அரசாங்கம் இருக்கிறதென்று அவர்கள் அறிந்து கொள்ளட்டும்.........அரசியல் உரிமைக்காகப் புல ஆண்டுகள் பொருது நிற்பவரும், ஒவ்வொரு முறையும் வெறுப்புடன் மறுக்கப்பட்ட விண்ணப்பத்தையும் துதியையும் உடையவருமாகிய குடிமக்களையுடைய ஒரு நாட்டிலிருந்து ......அவர்களுக்குக் களிப்பையும் உண்டாக்காமல், அவர்கள், தங்களுக்காகவே பொருதுகின்றனர் என்பதையும் விளக்காமல் ஒரு பெரிய சேனையை யடையலாமென்று நீங்கள் எண்ணுகிறீர்களா?.........அவர்களை விடுவியுங்கள். வங்காளதேயம் கொடுக்காத சேனை எது? என்னுடைய தொழிலையும் ஆறுமாதம் வரையில் விட்டொழித்து, நாடு முழுவதும் திரிந்து, ஆயிரக் கணக்காகச் சேனையைச் சேருமாறு நான் செய்வேன்" என்று வீராதி வீரராகிய தாசர், பிரதம மந்திரியாருடைய வேண்டுகோளுக்குப் பதிலாகச் செய்த இவ்வுபந்யாசத்தை யுற்றுக் கவனியுங்கள்." தம் சகோதரர்கள், சிறைச்சாலையையே தவச்சாலையாகக் கொண்டு வாழும் பாரதமாதாவின் புதல்வர்கள், குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கோண்டதைப் போல் உரிமையை வேண்டித் தங்கள் உரிமையை இழந்த உயர்மக்கள் விடுதலை யடையக், கைத்தளையை யறுக்கக், கால் விலங்கை முறிக்க ரஞ்சனர் என்ன பாடுபட்டார் என்பதை ஆராய்ந்து பாருங்கள். ஆ! சித்த ரஞ்சனருடைய சித்தத்தின் தன்மைதான் என்ன? நீதிவாதித் தொழிலில் தலைசிறந்து விளங்கி ராஜபோகத்திலிருக்கும் எவர்தான், தம்நலங் கருதாமல் இவ்வாறு பிறர் நலத்தை நாடி யுழைப்பர்? சுயநலங் கருதா மா பெருந் தயா நிதி என்று நம் சித்த ரஞ்சனரை யழைப்பதற்கு யாதேனும் ஐயமும் உண்டோ?



தாசருடைய பிரசங்கங்களும், மன்றாட்டங்களும், பெருமுயற்சிகளும், அரிய பாடுகளும் அவலமாயின. அவற்றையெல்லாம் அரசாங்கத்தினர் பொருட்படுத்தினாரல்லர்.

1917-ம் வருடமே ரஞ்சன தாசர் அரசியல் அரங்கத்தின்மேல் ஏறினார் என்பது எல்லாரும் அறிந்ததே. அவ்வருடம் அவர் எண்ணிறந்த பிரசங்கங்கள் செய்தார். அவர் ஒரு பெரிய அரசியல் நிபுணர் என்பதை அப்பிரசங்கங்கள் நன்கு வெளிப்படுத்தின; பாரத மாதாவினிடம் அவர் கொண்ட பக்தி மாசற்றதென்பதையும் காட்டின.

"என்பாலுள்ள தேசவூழியம் ஆங்கில அரசியலை யநுசரிப்பதன்று. அஃது என்னுடைய சமயத்தி லொரு பாகமும், என்னுடைய வாணாளின் சிந்தனாவாதத்தின் ஒரு பகுதியுமாகும். என்னுடைய தேயத்தின் மனோபாவனையில் அமலனுடைய தோற்றத்தை நான் காண்கிறேன். தேச சேவையும், நாட்டினர் சேவையும் மக்கள் சேவையாகும். மக்கட்சேவையே தெய்வ வழிபாடாகும்..............................

இந்திய நாடு எப்பொழுதும் வெல்லப்படவில்லை. கடவுள் அருளால் இனிவரும் நாட்களிலும் அது வெல்லப்படாது. இந்திய நாடு, தன்னுடைய சிறந்த ஒழுக்கத்தினையும், நாகரிகத்தையும், உயர்ந்த ஞானாபிவிர்த்தியையும் உலக முழுவதும் அறிவுறுத்தும். அவ்வேலை இன்றே தொடங்கியது. உலகினர் அனைவரும் அவற்றைப் பற்றிக் கேட்டு உணரும் வரையில் அவ்வேலை வளர்ந்துகொண்டேயிருக்கும்..................................................

இந்திய நாட்டைத் தங்கள் தாய் நாடாகக் கொண்டவர்கள் எச்சாதியினராயினும், எச்சமயத்தோர் ஆயினும்

அவர்களை இந்தியநாடு தாங்கி நின்றது. இந்திய தேய சரித்திரமே அதனை நன்கு விளக்குகின்றது" என்று நம் நாட்டு நாயரகாகிய ரஞ்சன தாசர், மிமென்சிங் என்னுமிடத்தில் 1917-ம் ஆண்டு அக்டோபர் மாதம் செய்த உபந்யாசம், மாற்றறியாத் செழும் பசும்பொன்னே போலப் போற்றத் தக்கதேயல்லவா?

"அரசாங்க அதிகாரிகள், தாங்கள் அரசாளும் குடிகளுக்கு உத்தரவாதிகளாக நிற்கும் அரசாங்கமே இந்தியாவிற்கேற்ற அரசாங்கமென்று தாசர் எண்ணியிருந்தார். குடிகளுடைய நலத்தை நாடாத ஆட்சி, இருப்பினும் இறப்பினும் ஒன்றே என்றும், அத்தகைய ஆட்சியின்கீழ் இருத்தலினும் இறத்தலே நன்றென்றும் அவர் கொண்டிருந்தார். குடிகளை யாள்பவர், அக்குடிகளுடைய நலத்தைத் தேடாமல் தம் நலம் தேடிக் கொள்ளுதலைக் காணக் காண அவர் கலங்கினார். இவ்வாறு சுயநலங் கருதும் தன்மையினரை நீக்கிக் குடிகளுடைய நன்மையைக் கருதும் பெரியோரே குடிகளை யாளுமாறு செய்யவே ரஞ்சனர் வருந்தி யுழைத்தார்.

"வளர்கின்ற பலகோடி மக்கள் இந்தியாவில் இருக்கிறார்கள் என்பதை யுணர்ந்து, அவர்களைத் தங்கள் ஆட்சியுள் கொள்ளாத சுய ஆட்சியையும், நாட்டாட்சியையும் நாம் அங்கீகரிக்க மாட்டோம். நாட்டாட்சியையும், சுய ஆட்சியையும் வேண்டுங்கால் நான், மற்றொரு கடின ஆட்சியையும், அக்கடின ஆட்சியினிடம் மற்றொரு பிரபு ஆட்சியையும் கேட்க வில்லை. எனக்குத் தெரிந்தவரையில், ஆங்கிலேயர்களுடைய கடின ஆட்சியா யிருப்பினும், ஆங்கில இந்தியர்களுடைய கடின ஆட்சியா யிருப்பினும் கடின ஆட்சி, கடின



ஆட்சியே யாம். நமக்குக் கடின ஆட்சி வேண்டிய தில்லை. நாட்டாட்சியே நமக்கு வேண்டும். குடிகளாளும், குடிகளுக்கும் ஆளச் சுய ஆட்சியே நமக்கு வேண்டும். நம் நாட்டினர் ஒவ்வொருவரும், செல்வம் மிக்க ஜமீன்தா ராகிலும், வறுமை மிக்க கூலிக்காரராகிலும் தத்தம் உரிமையுடனிருக்கச் செய்யும் அத்தகைய சுயவாட்சியே நமக்கு வேண்டும்" என்னும் தாசருடைய அரிய மொழிகளி லிருந்தே அவர் வேண்டிய சுய ஆட்சியின் தன்மை செவ்வனே தெரியும்.

உரிமை யாட்சிக்கு உரிய பருவத்தை இந்திய நாடு அடைந்திலது என்று கூறித் தங்கள் சுயநலமே தேடி நின்றிட்ட பல ஆங்கிலேயர்களைப் பற்றியும், ஆங்கில இந்திய வர்த்தகர்களைப் பற்றியும் பேசுங்கால் ரஞ்சன தாசர்,—

"அவர்களுக்கு நஷ்டம் வந்தால் அவர்கள் இந்தியாவை விட்டுச் செல்லட்டும். இலாப மிருந்தால் இந்தியாவிலேயே இருக்கட்டும்......இந்தியா என்றும் வெல்லப்பட வில்லை. அன்பினாலும் நல்லாட்சியின் வாக்குத் தத்தத்தினாலும் வெல்லப்பட்டது. நம் பொருளைக் கொள்ளைக் கொள்ளும் சிறிய வர்த்தகர்களுக்காக இந்திய நாடு இருக்க வில்லை" என்று கூறியுள்ளார்.

சித்த ரஞ்சனர், நம் இந்திய நாடு உரிமை யாட்சிக்கு உரிய பருவத்தை யடைந்திருக்கிற தென்று நம்பினார். கல்லாக் கயவர்கள் பல்லாயிரம் பேர்கள் நம் நாட்டிலுள்ளார்கள் என்பதை ரஞ்சன தாசர் அறிவார்; ஆயினும், எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ளாவிடினும் தங்கள் உரிமையை அவர்கள் அறிவார்கள் என்பதை அவர் உணர்ந்தார். சட்டசபைகளுக்கு அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கக்

கல்லாதவர்களும் ஓட்டுக் கொடுத்ததிலிருந்தே அவர்கள், தங்கள் உரிமையை யறிந்திருக்கிறார்கள் என்பதை நன்கு விளக்குகிறது என்று தாசர் பன்முறை கூறியுள்ளார். கற்றாருடன் பன்மடங்கு கல்லார்களையும் நம் நாடு உடைய தெனினும், அக்கல்லார்கள் நம் நாடு உரிமையாட்சியைப் பெறுதற்கு இடையூறாக நில்லார்கள் என்பதை அவர் அறிவார். மனுமுறைக் கிணங்கப் பல்லாயிர வருடங்களாகக் கிராமங்களே நம் தேச வாழ்வின் ஏகமாக இருந்ததால், கிராமங்களே நம் சுய ஆட்சியிலும் ஏகமாக இருக்கவேண்டு மென்றும், கிராம வாசிகளுக்குப் படிக்கவும் எழுதவும் நாம் கற்றுக் கொடுக்க வேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டு மென்றும் நம் சித்தரஞ்சனர் எண்ணிறந்த முறை சொல்லி யுள்ளார்.

"சுய ஆட்சியைக் கொடுக்க இனித் தாமதித்தல் ஆகாது. நமக்குச் சுய ஆட்சியைக் கொடுக்க மறுத்தால் நம்முடைய தேசத் தன்மையின் வளர்ச்சியும், இந்திய ஆண்மையின் முதிர்ச்சியும் கெட்டொழியு மென்பது நிச்சயம்.

நம்முடைய தேயத் தன்மையை வளர்க்கச் செய்யும் அரசியலை, நம்முடைய ஆண்மையின் வளர்ச்சிக்குக் காரணமா யிருக்கின்ற அரசியலைக், கட்டிடும் உரிமையை யல்லால் வேறொன்றும், அதிகமாகவும் குறைவாகவும் நமக்கு வேண்டிய தில்லை. இதுகாறும் நாம் பொறுத்துப் பொறுத்துப் பொறுமையும் ஒழிந்து பட்டது.

நம்முடைய அரசியலைக் கட்டற்குரிய அதிகாரமே நமக்கு வேண்டும். இந்நாட்டிற் கேற்றதும், பின்னர் பெரிய இந்திய அரசியல் என்று போற்றப் படுதற் குரியதுமான அத்தகைய அரசியலைக் கட்டிடற்குரிய அதிகாரமே நமக்கு வேண்டும்.........இவ்வுரிமைக்காக நாம் போராட வேண்டும்."



பயப்படாம லிருக்குமாறு நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். மூடத்தனமாக நீங்கள் இருக்க வேண்டாம். உங்களுடைய தீர்மானத்தை அரசாங்கத்தினருக்கு அறிவிப்பதில் நீங்கள் பயப்பட வேண்டிய காரணமொன்று மில்லை. கேட்கப் பயப்படும் குடிகள் பெறுதற்குத் தகுதியுடையவர்கள் ஆகார்கள்...........நியாயமானதும், இன்றியமையாததுமான ஒரு தீர்மானம் மறுக்கப்படு மென்று நான் நினைக்க வில்லை.

'இதனை அரசாங்கம் அளிக்காது; அதை அரசாங்கம் கொடுக்காது' என்னும் எண்ணங்களால் நாம் தடுமாற லாகாது. அரசாங்கம் அளிப்பதும், அரசாங்கம் அளிக்காததும் அரசாங்கத்தினுடைய வேலை. நம் நாட்டின் நலத்திற்குக் கட்டாயம் வேண்டியிருப்பனவற்றையே நாம் கருத வேண்டும்" என்று தாசர் பல இடங்களில் உபந்யாசங்கள் செய்து, பாரத மக்களுடைய அறிவைப் பெருக்கிப் பயத்தை யோட்டி, இந்திய நாட்டிற்கு இன்றியமையாத உரிமைகளைக் காட்டி, அவ்வுரிமைகளைக் கொடுத்து இந்திய அரசியலைச் சீர்திருத்துமாறு அரசாங்கத்தினரைக் கேட்டார்.

இந்திய நாடு இந்தியர்களாலேயே ஆளப்பட வேண்டுமென்பது ரஞ்சனருடைய துணிபு. நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பல தீர்மானங்களைச் செய்தல் நம்முடைய கடமை யென்றும், அங்ஙனம் செய்த தீர்மானங்களைச் சிறிதும் பயமின்றி அரசாங்கத்தினருக்கு அறிவிக்க வேண்டுமென்றும் வீரராம் தாசர், எண்ணிறந்த முறை வங்காளத்திலும், மற்றும் பல இடங்களிலும் செய்த பல பிரசங்கங்களிலும் வற்புறுத்தி யிருக்கின்றார். பயப்படாதீர்கள்! நம்முடைய உரிமையைக் கேட்கப் பயப்படுவானேன்? என்று அவர்,

தாம் செய்த உபந்யாசங்கள் ஒவ்வொன்றிலும் கூறிப் பயத்தை யோட்டித், தைரியத்தை காட்டி யிருக்கின்றார். நிற்க,

பஞ்சநதிகள் பாய்ந்தோடும் பாஞ்சால (பஞ்சாப்) நாட்டின் படுகொலை அவருடைய உணர்ச்சியைத் தீவிரமாகக் கிளப்பி விட்டதென்று கூறலாம்.

ஐந்து நதிகள் ஊடுருவிப் பாய்ந்தோடும் அந்த நன்னாட்டில் தளகர்த்தர் டயர் துரை மகனார் செய்த படுகொலை தாசர் பெருமானுடைய உள்ளத்தை யுருக்கியது. பாரதமாதாவின் உயர்ந்த புதல்வர்கள் ஈவு இரக்க மின்றி ஆடு மாடுகளைப்போல் அநியாயக் கொலையுண்டதை எண்ண எண்ண அவருடைய மனம் புழுங்கியது; உடல் துடி துடித்தது; அங்கம் பதை பதைத்தது; ஆவி சோர்ந்தது; சித்தம் சிந்திக்கச் சிந்திக்கக் கோபம் பெருகியது; வீரம் மிகுந்தது. அப்படுகொலையைப் பற்றி விசாரிக்க எல்லா இந்திய மகா நாட்டினரால் (காங்கிரஸால்) நியமிக்கப்பட்ட கூட்டத்தினருள் நம் ரஞ்சன தாசரும் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். அக்கூட்டத்தினர், அந்தப் படுகொலையைப் பற்றி நன்கு ஆராய்ந்து, மிகச் சாதாரணமாக எல்லாராலும் அங்கீகரிக்கப் படக்கூடிய சிபார்சுகளையே செய்தனர். ஆயினும், அரசாங்கத்தினர் அவற்றைக் கவனித்தார் அல்லர். தற்கால ஆட்சி முறையில் அத்தகைய அட்டூழியங்கள், அநியாயக் கேடுகள் நடைபெறுதற்குச் சாத்தியமாகும் என்பதை அவர் அறிந்திருந்ததனாலேயே 1919-ம் ஆண்டில் இயற்றப்பட்ட அரசியல் திருத்தச் சட்டமானது அதிருப்திகரமானதென்றும், நம்மை ஏமாற்றுதற் குரியதென்றும் உணர்ந்து அவர், அமிர்தசரஸ் எல்லா இந்திய மகா நாட்டில், மண்ணுளோர் அனைவரும் போற்றும் மா வலிசேர்



மகிபராம் லோகமான்ய பால கங்காதர திலகருக்குத் துணையாக நின்று போராடினார். ஆயினும், மா பெருந் தூய ஞானியாம் மகாத்மா காந்தியடிகளுடைய வேண்டுகோளின் பேரிலேயே அக்கருத்து அப்பொழுது நழுவ விடப்பட்டது.

பின்னர், தளகர்த்தர் டயர்துரை மகனார் செய்த படுகொலையைப்பற்றி ஆங்கில பாராளு மன்றத்தினர் தக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளாமல் ஒருவாறு மெழுகி விட்டதைக் கண்டதும், ஆற்றொணாத் துயரத்தி லழுந்தி யிருந்த சாத்விக சற்குருவாம் காந்தியடிகள் மனம் புழுங்கியது. அவருடைய உள்ளம் அழலி விட்ட மெழுகைப் போல் உருகியது. அவர் உடல் நெருப்பி லிட்ட தளிரைப் போலாயிற்று. உடனே, பாரத மாதாவின் அருந்தொண்டராகிய அவ்வடிகள், ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று அப்பொழுது கல்கத்தாவில் நடைபெற்ற தனி இந்திய மகா நாட்டில் முற்கொண்டு வந்தார். அதனை அங்கீகரித்தார் அல்லர் ரஞ்சனர். அவர்; பாபு விபின சந்திர பாலருடைய கட்சியைச் சேர்ந்து உழைக்கலானார். எனினும், ஒத்துழையாமை இயக்கத்தின் இயல்பைப் பற்றித் தாசர், நெடுநாள் வரையில் அறியாம லிருந்தார் அல்லர். நாகபுரியிற் கூடிய மகா நாட்டின் பின்னர், ஒத்துழையாமை இயக்கம், நாட்டின் நலத்தை அடைதற்கு இன்றியமையாததாகு மென்று தெரிந்துகொண்டார் தாசர். அவர், ஒத்துழையாமை இயக்கத்தின் உண்மையையும் வன்மையையும் செவ்வனே ஆராய்ந்து அறிந்தார்; காந்தியடிகள் முற்கொண்டு வந்த ஒத்துழையாமை இயக்கமே நாட்டிற்கு நன்மை பயக்குமென்று உணர்ந்தார்; மகாத்மா காந்தியைத் தம்முடைய தலைவராகக் கொண்டார்; மாதம் ஐம்பதினாயிரம் ரூபாய் வருமானத்தை

யுடைய தம் நீதிவாதித் தொழிலையும் அன்றே விட்டார்; ஒத்துழையாமை இயக்கத்தின் முன் நின்றார். மகாத்மா காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்திற்கு உடலீந்தார். அந்த இயக்கத்திற்கு உயிரை யீந்தவர் நம் வீர சிரோமணி சித்த ரஞ்சன தாஸரே யாவர்.

இந்திய அரசியலைச் சீர்திருத்த இங்ஙனம் எல்லையின்றி உழைத்த தாசருடைய வீரமும் திறமையும் இனி யாருக் குண்டாகும்? அவர் பாரத மாதாவிற்காக மெய்யன்புடன் உழைத்த உழைப்புக்களை எல்லாம் கூறுவ தென்றால், ஏட்டில் அடங்காதன வாகுமே! அப்பெரியார் நம் பொருட்டு மிக வருந்தி யுழைத்ததைப் போல் இனிமேல் யார் உழைக்கப் போகிறார்? அந்த அண்ணலுடைய சிறந்த முயற்சிகளையும், உயர்ந்த உழைப்புக்களையும் பற்றி நினைக்குந்தோறும் உலகத்தினர் அனைவரும் வியப்பும் விருப்பும் அடைவதுடன் அந்தக் குருசிலை வாழ்த்தி வழிபடுகின்றனரே! அப் பெருமானை இழந்து வாட நாம் என்ன பாவம் செய்தோமோ? பாரத அன்னையின் அருமருந்தன்ன புதல்வனை, அந்த இருநிதி வள்ளலை இனி எப்பொழுது கண்டு களிக்கப் போகிறோம்?

---

# அத்தியாயம் 11

## ஒத்துழையாமை இயக்கத்தின் முன்னேற்றம்

“ஒத்துழையாமை இயக்கத்தின் அர்த்த மென்ன வென்று நான் கேட்கப் படுகிறேன். அதனுடைய அர்த்தம் எனக்கு நன்றாகத் தெரிகிறது. நமக்கு உரிமை வேண்டும்; நம்முடைய வாழ்நாளை ஒழுங்கு படுத்தும் உரிமையை நாம் உ



றறிய வேண்டும்; நம்முடைய பெரிய இந்திய நாட்டினரைக் கட்டிடும் உரிமையை நாம் ஆராய்ந்து தெரிதல் வேண்டும்; அவ்வுரிமைகளை உணருமாறு நாம் இக்கடின ஆட்சியைக் கட்டாயப் படுத்த வேண்டும்.

எல்லா முறைகளும் தவறியதால் நான் இம்முறைக் காகவே பரிந்து பேசுகிறேன். எது வந்தாலும் இம்முறையை உறுதியாகப் பற்றி நிற்குமாறு நான் உங்களை வேண்டுகின்றேன். இதுவே நம்முடைய கடைசி தெய்வ கதி. இஃது அவலமாய்ப் போகாது.

ஒத்துழையாமை யென்றால் இன்ன தென்று நீங்கள் அறிந்து கொண்டீர்களா? வலிவுள்ள கடின ஆட்சி யென்னும் யந்திரத்தை ஓட்டுவதி லிருந்து உங்களுடைய உதவியை நீக்க வேண்டும். அந்த யந்திரத்தை எவ்வாறு ஓட்டுவ தென்று நீங்கள் அறிவீர்களா? கடின ஆட்சியார், தம்முடைய கொடிய எண்ணத்தை நீதிவாதிகள் மூலமாகவும், வைத்தியர்கள் மூலமாகவும், எழுத்துக் காரியஸ்தர்கள் மூலமாகவும், பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் மூலமாகவும், மாஜிஸ்டிரேட்டுகள் மூலமாகவும், நியாயாதிபதிகள் மூலமாகவும் நடத்தி வருகின்றனர்.

நான் பரிந்து பேசும் முறையே பலி செலுத்தும் முறை” என்று சித்த ரஞ்சன தாசர் கூறியுள்ள மொழிகளே ஒத்துழையாமை இயக்கத்தின் பொருளைத் தெரிவிப்பதுடன் அவர் அந்த இயக்கத்தைச் சேர்ந்ததன் காரணத்தையும் விளக்குகின்றன. நம்முடைய உரிமையைப் பெறும் வழி ஒன்றே என்றும், அஃது ஒத்துழையாமையே யென்றும் அவர் அறிந்தார்.

"பாஞ்சாலத்தில் என்ன நடந்ததென்பதை எண்ணிப் பாருங்கள். கிலாபத்தையும் நான் மறக்க வியலாது. இந்தத் திருஷ்டாந்தங்களை நீங்கள் மறக்க வியலும். எல்லா இந்திய மகா நாட்டினரால் அமர்த்தப்பட்ட கட்டளையற்ற கூட்டம் உங்கள் நினைவி லிருக்கும். சென்ற வருடம் நாங்கள் அனைவரும் காசியில் கூடிக், கட்டளையற்ற விசாரணைக்காரர்களாக அந்தப் பொது ரிப்போர்ட்டில் கையொப்ப மிட்டோம். அந்த ரிப்போர்ட் மகாத்மா காந்தியடிகளால் எழுதப்பட்டது. நாங்கள் அந்த ரிப்போர்ட்டைப் பரீட்சித்துப் பார்த்துத் தர்க்கித்தோம்...........அந்த ரிப்போர்ட்டில் இருந்த விஷயங்கள் மிகவும் சாதாரணமான, எல்லாராலும் அங்கீகரிக்கப்படக் கூடிய சிபார்சுகளே யாகும்; எனினும், அந்தச் சிபார்சுகளும் வெறுப்புடன் தள்ளப்பட்டன. குற்றவாளிகள் தண்டனையின்றி விடப்பட்டார்கள். அந்தப் பாதகர்களுக்காகப் பணமும் வசூலிக்கப்பட்டது. அந்தப் பாதகர்கள் பொருட்டுப் பணம் வசூலிக்கச் சில துரைமகளிர் நடித்தனர் என்றும் நான் கேள்விப்பட்டேன்......................இந்தத் தவறுக்காகவே மகாத்மா காந்தியார் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார்" என்று ஒத்துழையாமை இயக்கந் தோன்றிய தன் காரணத்தைத் தாசர் பெருமானே 1921-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் பாட்னாவில் கூறியுள்ளார்.

"மகாத்மா காந்தியடிகள் அந்த இயக்கத்தை ஆரம்பித்தார். ஸ்ரீமான் மதிலால் நேஹ்ரு அதைச் சேர்ந்தார். நான் கல்கத்தா காங்கிரசில் அந்த இயக்கத்தில் சேரவில்லை. அதற்குக் காரணம் மதிபேதமே யாகும். ஒத்துழையாமையையெதிர்த்து நின்றதால் கல்கத்தாவில் மிகச் சிலரே என்னுடைய உபந்யாசங்களைக் கவனிக்கலாயினர்" என்று சித்த



ரஞ்சனர், தாம் ஒத்துழையாமை இயக்கம் தோன்றிய காலத்திலேயே ஒத்துழையாமையாளராகாததன் காரணத்தையும் வெளியிட் டிருக்கின்றார்.

நாட்டின் நன்மையையே கண்ணாகக் கொண்டிருந்த சித்தரஞ்சன தாசர், சாதாரண அறிவு படைத்தவர் அல்லர்; மேதாவி யாவர்; எக்காரியத்தையும் முன்னர் நன்றாக ஆராய்ந்து பார்த்தே தொடங்கும் சிறந்த இயல்பு வாய்ந்தவர்.

"ஒத்துழையாமை என்றால் என்ன? நான் அதன் கொள்கையை யறிந்து கொண்டது தவறற்றதெனின், நீங்கள், 'உங்களுடைய இயற்கைக்கு விரோதமானதும்,' உங்களுடைய தன்மைக்கு விரோதமானதும், சுயராஜ்யத்தை வெளிப்படையாக வுடைய நாட்டினர் உயிர்களுக்கு விரோதமானதுமான எல்லாவற்றிலும் பற்றறுக்க வேண்டும் என்றே அது பொருள்படும். ஒத்துழையாமையை யான் அறிந்திருப்பின், நீங்கள் இன்று நம் நாட்டினர் வாழ்வைக் கட்டப்பட்டிருக்கும் நிலையில்லாத பொருள்களினிடம் பற்றற்றிடுமாறு நாம் நடந்துகொள்ள வேண்டும் என்றே அஃது அர்த்தமாகும். இக்கள்ள வேடங்களினிடம் பற்றறுங்கள்; நீங்கள், உங்களை யுற்றறிவீர்கள். அஃது ஒத்துழையாமையின் உள்ளர்த்தமாக இல்லாவிடில் நான் ஒத்துழையாமைக்கு எதிரியாக நிற்பேன். ஒத்துழையாமையின் முதன்மையான உண்மையானது நம் நாட்டு உயிர்களின் முன்னேற்றத்திற்கு உதவி புரிகின்றது என்று நான் நம்புவதினாலேயேதான் ஒத்துழையாமையை யான் ஆதரித்து நிற்கிறேன். அஃது, உங்களை நீங்கள் அறிய உதவி புரிகின்றது. எல்லா இடையூறுகளினிடத்தும், முட்டுப்பாடுகளினிடத்தும், இன்று உங்களுடைய வாழ்வைக் கட்டப்பட்டிருக்கும் எல்லா நிலையற்ற

பொருள்களினிடத்தும் பற்றற்றிடுமாறு செய்து நிற்பதும் அஃதே. அஃது உங்களுக்குள் இருக்கும் பிராணனைக் கண்டு பிடிக்கிறது. அது நாட்டினருடைய பிராணனையும் கண்டு பிடிக்கிறது.

ஒத்துழையாமை யெனின், நான் என்னுடைய பலத்தையே சாரவேண்டு மென்பதே யாம். என்னுடைய உதவியையே சார வேண்டு மெனின், என்னை ஆராய்ந்து அறியாதவாறு தடுக்கும் இடையூறுகளை விலக்க வேண்டு மல்லவா? நம்மை நாமே தாங்கிக்கொள்ள வேண்டுவ தன்றி நமக்கிடையிலும், நம் நாட்டினர் உணர்ச்சிக் கிடையிலு முள்ள இடையூறுகளை எல்லாம் நாம் விலக்க வேண்டு மென்று இக்கொள்கை வேண்ட வில்லையா?

ஆலோசனை சங்கங்களும் சட்டசபைகளும் என்ன? வஞ்சகப் பொருள்கள். அவைகளை எல்லாம் நாம் நீக்க வேண்டாமா? அவைகள் இன்று நம் நாட்டினர் வாழ்வில் சம்பந்தப்படவில்லை என்று நீங்கள் கூற வியலுமா? அதுவும் வஞ்சகமே யாம். அவ் வஞ்சகப் பொருள்கள் இன்று உங்களுடைய உயிர்களை வாட்டி நிற்கின்றன. அவை உங்கள் மீதிருக்கின்றன; உங்களைச் சுற்றி யிருக்கின்றன; உங்களுக்கு எல்லாப் பக்கங்களிலும் இருந்து நீங்கள் பயப்படக் கூடிய பலன்களை கொடுத்து நிற்கின்றன. இன்று நீங்கள் அவற்றை விலக்க வேண்டாமா? ஆலோசனை சங்கங்களை யழிக்காமல் அச்சங்கங்களிலிருந்து விலகிக்கொள்வதன் கருத்தென்ன? இவை என்னுடைய பேச்சுக்க ளல்ல. இவை நம்முடைய தகைமைசான்ற தலைவராகிய மகாத்மா காந்தி யடிகளுடைய மொழிகளே யாகும். சீர் திருத்தங்களை நாம் சின்னா பின்னஞ் செய்ய வேண்டாமா? சீர்-



திருத்தங்களைச் சின்னா பின்னஞ் செய்த லென்றால் என்ன? இடையூறுகளை யொழியுங்கள்; தடைகளை யொழியுங்கள்; அவற்றின் பற்றை யறுங்கள்; அவற்றை விலக்குங்கள்; அவற்றை யழியுங்கள்; நம்மை நாமே உணருவதினின்றும் தடுக்காதவாறு அவற்றை விட்டொழியுங்கள். என்னுடைய உள்ளத்தினின்று ஒத்துழைக்க விரும்புகிறேன் என்று நான் சொன்னால், எவ்விதத்தில் நான் உங்களைப் புண்படுத்துகிறேன்? ஆலோசனை சபைகள் பல கட்டிடங்களைப் போன்றவை யல்ல. நீங்கள் நுழைய விரும்பும் சட்டசபை ஒரு கட்டிட மன்று. அஃது ஓர் ஏற்பாடு. அஃது, உங்கள் மீதிருக்கும், உங்களுடைய உயிர்களின் இரத்தத்தை யுறிஞ்சி நிற்கும், உங்களைத் தன்னுடைய முழு பலத்துடனும் வருத்தி நிற்கும் ஒரு கட்டுப்பாடு. நீங்கள் அதனிடம் பற்றறுக்க வேண்டும்; அந்த ஏற்பாட்டினிடம் நீங்கள் சிறிதும் சம்பந்த மின்றி யிருத்தல் வேண்டும்; அந்தப் பெருங் கட்டுப்பாட்டினிடம் நீங்கள் யாதொரு பாத்தியமு மின்றி யிருத்தல் வேண்டும். அவ்வாறு செய்தற்கு ஒரே வழிதான் இருக்கின்றது. அஃது, அவ்வாலோசனை சங்கங்களால் ஆட்சி செய்ய இயலாதவாறு செய்தலே யாம். நான் கூறுவது தவறாக இருக்கும்; எனினும், நான் கொடுமையற்ற ஒத்துழையாமை யென்னுங் கட்டுப்பாட்டைக் கடைபிடித்து நிற்கிறேன் என்று நான், உங்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன். வேலைகளுக்காக அங்குச் செல்பவர்களிடம், நன்மை யென்று அவர்கள் கூறும் சிறிய பொருள்களுக்காக அங்குச் செல்பவர்களிடம் நான் சிறிதும் சம்பந்தப்பட மாட்டேன். அவைகள், நன்றாக உண்பவர்களிடமிருந்து தெறித்துக் கீழே விழும் அற்ப அணுக்களே யாகும். நான் அவற்றை அருவருக்-

கிறேன்; அவற்றை நான் வெறுக்கிறேன்; சீர் திருத்தங்களைச் சின்னா பின்னஞ் செய்தற்கு நான் அங்கு நிற்கிறேன்; நம்முடைய உயிர்களின் உதிரத்தை உறிஞ்சிக் குடிக்கும் அரக்கர்களைச் சின்னா பின்னஞ் செய்தற்கே நான் அங்கு நிற்கிறேன். இன்றேல், அங்குச் செல்லவே எனக்கு விருப்பமில்லை. கொடுமையற்ற ஒத்துழையாமை யென்னும் கட்டுப்பாட்டின் தீர்மானம் இவ்வுபய கட்சிகளும் ஒன்று சேர வற்புறுத்துவதற்காக நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்" என்று தாசர் பெருமான் டெல்லியில் நடைபெற்ற எல்லா இந்திய மகாநாட்டில் கூறிய மொழிகளே, ஒத்துழையாமை யியக்கத்தின் பொருளையும், உட்கருத்தையும் பெருமையையும் செவ்வனே எடுத்துக் காட்டுகின்றன.

சித்த ரஞ்சனர் கூறியதைவிட ஒத்துழையாமையைப் பற்றி இன்னும் விளக்கமாக ஒருவராலும் சொல்ல வியலாது. சுயராஜ்யம் என்னும் பெரும் பதவிக்கு நம்மைக் கைப்பிடித்தழைக்கும் தூதன், ஒத்துழையாமையே யாகும். கடின ஆட்சி யென்னும் நரகத்தினின்று நம்மை மீட்டு, நல்லாட்சி யென்னும் சுவர்க்கத்திற்கு நம்மை யழைத்துச் செல்லும் சக்தி ஒத்துழையாமையே யாகும். அடிமை யென்னும் பெரிய கடலைக் கடந்து உரிமை யெனும் கரையை யடைய நமக்கு உதவி புரியும் ஓடம் அஃதே யாகும். அத்தகைய உயர்ந்த இயக்கத்தை, ஆன்ம உணர்ச்சியை யறிவிக்கும் கருவியை நன்றாக அறிந்தவர் தாசரே யாவர். அவர், தம் முழுமனத்துடன் அதைப் பற்றி நின்று, அதன் உண்மைகளைப் பிறர்க்குச் சொல்லி விளங்க வைத்தார்.

நந்தா மணி விளக்கனைய நாயக மாம் தாசருடைய அரிய சொற்களின் கருத்துக்களையும், உண்மை உழைப்புக்களின்



திறமைகளையும் பார்த்து அறிஞர் பலர், அந்த இயக்கத்திற் சேர்ந்து மிக்க பொறுமையுடன் உழைக்கலாயினர். சில நாட்களுக்குள்ளாகவே அந்த ஒத்துழையாமை யியக்கம் முன்னேற்ற மடைந்து, பெரு முயற்சிகளை மேற்கொண் டுழைக்கலாயிற்று.

# அத்தியாயம் 12

## சர்காவும், கொடுமையற்ற ஒத்துழையாமையும்

பாரத மாதாவின் அரும் பெருந் தொண்டராகிய தாசர், தாம் ஒத்துழையாமை யியக்கத்தைச் சேர்ந்ததி லிருந்து சர்காவைப் (நூல் நூற்கும் ராட்டினத்தைப்) பற்றியும் கொடுமையற்ற ஒத்துழையாமையைப் பற்றியும் நன்றாக விளக்கிக் கூறியுள்ளார்; தாம் செய்த ஒவ்வோர் உபந்யாசத்திலும் அடிக்கடி அவற்றைப் பற்றி வற்புறுத்திப்பேசி யிருக்கின்றார்; சர்காவைக் கையாளுவதன் உட்கருத்தையும், அதனால் நாம் அடையும் அரிய பயன்களையும், இன்பங்களையும் நன்றாக எடுத்துக் காட்டி யுள்ளார்.

"சர்கா எவ்வாறு சுயராஜ்யத்தைக் கொண்டுவரும்? கருத்துக்கள் என்ன வென்று நீங்கள் அறிவீர்களா? நாம் நமக்காகவே, நமக்குள்ளே வாழ வேண்டு மென்றே சுயராஜ்யம் பொருள்படும்..................நாம் அனைவரும் இன்று ஒரு பெரிய அடிமைகளாக இருக்கிறோம் என்று நான் உங்களிடம் சொல்லுகிறேன்" என்றும், நம்மால் உடுக்கப்படும் சாதாரண ஆடைகளுக்கும் நாம் பரநாட்டாரை எதிர்பார்த்து

நிற்பதை உணர்ந்த அவர் "மான்செஸ்டரும், லெங்காஷையரும் நமக்கு ஆடைகள் அளித்தலை நிறுத்திவிடில் நம்முடைய மாதர்கள் நிர்வாண தசையை யடைதல் வேண்டும்" என்றும் சொல்லி யிருக்கிறார்.

நாம் இவ்வாறு அநாகரிகர்போ லிருப்பதையும், ஒரு காலத்தில் நாம் துணிகள் நெய்வதில் மிக்க சாமார்த்தியமும் அநுபவமும் பெற்றிருந்தோம் என்பதையும், நம் நாட்டில் நெய்யப்பட்ட சில உயர்ந்த வஸ்திரங்கள் மேனாடுகளுக்கும் அனுப்பப்பட்டன வென்பதையும் மறந்து, பரநாட்டினரால் நெய்யப்படும் துணிகளை எதிர்பார்த்து நிற்றல் நன்றாமோ? நம் நாட்டில் விளையும் பருத்தியை மேனாடுகளுக்கு அனுப்பி, அந்தப் பருத்தியைக்கொண்டு அவர்கள் நெய்து அனுப்பும் துணிகளை நாம் விலை கொடுத்து வாங்கி அணிந்துகொள்வதால் நாம் அடையும் லாபம் என்ன? மேனாட்டு வியாபாரிகள் லாபம் அடைதலே யன்றோ? அவ்வாறின்றி, நம் நாட்டில் விளையும் பருத்தியைக்கொண்டு நம் நாட்டிலேயே நெய்திடில், அங்ஙனம் நெய்த துணிகளுக்காக நாம் கொடுக்கும் பணம் நம் நாட்டினரே யடைவர் அல்லவா? நம் நாட்டிலேயே வஸ்திரங்கள் நெய்யப்படின், நாம் பிறநாட்டினருடைய உதவிக்காகக் காத்திருக்க வேண்டா மன்றோ? நமக்கு வேண்டிய ஆடைகளை நாமே நெய்துகொள்ள உதவி புரிவது சர்காவே யாகும். அங்ஙனம் சர்காவினா லுண்டாகும் நன்மைகளையும், அளவற்ற பலன்களையும் அறிந்த தாசர், இந்தியர் ஒவ்வொருவரும் சர்காவின் உதவியை யுணர்ந்து, அதை ஒவ்வொருவரும் உபயோகிக்குமாறு வற்புறுத்திக் கூறிய மொழிகளுக்கு அளவும் உண்டோ? சர்காவை உபயோகித்து நாம் நன்மையையும்



இலாபத்தையும் அடைதற்காக அப்பெரியார் மேற்கொண்டு உழைத்த பெருமுயற்சிகளை அளவிட்டுக்கூற வியலாதே!

மாண்பிற் சிறந்த மாபாரதத்தின் மகிபர் மதிக்கும் விறலோனாகிய தாசர், சர்காவின் உபயோகத்துடன் கொடுமையற்ற ஒத்துழையாமையைப் பற்றியும் கட்டாயப்படுத்திப் பலமுறை இயம்பி யுள்ளார்.

"ஒத்துழையாமையின் வேலை மிகவும் கடுமையானதென்றும் நான் சொல்லி யுள்ளேன். அது கொடுமையற்ற வழியினா லல்லது அழிந்துபடும். கொடுமையின்றிச் சென்றா லல்லது முழுவேலையும் தடைபடும். எவ்வகை கொடுமையையும் எண்ணினும் அல்லது செய்யினும் ஒன்றே. அஃது ஒத்துழையாமையின் க்ஷேமத்திற்குக் கேடு விளைவிக்கும். ஆதலால், ஒவ்வோர் ஒத்துழையாமை யாளரும் கொடுமையற்றிருக்க வேண்டும். அவர் பல அபாயங்களை எதிர்த்து நிற்றல் வேண்டும். ஒவ்வோர் ஒத்துழையாமை யாளனும் சிறையிடப்படுவன்; அடிக்கப் படுவன்; அவமானப்படுத்தப்படுவன்; ஆயினும், அவன் கொடுமையற்ற தன்மையைப் பற்றி நிற்க வேண்டும். இந்நாட்டின்கடின ஆட்சியின் வழிகளையும், க்ரமங்களையும் நீங்கள் அறிவீர்கள். ஒத்துழையாமையைப்பற்றி உபந்யாசஞ் செய்பவர்களுக் கெதிரிகளாக உபயோகிக்கத்தக்கவோ பகுதிகள் அதனுடைய பெனல் கோடில் இருக்கின்றன. அம்முறைகள் ஒத்துழையாமையை வேருடன் அழித்திடுமென்று நான் ஒரு நிமிடமும் நினைக்க வில்லை. இக்கடின ஆட்சியின் செயல்கள் ஓர் ஏகாதிபத்தியத்தின் செயல்களைப் போல் ஏகாதிபத்தியமாக இருக்கட்டும். அவர்கள் ஒத்துழையாமை யாளர்களை யல்ல, நியாயங்களை முறிக்கட்டும்" என்று தாசர் புலவர் உரைத்த மெய்யுரைகளே, கொடுமையற்ற ஒத்துழை

யாமையின் இயல்பை நன்றாகக் காட்டுகின்றன. அஹிம்சா தர்மத்தைக் கைப் பிடித்து நிற்றலே ஒவ்வோர் ஒத்துழையாமை யாளருடைய கடமை என்று அவர் எண்ணிறந்த முறை சொல்லி யுள்ளார்.

'ஒத்துழையாமை யாளனுக்குத் தருமமே துணைவன்; கருணையே தோழன்; சாந்தமே நல்லதொரு மனைவி; பொறுமையே மைந்தன்' என்னும் துணிபையே தலைமேற் கொண்டொழுகி வந்தார் சித்த ரஞ்சன தாசர்.

கொடுமையற்றதாகிய ஒத்துழையாமை யியக்கத்தைச் சேர்ந்த நாள் முதல் தாம் உயிர் துறந்த நாள் வரையிலும் ஒத்துழையாமை யாளராகவே இருந்தார் தாசர். அவர் அந்த இயக்கத்தைப் பற்றிச் செய்த உபங்யாசங்கள் பலவும், அந்த இயக்கத்தின் உட் கருத்துக்களையும்; பெருமைகளையும், பலாபலன்களையும் செவ்வனே வெளிப்படுத்தின. அவற்றைக் கேட்ட அறிஞர் பலரும், அந்த இயக்கத்திற் சேர்ந்து நாட்டின் நன்மையைக் கருதி யுழைக்க லாயினர். சர்காவின் பெருமையும், நன்மையும் ஒவ்வொருவரும் தெரிந்து கொண்டனர். கொடுமையற்ற தன்மை நாடெங்கும் பரவிற்று. ஒத்துழையாமை யியக்கம் செழித் தோங்கி வளர்ந்தது.

கேட்போர் உள்ளங்கள் நெக்குருகுமாறு ஒரு பொருளில் உள்ள உண்மைகளை யெடுத்துச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் சொல்லி உபங்யசிப்பதில் பெரு நாவலராம் நம் சித்த ரஞ்சன தாசருக்கு இணை ஒருவரும் இலர். அத்தகைய சிறந்த திறமையும், புத்திக்கூர்மையும் படைத் திருந்ததனாலேயே அவருடைய சொற்களை உலகத்தினர் அனைவரும், பொன்னே போலப் போற்றலாயினர்; அம்மொழிகளுக்கிணங்க நடக்கலாயினர். ஒத்துழையாமை யாளராகித்



தாசர், கூறிய மொழிகளும், செய்த செயல்களின் திறமைகளும் நாம் அனைவரும் நன்கு அறிந்தனவே யாம். ஆதலின், அவற்றைப் பற்றி இன்னும் விவரித்து எழுத விரிவஞ்சி விடுத்தனம்.

---

# அத்தியாயம் 13

## சிறைச்சாலையே தவச்சாலை

ஆங்கிலேயர்கள் நம் பாரத கண்டத்தை ஆளக் கூடாதென்னும் கருத்தை மேற்கொண்டு தாசர், ஒத்துழையாமை இயக்கத்தைச் சேர்ந்தார் அல்லர். அவருடைய உபங்யாசங்கள் ஆங்கிலேயர்களை நம் நாட்டினின்றும் தொலைத்திடும் எண்ணத்துடன் கூடியன வல்ல. அவர், தாய் நாட்டின் நலத்திற்காகப் பாரத மாதாவின் தொண்டை மேற்கொண்டது,—ஆங்கிலேயர்களுடன் பொருதற்கே யல்லவென்று திடமாகக் கூறலாம். அவருடைய சண்டை, நம் நாட்டை யாளும் ஆங்கிலேயர்களுடைய அரசியல் முறைகளைப் பற்றியதே யாகும். அம்முறைகள், நம் நாட்டின் நலத்தையும் உரிமைகளையும் அடக்கி நிற்கின்றன வென்று அவர் கொண்டார். ஆங்கிலேயர்க ளென்றும், மேனாட்டினர்கள் என்றும், பிறமதத்தினர்கள் என்றும், அவருக்கு வெறுப்பு உண்டாக வில்லை. அவர், தம் நாவாகிய ஒரு பெரிய சேனையுடன் கூடி அரசாங்கத்தினரை யெதிர்த்துச் சண்டை செய்தது நாட்டின் நலத்தை நாடாத ஆட்சியைப் பற்றியதே யாகும். அதைப் பற்றிக் கீழ் வரும் அவருடைய மொழிகளிலிருந்தே நன்கு அறியலாம்.

"என்னுடைய சண்டையெல்லாம் ஒருவரைப் பற்றியதன்று. என்னுடைய சண்டை அரசியல் முறையைப் பற்றியதே யாகும். இந்நாட்டின் கொடிய ஆட்சிக்குக் காரணம் அம்முறையே யாகும். அம்முறையேன் பழுதாயிருத்தல் வேண்டும்? உத்தரவாதம் இல்லாததனாலேயே யாம். அம்முறை குடிகளுடைய நலத்தைப் பொருந்தியதன்று; ஆங்கில பாராளு மன்றத்தினர் கட்டளைகளையே ஏற்று ஆளுதலே யாகும். ஆங்கில பாராளு மன்றத்தினருக்கு இந்தியாவைப் பற்றி ஆராய்ந்து பார்க்க அவகாசம் இருக்கின்றதா? நம் நாட்டு அரசியல் முறைகளை உண்மையான உத்தரவாத ஆட்சியாக்கப் பாராளு மன்றத்தினருக்கு அவகாசமிருக்கின்றதா? இல்லை, அவர்கள் இந்தியாவைப் பற்றிக் கவனித்தலை விட்டார்கள். அவர்கள் அவ்வாறு செய்வது உணர்ச்சியின்மையினாலன்று; அவர்களுடைய சுய நலத்தை நாடுவதனாலேயே யாகும். அவர்கள், இந்தியாவைப் பற்றிய கேள்விகளைவிட பல மடங்கு முக்கியமான கேள்விகள் பலவற்றைப் பற்றித் தர்க்கித்துப் பேச வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்." என்னும் அவருடைய மொழிகளிலிருந்தே அவருடைய சண்டையின் கருத்தை செவ்வனே உணரலாகும்.

ஒத்துழையாமை இயக்கம் தோன்றியிராவிடினும் ரஞ்சன தாசர் அம்முறைக்காகப் போராடியே இருப்பார். இந்நாட்டினர்க்குரிய உரிமையைப் பெறச் சண்டையிட்டே இருப்பார். பாரத மாதா விடுதலை யடையச் சண்டை செய்தே இருப்பார். எனவே, இப்போராட்டத்தைத் தொடங்கிடுமாறு தூண்டியது, ஒத்துழையாமை இயக்கத்தின் பிறப்பன்று. அவர், நாட்டின் நலத்தை நாடவே பிறந்தவர்



அவருடைய வாக்கின் வன்மைகள் வரைதற் பாலனவல்ல. கல்கத்தா கலாசாலைகளில் படித்துக் கொண்டிருந்த மாணாக்கர்கள் எல்லாரும், தங்கள் மாணவபதவிகளை நீத்துச் சுய நலங்களை மறந்து, நாட்டின் நலத்திற்காகவும், நாட்டினர் உரிமைகளுக்காகவும், எல்லா இந்திய மகா நாட்டின் தொண்டர்களாயிருந்து, பாரத மாதாவின் தொண்டை ஏற்றுச் செய்யுமாறு செய்தவை ரஞ்சனருடைய மொழிகளே அல்லவா? பள்ளிகள் பல மாணவர்களின்றித் தியங்கக், கல்லூரிகள் பல கற்பவர்களின்றிக் கலங்கச் செய்தவை அவருடைய உபந்யாசங்களே அல்லவா? இராஜ குமாரருடைய வரவை வங்க நாட்டில் அன்புடன் ஏற்காமல் இருக்கச் செய்தவை, உண்மையையறிவுறுத்தி, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அவருடைய மொழிகளல்லவா?

தாசர் பெருமானுடைய பிரசங்கங்களைக் கேட்ட மாணவர்கள், ஆயிரக் கணக்காக எல்லா இந்திய மகா நாட்டின் தொண்டர்களாகச் சேரலானார்கள். அவ்வாறு சேர்ந்தவர்களுடைய தொகை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது. தேசாபிமானிகளுடன் மாணவர்களும் அரசியலில் தலையிட்டுக் கொண்டதைக் கண்ட அதிகார வர்க்கத்தினர், அந்த மாணவர்கள் எல்லாரையும் அவர்களுக் குரிய நியாயப் பிரமாண உரிமைகளை இழக்கு மாறு செய்தனர். நாட்டின் நலத்தை மேற்கொண்ட மாணவர்கள், அங்ஙனம் அரசாங்கத்தினர் செய்தவற்றைப் பொருள் படுத்தினார்கள் அல்லர். அதிகார வர்க்கத்தினர் கட்டளையைக் கடந்தும் மாணவர்கள் எல்லா இந்திய மகா நாட்டின் தொண்டர்களாகச் சேர்ந்து கொண்டே வந்தார்கள். அதைக் கண்டு அதிகார வர்க்கத்தினர் திகைத்தனர்.

அப்பொழுது அரசிளங்குமாரர் வங்க நாட்டை யடையலானார். அவருடைய வரவை எதிர் சென்று ஏற்காமல் இருக்கும் வண்ணம் தாசர் சில சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அவற்றைக் கேட்டு வங்க நாட்டினர் பலர், அரசிளங் குமாரருடைய வரவை ஏற்காம லிருப்பதற்குச் சித்தமாயிருந்தனர். அதைக் கண்டு அதிகாரவர்க்கத்தினர் கலங்கினர் என்றுங் கூறலாம். அவ்வாறு செய்தற்குக் காரண கர்த்தாவா யிருந்த தாசர் மீது அப்பொழுதே அதிகார வர்க்கத்தினருடைய கண்கள் பாய்ந்தன. ரஞ்சன தாசருக்கு, அவருடைய தர்ம பத்தினியும், குமாரரும், சகோதரிகளும் உடன் நின்று உதவி புரிந்ததைக் கண்ட அதிகார வர்க்கத்தினர் மிக்க கலக்கங் கொண்டனர். நிற்க,

தாசரும், அவருடைய குடும்பத்தினர் அனைவரும், அரசிளங்குமாரருடைய வருகையன்று கல்கத்தாவின் பெருஞ் சாலைகளில் நின்று கதர் ஆடைகளை விற்கலாயினர். அங்ஙனம் கதராடைகளை விற்றுக் கொண்டிருந்தவர்களுள் தாசருடைய அருமைச் சகோதரியாராகிய ஊர்மிளத் தேவியாரும், தாசருடைய இல்லக் கிழத்தியாராகிய வசந்தி தேவியாரும், அரசிளங் குமாரருடைய வருகையை ஏற்க அப்பெருஞ் சாலைகளூடு சென்று கொண்டிருந்த ஜனங்களைத் திருப்பி அவர்களுடைய வீடுகளுக்குச் செல்லுமாறு செய்து கொண்டிருந்ததைக் கண்டதும் அதிகார வர்க்கத்தினர், அவர்க ளிருவரையும் 1921-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒன்பதாந் தேதி காவலுக்குட் படுத்தினர். எனினும், அவர்க ளிருவரும் அரசாங்கத்தினருடைய எச்சரிக்கையுடன் வெளிப் போந்தனர். பாரத மாதாவினிடம் கொண்ட அன்பின் பெருக்கால் அம்மாது சிரோமணிக ளிருவரும் மேற் கொண்ட தொண்டைக் கண்டு

64A 64A.



தாசர். தாசருடைய மூத்த மருமகன்.
தாசருடைய மாமியார். தாசருடைய மகன். தாசருடைய மனைவி.
தாசருடைய இளைய மகள். தாசருடைய மூத்த மகள்.

உலகத்தினர் அனைவரும் மிக்க வியப்படைந்தனர்; அவ்விருவரையும் போற்றிப் புகழ்ந்தனர்; வாழ்த்தினர்.

நாட்டின் நலத்தை நாடி ஒத்துழையாமை இயக்கத்தைச் சேர்ந்து சிறைவாசஞ் செய்தவர்களுள் முதல்வரும், தந்தையின் பின் மைந்தன் என்பதற்கிணங்க நின்றவரும், நம் சித்தரஞ்சன தாசருடைய அருமைப்புதல்வருமாகிய ஸ்ரீமான் சிரரஞ்சனதாசரே யாவர். 1921-ம் வருடம் டிசம்பர் மாதம் ஆறாந்தேதிமாலை அவர் காவலுக் குட்படுத்தப் பட்டு, அன்றே ஆறு மாதம் காவல் தண்டனையும் பெற்றார். அந்நாள் முதல் ஒத்துழையாமை யாளர்கள் ஆயிரங் கணக்காகச் சிறைவாசஞ் செய்யலானார்கள். அவ்வருடம் டிசம்பர் மாதம் 9-ம் தேதியன்று ரோனால்ட் பிரபுவுடன் ரஞ்சன தாசர் பேசினாரெனினும், அம்மாதம் பதினோராந்தேதி ஆமடாபாத் எல்லா இந்திய மகா நாட்டைப் பற்றியதொரு கூட்டத்தில் ரஞ்சனர் தலைவராக வீற்றிருக்கையில், கிரிமினல் லா அமெண்டு மெண்டு ஆக்டின் 17-வது பி. செக்ஷன்படி சித்த ரஞ்சனரும், அவருடைய துணைவர் பலரும், காவலுக் குட்படுத்தப் பட்டனர். இவ்வழக்கைப்பற்றிய விசாரணை பல நாட்கள் நடந்தது.

“இந்தியாவிலுள்ள ஆண்பாலாரே! பெண்பாலாரே! இதுவே கடைசியாகக் கூறும் செய்தி. நீங்கள் வருத்தத்தால் இதைக்கொள்ளச் சித்தமாய் இருப்பின், வெற்றி விரைவிலேயே இருக்கிறது. நாம் இப்பொழுது அனுபவித்து நிற்கும் இத்தகைய தீவிர வேதனையினாலேயே சாதிகளின் கட்டுப்பாடு தோன்றுகின்றது. ஆயினும், நீங்கள் இந்த வேதனையைத் துணிவுடனும், தைரியத்துடனும், முழு அமைதியுடனும், அனுபவித்தல் வேண்டும். நீங்கள் கொடுமையற்ற

நெறியை வன்மையுடன் பற்றி நிற்கும் வரையிலும், கடின ஆட்சியைத் தவறுக்குவீர்கள் என்பது உங்களுடைய நினைவிலிருக்கட்டும். மகாத்மா காந்தியடிகள் எழுதிய வழியினின்றும் ஓர் அணு வளவேனும் நீங்கள் தவறினால், கடின ஆட்சியின் போருக்கு இடம் தந்தவர்களாவீர்கள். சுயராஜ்யமே நமக்கு முடிவாக வேண்டும். பகுக்கப்பட்ட சுயராஜ்யமன்று; முழு சுயராஜ்யம்; குறையாத சுயராஜ்யமே நமக்கு முடிவாக வேண்டும். ஆண்மக்களே! பெண்மக்களே! இப்பொழுது, நாம் சண்டையிடுவதன் முடிவாகிய சுயராஜ்யம் நாம் பெறலாம் என்பதைப் பற்றிக் கூறுவது உங்களுடைய பொருப்பு.

முதலிலிருந்து எல்லாக் காலங்களின் உலக சரித்திரங்களை ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் இப்பொழுது பிடித்து நிற்கும் வழியைப்பற்றி என்னாட்டினராகிலும் உரிமையைப் பெற்றிருக்கின்றனரா?

மாணவர்களுக்கு இதை நான் கூறுகிறேன். நீங்கள் ஒருகாலத்தில் இந்தியாவின் விருப்பமும் மகிமையும் ஆவீர்கள். உண்மையாகிய கல்வி கற்றல், இரண்டும் இரண்டும் நான்கெனக் கூறக் கற்றுக் கொள்வதல்ல; நம் எல்லாருக்கும் தாயாகிய பரத கண்டத்திற்கு இன்று நீங்கள் சித்தமாக இருக்கும் தொண்டை யேற்று நிற்றலே யாகும். நம்முடைய அன்னைக்குச் செய்ய வேண்டிய வேலை இருக்கிறது. உங்களுக்குள் யார் அம்முறைப்பாட்டிற்கு விடையளிக்கச் சித்தமாய் இருக்கிறீர்?" என்று சித்த ரஞ்சன தாசர், தாம் காவலுக்குட்படும் முன்னர் (10—12—21) சொன்னார். இதைத் தம்முடைய கடைசி யறிவிப்பு என்று



அவரே எழுதி யிருக்கின்றார். காவலுக்குட்படும் முன்னரே தாசர், தாம் சிறைவாசஞ் செய்ய நேரிடும் என்பதை அறிந்திருக்கிறார் என்பது இந்த அறிவிப்பின் முதல் வாக்கியத்திலிருந்தே தெரிகிறது.

அவருடைய வழக்கைப் பற்றிய விசாரணை நெடுநாள் வரையில் நடந்ததென்று முன்னரே கூறியுள்ளோம். அவர் காவலில் வைக்கப்பட்டமையால் அவ்வருடம் ஆமடாபாத்தில் நடைபெற்ற எல்லா இந்திய மகா நாட்டின் தலைவர் பதவியை அவர் ஏற்று விளங்க இயலாதவரானார். ஆயினும், அப்பொழுது அவர் அந்த மகா நாட்டிற் பேசச் சித்தமாக வைத்திருந்த பிரசங்கம், அவருடைய உயர்ந்த அறிவையும், சிறந்த இயல்பையும் நன்கு விளக்குகின்றது. அந்த உபந்யாசத்தின் சில பாகங்களை அனைவரும் எளிதில் அறியும் வண்ணம் ஈண்டு மொழி பெயர்த்துள்ளோம்.

"நாம் நம்முடைய உரிமையைப் பெற வேண்டுமென்பதற்கு நீங்கள் அனைவரும் சம்மதிப்பீர்களென்று நான் எண்ணுகிறேன். உரிமை யென்னும் பதத்திற்குப் பொருள் என்ன? எல்லாப் பொறுமைகளும் அற்றதென்று அது பொருள்படவில்லை. உதவியைச் சார்தல் என்னும் எண்ணம் அறவே ஒழிந்ததென்பது அதன் கருத்தல்ல. அம்மொழிக்குப்பொருள் கூறுதல் கடினமே. எனினும், ஒரு நாட்டினர், தம்மைத் தாம் அறிந்திடும், தம்முடைய முடிவைத் தாமே முடித்திடும் தன்மை, நிலைமை என்று ஒருவாறு பொருள் விரிக்கலாம்.

* * * *

நம்முடைய எல்லா இந்திய மகா நாட்டில் நாம், உரிமை ஒவ்வொரு நாட்டிற்கும் இயல்பானதென்றும், அவ்வுரிமை

இந்தியாவிற்கும் உரியது என்றும் கூற வேண்டும். நான் இங்கிலாந்துடன் ஒத்துழைக்கச் சம்மதிக்கிறேன். ஆனால், ஓர் உடன்பாட்டின் பேரிலேயே அப்படிச் செய்வேன். அவ்வுடன்பாடானது, இங்கிலாந்து தேயம் இந்தியாவிற்கு இயல்பான உரிமையை உணர வேண்டும் என்பதே யாம்.

* * * *

ஒத்துழையாமை யென்றால் என்ன?......... கட்டுதற்காக நாம் பிரிகிறோம். கட்டிடுதற்காக நாம் அழிக்கிறோம். ஒத்துக்கொள்ளுதற்காக நாம் மறுக்கிறோம்.......நாம் ஒவ்வொருவரும், நம் நாட்டினர் தன்மையை நாமே அறியும் வளர்ச்சியினின்றும் நம்மைத் தடுத்து நிற்கும் இரக்கமற்ற செயல்களை இயற்றும் யந்திரத்தினின்றும் உதவி புரியும் நம்முடைய கைகளை எடுத்துவிட்டால், அந்த யந்திரம் கட்டாயம் வேலை செய்யாமல் நின்று விடும். பின்னர், இந்தத் தத்துவஞானத்தின் மீதே ஒத்துழையாமை இயக்கம் நிற்கின்றது" என்னும் இப்பொருள் பொதிந்த மொழிகளே, தாசர் ஆமதாபாத் எல்லா இந்திய மகா நாட்டில் சொல்லுதற்கு வைத்திருந்த உபந்யாசத்தின் சில பகுதிகளாகும்.

காவலுக்குட்படுத்தும்போது சித்த ரஞ்சன தாசருக்கு ஐம்பதாவது ஆண்டு நண்ணி நின்றது. 1921-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம்தேதி காவலுக் குட்படுத்தப் பட்ட தாசருடைய வழக்கின் விசாரணை இரண்டு மாதங்கள் வரையில் நடந்தது. கடைசியில் 1922-ம் வருடம் பிப்ரவரி மாதம் 14-ம்தேதி அவர் ஆறுமாதம் சாதாரண காவல் தண்டனையை யடைந்தார் என்னும் செய்தி வெளிப்போந்தது. அதைக் கேட்டு உலகமுற்றும் துக்கக் கடலுள் மூழ்கியது.



சித்த ரஞ்சன தாசர் சிறைவாசஞ் செய்யவும் நேரிட்டதே! அவருடைய நிலைமை யென்ன? கல்கத்தா நீதிமன்றத்தில் ஒரு கோளரிபோல் விளங்கி நின்று, மாதம் ஐம்பதினாயிரம் ரூபாய் வருமானம் பெற்று இராஜ போகத்துடன் இருந்ததை நீத்து, மண்ணையும் பொன்னையும் விடுத்துச், சிறைவாசஞ் செய்யத் துணிந்த தேன்? நம் பொருட்டே யல்லவா? நம்முடைய குறைகளை நீக்கக் கருதியதனா லல்லவா? நம்முடைய நன்மையை நாடிச் சென்றதனா லல்லவா?

நம் நாட்டுத் தலைவர், அண்ணல், தாசர், சிறையி லிருக்க நேர்ந்தது, அவர் கொண்டிருந்த தேசபக்தியினா லல்லவா? தம் நலங் கருதாது பிறர் நலங் கருதும் பெருந்தன்மையினா லல்லவா? நாட்டினரிடம் கொண்ட அன்பின் பெருக்கால் அவர் சிறையில் வாடவும் துணிந்தார்; சகோதர வாஞ்சையினால் அவர் சிறையி லிருக்கச் சம்மதித்தார்; பாரத மாதாவின் அடிமையை யகற்ற அவர் சிறையிற் புகுந்தார். கல்கத்தாவின் கற்பகமும் நீதிமன்றத்தின் முதல்வருமாகிய அவர், பாரத மாதாவின் புதல்வர்கள் உரிமையற்ற உயிர்ப் பிணங்களைப் போலவும், இழிந்தவர்களாகவும், அடிமைகளாகவும் மதிக்கப்படுதலைக் காண வாடி, அந்தத் தோழர்கள் பொருட்டுத் தம்முடைய இன்பங்களைத் துறந்து, உரிமைக்காகப் போர் புரிந்து சிறையிலும் இருக்கலானார். பரத கண்டத் துதித்த அந்தக் குலோத்துங்கர், பாரத மாதா பெற்ற அப்பெருந்தகையார், கல்கத்தாவில் அவதரித்த அந்தக் கண்ணிய சீலர் சிறைபுகுந்தமைக்குப் பரத கண்டத்து மக்கள் அனைவரும், பிற நாட்டு மக்கள் பலரும், ஆற்றொணாத் துக்க மடைந்தார்கள்; அப்பெரியார் இனிது வாழ்ந்திருக்கக் கடவுளை வணங்கி வாழ்த்தினார்கள்; "தேசபந்து என்று அழைத்தல் அந்தத் தாசருக்கே

பொருந்தும்; அந்த உலக நேசருக்கே அப்பட்டப் பெயர் பொருத்த முடையது" என்று சொல்லிப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

சித்த ரஞ்சன தாசர் சிறைவாசஞ் செய்யக் கலங்கினாரா? இல்லை, இல்லை, சிறிதும் மனக் கலக்க மடைந்தார் அல்லர்; வருந்தினார் அல்லர்; பயந்தார் அல்லர்; அங்ஙனம் தம்மைச் சிறையி லிருக்கச் செய்தவரை வைதார் அல்லர். பதினான்கு வருடங்கள் வனவாசம் செய்து வருதல் வேண்டு மென்ற தம்முடைய சிற்றன்னையின் சொல்லைக் கேட்டவுடன் எங்ஙனம் ஸ்ரீராமருடைய முகம், அன்று அலர்ந்த செந்தாமரைப் பூவைப்போல் விளங்கிற்றோ அங்ஙனமே சித்த ரஞ்சன தாசருடைய முகமும், சிறைச்சாலையை யடைந்த நாள் விளங்கிற்று. ஆயினும், ஆறுமாத காலம் வரையிலும் பாரத மாதாவின் தொண்டைத் தம்முடைய உடலால் செய்தற் கில்லையே யென்னும் எண்ணம் மாத்திரம் அவருடைய மனத்தி லிருந்தது. பாரத மாதாவைக் காக்கத் திருவுள்ளங் கொள்ளுமாறு திருநாராயணனுடைய திருவடிகளை நோக்கித் தவஞ் செய்தற்கு அச்சிறைச்சாலையைத் தமக்குத் தக்கதொரு தவச் சாலையாகக் கொள்ள மிக்க மகிழ்ச்சி யடைந்தார். ஆ! தாசர் நாட்டினிடம் கொண்ட அன்பின் பெருக்குதான் என்னே! அவர் கொண்ட தேச பக்தியை எப்படி வரம்பிட்டுச் சொல்லக் கூடும்? எந்நேரமும், எவ்விடத்தும் நாட்டின் பற்றையன்றி வேறொன்றையும் பற்றி அவர் எண்ணியும் இலர். தாம் சிறைச்சாலையை யடைந்தமைக்கு வருந்தியவர்களைத் தேற்றி இனிதே சிறைவாசஞ் செய்யலானார் தேசபந்து தாசர்.

# அத்தியாயம் 14

## சிறை மீட்சியும், சுயராஜ்ய கட்சியும்

சிறைச்சாலையே தவச்சாலையாகக்கொண்ட தாசருடைய உயிர், நாட்டினர் உரிமை யெய்திடும் வழியையும், தேசாபிவிர்த்தியையும் நாடி நிற்க, அவருடைய உடலே சிறைவாசஞ் செய்தது. தம்முடைய மனைவி மக்களையும், உற்றார் உறவினரையும் பிரிந்து ஆறுமாத காலம் தனித்துக் கள்ளனைப் போலவும், கபடனைப் போலவும், கொலைபுரிந்தவனைப் போலவும் சிறையி லிருக்கின்றோமே என்று அவர் ஒரு கணமும் நினைத்தார் அல்லர். சிறைச்சாலையின் கொடுமைகள் அவரை நாடிற்றல்ல. தமக்காக அவர் ஒரு கணப்பொழுதும் வருந்தினார் அல்லர். ஆயினும், நாட்டின் சேவையை ஆறுமாதங்கள் நிறுத்தி வைக்க நேரிட்டதே என்னும் ஏக்கமே அவரை வாட்டி நின்றது.

ஆறு மாதங்களும் கடிதே கடந்தன. சிறைபுகுந்த ஆறாம் மாதம் கழிந்ததும் ரஞ்சன தாசர் விடுதலையடைந்தார்; வெளியே வந்தார்; வாலுருவி விடப்பட்ட வயப் புலியைப் போலக் காணப்பட்டார். தேசபந்து தாசர் சிறைச்சாலையை நீத்து வெளிப் போந்ததும், சிறைச்சாலையின் புறத்தே அவருடைய வருகையை மிக்க அன்புடன் எதிர் பார்த்து நின்றிருந்த எண்ணிறந்த தேசாபிமானிகள், அன்பாம் ஒரு வலையை வீசி அவரை அதனுள் அடக்கினர். இதுகாறும் ரஞ்சனர் அடக்கி நின்ற தேயபக்தி திடீரென்று ஒருங்கே வெளிப்பட்டது. மறுபடியும் நம் தேசபந்து தாசருக்கு

எல்லா இந்திய மகா நாட்டில் தலைவர் பதவியைத் தேசாபிமானிகள் அனைவரும் மிக்க அன்புடன் அளித்தனர்.

கதிரவனைப்போல் ஒளி கதிர் பரப்பிக் கடின ஆட்சியைக் கலக்கி நின்ற ஒத்துழையாமை இயக்கம், தலைவரை யிழந்து, நீருபூத்த நெருப்பைப் போலவும், கதிரிலாப் பரிதியைப் போலவும், கலைக ளிழந்த மதியைப் போலவும், சீர்குன்றி, ஒளியிழந்து, மழுங்கிநிற்றலைக் கண்டதும் சிறையினின்று வெளிப்போந்த சித்த ரஞ்சன தாசருடைய சித்தம் மிகக் கலங்கியது. அங்ஙனம் அந்த இயக்கம் சீர்குன்றி யிருப்பதற்குக் காரணம் பெறுதற்கரிய மெய்ப்படியாராகிய காந்தியடிகள் சிறை புகுந்தமையேயாகும் என்பதை அவர் உணர்ந்தார். தலைவரையிழந்ததால் அந்த இயக்கம் தயங்கிய தென்று அறிந்த தேசபந்து தாசர், அந்த ஒத்துழையாமை இயக்கத்தின் அங்கங்கள் சிலவற்றை மாற்றி விட்டால் கடின ஆட்சியின் வன்மையைக் கண்டிக்கலாகும் என்று எண்ணினர்; அவ் வெண்ணத்திற்கிணங்க உடனே சில அங்கங்களை மாற்றி யமைத்தார்.

சில நாட்களுக்குள் கயாவில் எல்லா இந்திய மகா நாடு கூடியது. சித்த ரஞ்சனரே அம் மகா நாட்டில் தலைவர் பதவியைப் பெற்றுச், சுதன்மையில் இந்திரனைப் போல் விளங்கினர். அந்த மகா நாட்டில் ரஞ்சனர் கூறிய மொழிகள், ஒவ்வொருவருடைய மனத்திலும் பசு மரத்தில் தைத்த ஆணியைப் போலப் பதிந்தன. அம் மொழிகள் இன்றும் எம்முடைய காதுகளில் ரீங்காரஞ் செய்கின்றன. அவர், அங்குச் செய்த உபந்யாசத்தின் சில பகுதிகளை ஈண்டுக் காண்போம்.

“இந்து தேயச் சரித்திரப் புத்தகத்தின் ஏடுகளி லெல்லாம் ஒரு பெரிய கருத்துத் தானாகவே மலருவதை காண்கிறேன். இயக்கங்கள் பல, ஒன்றன்பின் ஒன்றாக இந்தப் பாரத நாட்டிற் பறந்து சென்று, பல விரோத சக்திகளை யுண்டாக்கின. எனினும், உண்மையில் அவைகள், உயிரைத் தூண்டிக் குடிகளுடைய வாழ்க்கையை ஒரு பெரிய சாதியாகக் கூட்டு வித்தன. ஆரியர்களும், ஆரியர்க ளல்லாதவர்களும் ஒன்று சேர்ந்தது, இருபகுப்பினரும் ஒரு பகுப்பின ராதற்கே யாம். அந்தணர் இயக்கம், தனது முதிர்ந்த அறிவுடன் இந்தியா முழுவதையும் ஒருங்கு சேர்த்தது. உண்மையில் அஃது ஒருங்கு சேர்க்கும் ஒரு பெரிய சக்தியே யாகும். அந்தணர் இயக்கத்தை எதிர்த்து நின்ற பௌத்த இயக்கம், சரித்திரத்தின் பெரிய கருத்தான அதே வேலையைச் செய்து நின்றது......................................

.........................................................................................

................................ பின்னர், பலசாதி மகமதியர்கள், தாங்கள் தலைமுறையாகப் பெற்ற ஓர் அறிவின் முதிர்ச்சியுடன் வந்தார்கள். அது சிலகாலம் இந்திய சாதித் தத்துவத்தின் வளர்ச்சியை நசித்திடுமெனத் தோன்றியது. ஆயினும், மகமதியர்கள் இந்தியாவையே தங்கள் உறையுளாகக் கொண்டார்கள்; தங்கள் தோற்றத்தையும், இந்தியாவின் உணர்ச்சியையும் அவர்கள் தூண்டிவிட்டதுடன் இந்தியா உண்மையில் உறையும் கிராம வாழ்க்கையை அவர்கள் சிறிதும் தொந்தரவு செய்தார்கள் அல்லர்............பின்னர், ஆங்கிலேயர்கள், தங்கள் நூதன அறிவு முதிர்ச்சியுடன் வந்தார்கள். அவர்களுடைய அன்னிய முறைகள், இந்தியாவின் சாதித் தத்துவ முறையின் வளர்ச்சியை ஓங்கி அறைந்தது. அந்த அடியே சரித்திரத்தின் கருத்தை முற்று வித்தது. பெரிய இந்தியர் சாதி கண்முன் நிற்கின்றது. அஃது இப்பொழுதே

அதனுடைய கைகளை இமய மலைக்குமேல், ஆசியாவில் மாத்திர மல்ல, உலக முழுவதும் நீட்டுகின்றது. அது வற்புறுத்தவில்லை. அஃது, அதைக் காணுமாறு வேண்டுகிறது. அதனது உதவியை அது வேண்டுகின்றது. உலகத்தின் அமைதிக்கும், சாதித் தத்துவத்தின் உண்மைக்கும் விரோதமில்லை என்று வற்புறுத்த நான் விரும்புகின்றேன். சாதித் தத்துவ முறையினாலேயே உலகின் அமைதி வந்திடும். சாதியின் வளர்ச்சிக்குத், தளையற்ற முழு உணர்ச்சியுடன் கூடிய முயற்சி ஒன்று இன்றியமையாததுபோல் உலக அமைதிக்குத், தளையற்ற முழுசாதியே இன்றியமையாத தாகும்.

* * * *

ஆதலின், சாதித் தத்துவத்தின் உணர்ச்சியை நாம் பாதுகாக்க வேண்டும். இந்திய சாதியின் வளர்ச்சி, சுயராஜ்ய வழியிலேயே இருக்க வேண்டும். சுயராஜ்ய மென்றால் என்ன என்னும் கேள்வி அடிக்கடி கேட்கப் படுகின்றது. சுயராஜ்யம் விவரிக்கக் கூடிய தல்ல. அது மற்றைய ஆட்சி முறைகளுடன் கலந்துகொள்ளக் கூடியது மல்ல..................உண்மையான சாதி தொடங்குங்காலே சுயராஜ்யம் தொடங்குகின்றது உண்மையே. ஏனெனில், நான் முன்னரே கூறியதற் கிணங்கச் சுயராஜ்யம் சாதியின் உள்ளத்தின் வெளித்தோற்ற மாகும். சாதித் தத்துவத்தின் கேள்வி, மற்றொரு வழியிலே பார்த்தால் சுயராஜ்யக் கேள்வியே யாகும். இந்தியாவின்கண் இன்றுள்ள எல்லாக் கேள்விகளிலும் சிறந்தது சுயராஜ்ய மடைதலே யாகும்..................................
.........எனக்கு நன்றெனத் தோன்றும் ஆட்சி முறையை விளக்காமல் இத்தருணத்தை நழுவவிட என்னால் இயலாது. குடிகளாளவும், குடிகளுக்காகவும் இல்லாத எத்



தகைய ஆட்சி முறையும், சுயராஜ்யத்தின் உண்மையான அஸ்திவார மாகாது. பாராளு மன்றத்தின் ஆட்சி, குடிகளாலும், குடிகளுக்காகவு முள்ள ஆட்சி யல்ல என்று நான் உணர்கின்றேன். குடிகளுக்காக மத்திய வகுப்புச் சுயராஜ்யத்தைக் கொள்ள வேண்டு மென்று நம்முள் பலர் நம்புகின்றனர். எந்த வகுப்பு இயக்கத்தினையும் சுயராஜ்ய இயக்கமாக மாற்ற வியலு மென்று நான் நம்புகிறேன் அல்லன்...
......மத்திய வகுப்புப் பின்னர், தனது அதிகாரத்தை நீக்கிடு மென்று நான் நம்புகிறேன் அல்லன். தற்காலம் இருக்கும் வெள்ளையர் கடின ஆட்சிக்குப் பதில் இந்திய மத்திய வகுப்பின் கடின ஆட்சி வந்திடில், அஃது எவ்விதம் இந்தியாவுக்கு நலத்தை யுண்டாக்கும்? கடின ஆட்சி, கடின ஆட்சியே யாகும். என்னுடைய சுயராஜ்யத்தின் இயல்பு, குடிகள் அதையடைவதில் சேராவிடில் சம்மத மடையாது. பிரஞ்சு தேயத்திலும், ஆங்கில நாட்டிலும், மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலும்உரிமைக்காக மத்திய வகுப்பேபோராடியது.அதனுடைய பலனாக இன்றும் அதிகாரம் அவ்வகுப்பினர் கையிலேயே இருக்கின்றது.........கொடுமையற்ற சுயராஜ்யமே குடிகளினாலாகிய சுயராஜ்ய மென்னும் உண்மை யொளியை உலகத்திற்குக் காட்டிடும் நாடு, நம் இந்தியாவே யாகும்.

* * * *

தற்காலத்தில் நடமாடும் ஏற்பாடுகள் மனிதர்களை யந்திரங்க ளாக்கி விட்டிருக்கின்றன.

* * * *

அமலனாதிபிரான் திருவிளையாடல்களின் வெளித் தோற்றங்கள் சரித்திரத்தில் விளங்குகின்ற தென்பதே

உண்மைகள் எல்லாவற்றிலும் உண்மையானது. ஏகம், சங்கம், சாதி, மானிடர் முதலிய இவைக ளெல்லாம் அத்திரு விளையாடல்களின் பல் வேறு தோற்றங்களே யாகும். எத் தகைய சுயஆட்சியும், அஃது உண்மையான தெனின், கடைபிடித் தொழுகுதற்கு உரிய தெனின், இவ்வாழ்க்கையின் தத்துவத்தையே அஸ்திவாரமாகக் கொள்ள வேண்டும். இவ் வுண்மையை நன்கு அறிதலே தற்காலம் இன்றியமையாத தாகும். இஃதே இந்தியா எண்ணத்தின் பிராணன். இக் கருத்தையே ஐரோப்பிய சமீப எண்ணமும், தற்சமயம் மெதுவாக வெனினும், உண்மையாக நாடுகின்றது.

* * * *

உரிமையை யடைய வேறு இராஜ பாதை யில்லை. அப் பாதை அந்தகார மிக்க தாகவும், கடினமாகவுந்தான் இருக் கும். ஆனால், உங்களுடைய தைரியம் மறுவற்றது. உங் களுடைய தீர்மானம் உறுதியானது. அபாயங்கள் பல நேரிடினும், சில சமயங்களில் கொடுமை மிக்க கெடுதிகள் நேரிடினும், அவைகள் விரைவில் அன்னியர் ஆட்டிசியின் கூட்டிலிருந்து விடுபடுமாறு நமக்கு உதவி புரியும். ஆண்மைத் தொழிலையும் வெற்றியையும் கலக்கிடும் குற்றங்களை நீங்கள் செய்யாதீர்கள். ஆண்மைத் தொழில் ஒரு தோற்றமே யாகும். தோற்றங்கள் பெரும்பாலும் ஏமாற்றிடும் இயல்பை யுடையன. இந்த இயக்கத்தின் ஆண்மைத் தொழில்கள் இவ்வளவு அவ்வள வென்று சொல்ல வியலாது; எனினும், வெற்றியை அஃது ஈதல் உறுதி யாகும். கடின ஆட்சி இந்த இயக்கத்தின் வளர்ச்சியை யொடுக்கி, முதிர்ச்சியை நசித்திட வெண்ணிச் செய்த, இன்னமும் செய்கிற விடாமுயற்சிகளே அவ்வெற்றியை அறிவுறுத்துகின்றன........................



............கடின ஆட்சியின் கோபத்திற்குப் பலியாகத் தம்மையே யீந்த நம்முடைய அன்பார்ந்த தலைவரை (காந்தியடிகளை)ச் சிறைக் கேவியதே அதிகார வர்க்கத்தினர் எண்ணத்தை முடிக்கச் செய்த முயற்சிகளில் ஒன்றாகும். இந்த இயக்கத்தின் முடிவு வெற்றியே என்பது உறுதி யாகும்.. ஆயினும், அஃது உங்களையே சார்ந்திருக்கின்றது. உங்கள் முன் நிறுத்தப்பட்டிருக்கும் விரோத சக்திகளின் முன்னர் நீங்கள் நடந்து கொள்ளும் வழியையே அது சார்ந்திருக்கின்றதென்று நான் உங்களுக்கு முன்னறிக்கை செய்கிறேன்.

நீதியையும் ஒழுக்கத்தையும் அளவுமீறித் தொழுது நின்ற பாரசீயர்களுக்கும் ஸ்கிரைபர்களுக்கும் நாசரத் தேயத்து ஏசுநாதர் பலியானதனாலேயே கிறுஸ்துவ மதம் வெற்றியுடன் வெளிப் போந்தது. உங்கள் முன் நிறுத்தப்பட்டிருக்கும் சக்திகள், கடின ஆட்சியின் சக்திகள் மாத்திர மல்ல; அக்கடின ஆட்சி தற்காலம் பெருமையுடன், என்றும் இருக்க வேண்டுமென்று கருத்திற் கொண்டுள்ள தற்கால பாரசீயர்களுடைய சக்திகளும், ஸ்கிரைபர்களுடைய சக்திகளுமாகும். உங்களுடைய மக்களும், உங்கள் மக்களுடைய மக்களும் உங்களுடைய வருத்தங்களின் பயன்களை யடைய, உண்மைக்காகவும், நியாயத்திற்காகவும் உங்களையே பலியிடத் துணிதல் உங்கள் பொருப்பாகும். ...........ஆனால், உங்களுடைய சண்டை ஆன்ம உணர்ச்சியுடன் கூடியதெனின், உங்களுடைய ஆயுதங்கள் ஆன்ம உணர்ச்சியுடன் கூடிய ஒரு சுத்த வீரனுடைய ஆயுதங்களாக இருக்கவேண்டும். கோபம் உங்களுக்காக இல்லை; வெறுப்பு உங்களுக்காக இல்லை; சிறுமையும், அற்பத் தன்மையும், பொய்யும் உங்களுக்காக இல்லை" என்று தேசபந்து தாசர் கயா நகரத்தில் நடைபெற்ற எல்லா இந்திய மகா நாட்டில் கூறிய மொழிகளின் பொருளை ஆராய்

ந்து பாருங்கள். அவைகள் உண்மையை யறிவுறுத்துகின்றன வென்பது எளிதிற் புலப்படும்.

பசும்பொன்னால் செய்யப்பட்ட அழகிய குடத்திற்குத் திலகமும் வேண்டுமோ? இயற்கை யழகுடன் கூடிய ஒரு பொருளுக்குச் செயற்கை யழகும் வேண்டுமோ? சித்த ரஞ்சன தாசருடைய மொழிகளைப் புகழ்ந்து நாம் பேசவும் வேண்டுமோ? அவருடைய பொருள் பொதிந்த மொழிகளே அவற்றின் பெருமையையும் அருமையையும் அறிவிக்க வில்லையா?

சட்ட சபையிற் சேராமல் விலகிக்கொள்ளுதல், ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். கடின ஆட்சியுடன் ஒத்துழையாமையாளர், அந்த ஆட்சியின் ஒரு பகுதியாகிய சட்ட்சபையிற் பிரவேசிக்கலாகாது என்பதே அதன் துணிபாகும். அத்தகைய ஒத்துழையாமை, சுயராஜ்யத்தை எளிதிற் பெறாதென்று சிறையினின்றும் வெளி வந்தவுடன் ரஞ்சன தாசர் கண்டறிந்தார். மேலும், தலைவரை இழந்து முன்னிருந்த மகிழ்ச்சியையும் இழந்து, சோர்ந்து, தள்ளாடி நின்ற ஒத்துழையாமை இயக்கம், சில மாறுதல்களினாலேயே முன்னடைந்திருந்த மகிழ்ச்சியைப் பெற்றிடும் என்று அவர் எண்ணினார். சுயராஜ்யம் என்னும் கனியை ஒத்துழையாமை, சட்ட சபையினின்று விலகிக் கொள்ளுதல் என்பதுடன் கூடிய ஒத்துழையாமை என்னும் ஏணியைக் கொண்டு விரைவில் கொய்திட இயலாது என்று அறிந்த தேசபந்து, சட்ட சபையினின்று விலகிக் கொள்ளுதலை யொழித்து விட்டால் நன்றாயிருக்குமென்று உணர்ந்தார். சட்ட சபை அங்கத்தினர், நாட்டின் நலத்தைக் கனவிலும் கருதாமல், தம் நலமே பெரு நலமாகக் கொண்டு, 'சட்ட சபை அங்கத்தி



னர்' என்னும் பெயருடன் விளங்கினால் போதும் என்றெண்ணி நிற்பதைக் கண்டு சித்த ரஞ்சனர் கலங்கினார்; அத்தகைய அங்கத்தினரை யுடைய சட்டசபை இருத்தலினும் இல்லாதிருத்தலே நன்றெனக் கொண்டார்; நாட்டின் நலத்தைக் கருதாத சட்டசபை எவ்வாறு சுயராஜ்யம் என்னும் கனியைக் கொய்திடும் என்று எண்ணினார்; சட்டசபையிற் சேரக்கூடாதென்னும் அங்கத்தை நழுவ விடின், ஒத்துழையாமை யாளர் சட்டசபைகளுள் புகுந்து, நாட்டிற்கு நலத்தைத் தேட இயலுமென்று அறிந்தார். ஒத்துழையாமையாளர் சட்டசபைகளுள் நுழையாவிடின், சட்டசபைகள் பயன்படாவென்றும், சுயராஜ்யமென்னும் பழத்தை யடைய முடியாதென்றும், ஒத்துழையாமை இயக்கத்தின் அங்கங்களுள் ஒன்றாகிய சட்டசபையிற் சேரக்கூடாதென்னும் அங்கத்தை நழுவ விட்டு ஒத்துழையாமை யாளர் சட்டசபையிற் புகுதல் வேண்டுமென்றும் சித்த ரஞ்சனர், கயாவில் நடைபெற்ற எல்லா இந்திய மகா நாட்டில் வற்புறுத்திச் சொன்னார். அவருடைய நன்மொழிகளின் உண்மையை உணராத அந்த மகா நாட்டினர், அந்த உயர்ந்த அங்கத்தை நழுவ விட எண்ணினார் அல்லர்; அவருடைய மொழிகளையும், அங்க மாற்றுதலையும் ஏற்றுக்கொண்டார் அல்லர்.

தேசபந்து தாசருடைய அரிய மொழிகளின் உண்மையை யறிந்த பலர், அவர் கூறியதே நன்றெனக் கொண்டு அவருடன் சேர்ந்தனர். தாம் சட்டசபைகளிற் புகுதல் வேண்டும் என்று சொன்னதை எல்லா இந்திய மகா நாட்டினருள் பெரும்பான்மையோர் அங்கீகரிக்காததைக் கண்ட ரஞ்சனர், மனம் வருந்தினார்; எனினும், தம்முடைய எண்ணத்தைக் கைவிட்டார் அல்லர். விடா முயற்சியன்றோ அவ

ரைக் கல்கத்தா உயர்தர நீதிமன்றத்தில் ஒரு கோளரி யாக்கியது? தாம் கூறியதை மறுத்ததற்காக அவர் அம்மகா நாட்டினின்று விலகிக் கொண்டனரா? இல்லை, இல்லை, ஒருகாலும். அங்ஙனம் செய்பவ ரல்லர். "மகா நாட்டை விட்டு என்னைப் பிடித்துத் தள்ளினாலும் நான் போக மாட்டேன்" என்று அவர் சொன்னார். தாம் கூறிய மொழிகளின் உண்மையை அம்மகா நாட்டின் சகோதரர்கள் உணராததற்காக அவர் மிகவும் வருந்தினார். உடனே அவர், தம்முடைய மொழிகளின் உள்ளர்த்தத்தை யுணர்ந்து தம்மைச் சார்ந்த சிலரைக்கொண்டு ஒருகட்சியை யுண்டாக்கினார். அதுவே சுயராஜ்ய கட்சி எனப்படுவது. எல்லா இந்திய மகா நாட்டிற் குள்ளாகவே தம்முடைய சுயராஜ்ய கட்சியை நிலை நாட்டினார் தாசர்; அந்தக் கட்சியின் தலைவராக இருந்து, அதை மிகத் திறமையுடன் நடத்தினார்; இப்பாரத கண்டம் முற்றும் பிரயாணஞ் செய்தார்; தம்முடைய செயலின் உண்மையை விளக்கினார்; சுயராஜ்யகட்சியை நிலை நாட்டியதன் உண்மையை எடுத்துரைத்தார். அவற்றுடன் அவர் நின்றார் அல்லர். "அடுத்த ஆண்டிற்குள் எல்லா இந்திய மகா நாட்டை என் வழித் திருப்புவேன்" என்று உறுதியுரைத்துத், தம்முடைய கட்சியுடனும், உடல் பொருள் ஆவி யென்னும் மூவ்வாயுதங்களுடனும் நாட்டின் நலத்திற்காகவும், நாட்டினர் உரிமைக்காகவும் இரவும் பகலும் உழைக்கலாயினார் அவர். எல்லா இந்திய மகா நாட்டை என் வழித் திருப்புவேன் என்று தாம் கூறிய உறுதி மொழியைக் கனவிலும் அவர் மறந்தார் அல்லர்.

காகி நாடவில் தனி இந்திய மகா நாடும், ஆமதாபாத்தில் இந்திய மகா நாடும் கூடி முடிந்தன. அப்பொழுதே, கயா நகரத்தில் நடைபெற்ற எல்லா இந்திய மகா நாட்டில்



தாசர் பெருமான்
(சிறைச்சாலையினின்று மீண்ட பின்னர்.)

ஒத்துழையாமை இயக்கத்தில் மாறுதல் வேண்டாதார் வழி இயங்கிய அம்மகா நாட்டினர் பலரும், தாசருடைய மொழிகளின் உண்மைகளை யுணர்ந்தனர்; சுயராஜ்ய கட்சியின் ஸ்தாபன நேர்மையை ஒப்புக்கொண்டனர்; இந்திய மகா நாட்டின் சார்பாக அரசியல் வேலைகளைச் செய்திடுஞ் சுதந்தரத்தைச் சுயராஜ்ய கட்சிக்கே ஈந்தனர். சட்ட சபைக்குள் புகுந்து முட்டுக் கட்டை போடுவேன் என்று கூறிய தாசர், எல்லா இந்திய மகா நாட்டை என் வழித் திருப்புவேன் என்று சொல்லி, விரைவில் அவ்வாறே திருப்பியதைப் போலவே சட்ட சபைக்குள் புகுந்து, நாட்டின் நலத்தைத் தேடத் தொடங்கினர். சுயராஜ்ய கட்சியை நிலை நிறுத்தி ஒரு வருட மாதற்கு முன்னரே எல்லா இந்திய மகா நாட்டைத் தம் வழிக் கொண்டார் தேசபந்து. அவர், தம்முடைய கருத்துக்களை நன்கு விளக்கினர்; தம்முடைய மொழிகளின் உண்மையைச் செவ்வனே எடுத்துக் காட்டினர்; தாம் உண்டாக்கிய கட்சியின் நேர்மையை உலக முற்றும் அறிய விளக்கிக் காட்டினர்; தாம் கொண்டு வந்த மாறுதல்களை மறுத்தவர்கள், உண்மையை அன்று உணராதவர்கள் என்று காட்டினர்; சட்டசபையினுள் சிங்க மெனச் சென்றார்; சிங்க மொன்றுடன் ஒன்று சீறு செருக்கெனும்படி பாரத மாதாவின் உரிமைகளைப் பெறச் சீறி, முட்டுக் கட்டையிடத் தொடங்கினர்.

உலகத்தில் ஆண்மகன் சித்த ரஞ்சன தாசர் ஒருவரே யாவர் என்பது உண்மையே யல்லவா? சொன்னவண்ணம் செய்து முடிக்கும் தன்மை அந்த ஆண்டகை ஒருவரிடமே யமைந்திருந்தது. பிறர்க்குக் கொடுப்பதிலும், சொன்ன சொல் தவறாமல் நடக்கும் வாய்மையே தூய்மையாகக் கொள்வதிலும், வீரத்தன்மையிலும் தேசபந்து தாசருக் கிணை

சூரியகுலத் தோன்றலாகிய அரிச்சந்திரனை யன்றி வேறு எவரைச் சொல்லக் கூடும்? கலியுக அரிச்சந்திரன் என்னும் பெயர் நம் தேசபந்து சித்த ரஞ்சனதாசருக்கு மிகவும் பொருத்தமுடையதே யல்லவா? ஆ! சித்த ரஞ்சனருடைய வீரமே வீரம்! அவருடைய வடிவமே வீர வடிவ மன்றோ? பாரத மாதா பெற்றெடுத்த பெரும் வீரர் அவர் ஒருவரே யாவர். உலகத்தினர் அனைவரும் கண்ணாரக் கண்ட சுத்த வீரர் அவரே யாவர்.

---

# அத்தியாயம் 15

## இரட்டையாட்சியை யழிக்க முயற்சித்தல்

நாட்டின் நலத்தைக் கனவிலும் கருதாமல் தம் நலமே நாடிச் சட்டசபை அங்கத்தினராக வீற்றிருக்கும் தலையாட்டித் தம்பிரான்களை யொழித்துப், பாரத அன்னையின் நலத்தையே மேற்கொண்ட ஒத்துழையாமை யாளர்களைச் சட்டசபை அங்கத்தினராகச் செய்தற் கன்றோ சுயராஜ்ய கட்சியை ரஞ்சனர் பிறப்பித்தார்? எல்லா இந்திய மகா நாட்டினிடம், அதனுடைய சார்பில் அரசியல் காரியங்களைச் செய்திட அநுமதி பெற்ற சுயராஜ்ய கட்சியார் சட்டசபைக்கு அங்கத்தினராக நிற்கலாயினர். அன்னோருடைய இயல்பினை எளிதில் உணர்ந்த குடிமக்கள் பலரும், தம்முடைய ஓட்டீந்து (சம்மதம் கொடுத்து) அவர்களையே அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்குமாறு செய்தனர். குடிமக்களுடைய துணையைப் பெற்றுச் சட்டசபையிற் புகுந்த சுயராஜ்ய கட்சியினர், நாட்டின் உரிமையையும், நாட்டினர் நலத்தையும் பெறுதற்குப் போராடத் தொடங்கினர்.



சுயராஜ்ய கட்சியின் தலைவரும், அக்கட்சியின் காரணபூதருமாகிய ரஞ்சனர், அப்பொழுது, பரந்துநின்ற கெடுதிகளை யழித்த பின்னரே நல்லாட்சியைக் கட்டும் துறையில் இறங்குவது நன்றெனக்கொண்டு, தம்முடைய துணைவருடன் கெடுதிகளை யழிக்கும் வேலையைத் தொடங்கினார். 1919-ம் ஆண்டின் அரசியல் சட்டம் இரட்டையாட்சியைப் பிறப்பித்தது. இரட்டையாட்சியைத் தேசபந்து தாசர், நல்ல ஆட்சியாகக் கொண்டார் அல்லர். இரட்டையாட்சி, கடின ஆட்சியைவிட எவ்வகையினும் சிறந்த தன்று என்று அவர் எண்ணினார். இரட்டையாட்சியினும் கடின ஆட்சியே சிறந்த தென்பது அவருடைய துணிபு. குடிகளாலும், குடிமக்களுக்காகவும் உள்ள ஆட்சி யன்றோ ரஞ்சனர் கருத்திலிருந்த நல்லாட்சி? இரட்டையாட்சி தேசத்திற்கு எவ்வகையினும் நன்மை பயக்கா தென்று அவர் எண்ணினார்; ஆதலின், அந்த ஆட்சியை அடியோடும் அழித்துவிடுவதே நல்ல தென்று அவர் நினைத்துத், தம்முடைய துணைவருடன் அவ்வாட்சியை யொழிக்க முனைந்தார். 1919-ம் வருடத்து அரசியல் சட்டத்தினால் கொடுக்கப்பட்ட அந்த இரட்டையாட்சியை அடியோடும் அழித்தல் என்பது எளிதிற் செய்தற்குரிய வேலையா? இஃதென்ன மாங்காயா அல்லது புளிங்காயா மரமேறி அறுத்து அழித்தற்கு? வலிவுள்ள ஓர் அரசாங்கத்தினால் உண்டாக்கப்பட்டுக் கையாளும் ஓர் ஆட்சிமுறையை இந்நிலவுலகில் யாரால் அழிக்கக் கூடும்? தாம் செய்தற்கெண்ணிய காரியம் மிகவும் கடினமான தென்பதைத் தேசபந்து தாசர் அறிவார்; எனினும், அது செய்து

முடித்தாலன்றி நம்நாடு நன்மையடைய முடியாதென்று அவர் நம்பினார்; ஆதலின், இதுகாறும் தம்பால் நின்று தம்முடைய வாழ்நாளின் முதலி லிருந்து உதவி புரிந்து வரும் விடா முயற்சி யென்னும் உத்தமியையே துணையாக்கொண்டும், தம்முடைய துணைவரும் அந்த உத்தமியின் அருளைப் பெற்றிடுமாறு செய்தும் அவர், தாம் நினைத்த அரிய வேலையைச் செய்யத் தொடங்கினார்.

அரசாங்கத்தினர், இரட்டையாட்சியே நாட்டிற்கு நன்மையைப் படிப்படியாக உண்டாக்கிக் கொண்டே வரும் என்று நம்பினார்; ஆதலின், அதிகாரவர்க்கத்தினர் அந்த ஆட்சியை வளர்க்கத் தொடங்கினர். சுயராஜ்ய கட்சியினர், அந்த ஆட்சி ஒருநாளும் நாட்டிற்கு நன்மையை யுண்டாக்காதென்று நம்பினர்; ஆதலின், அவர் அதை யழிக்கத் தொடங்கினர். அதிகாரவர்க்கத்தினர் வளர்க்கத் தொடங்கிய இரட்டையாட்சியை யழிக்க உன்னினால், அஃது எளிதிற் செய்தற் கியலும் காரியமாமோ? மேலும், சுயராஜ்ய கட்சியினருக்கோ பக்கத்துணையில்லை. அதிகாரவர்க்கத்தினரைப் போலவே மிதவாதிகளும், மற்றைய கட்சியினரும் இரட்டையாட்சியே நாட்டிற்கு நலத்தை யுண்டாக்குமென்று நம்பினர்; ஆதலின், அவர் அனைவரும் அதிகாரவர்க்கத்தினரை யாதரித்து நின்றனர். தம்முடைய துணைவருடன் தாம் தனியே விடப்பட்டதையும், மற்றைய கட்சியினர் தம்முடைய கட்சியை யாதரியாமல் நின்றதையும் பார்த்தும் ரஞ்சனர், தாம் கொண்ட எண்ணத்தை விட்டார் அல்லர்; தம்முடைய வேலை பக்க பலமின்றி எவ்வாறு நிறைவேறும் என்று நினைத்து ஏங்கினாரும் அல்லர். முயற்சி திருவினை யாக்கும் என்னும் ஆன்றோர் உரையைக் கைப்பற்றிடுமாறு தம்முடைய துணைவர்களை வேண்டினார் தாசர். தந்தை எவ்வழி மைந்தன் அவ்வழி யன்றோ? சுயராஜ்ய கட்சியின் தந்தையாகிய தேசபந்து, விடாமுயற்சியைக் கைக்கொண்டு நிற்றலைக் கண்டதும் அவருடைய மெய்யடியார்களாகிய சுயராஜ்ய கட்சியினர் அனைவரும், விடாமுயற்சியையே துணைகொண்டு, அவர்களுடைய அருந்தலைவராகிய தாசர் பெருமானுடைய மொழிகளின்படி நடக்கலாயினர்.



தேசபந்து தாசர், தம்முடைய முழு உள்ளத்துடனும், துணைவருடனும் பெருமுயற்சிகளை மேற்கொண்டு இரட்டையாட்சியை ஒழிக்க மிக வருந்தி உழைத்தார். தம்முடைய எண்ணத்தை நிறைவேற்ற அவர் பட்ட பாட்டை அளவிட்டுச் சொல்லவுங் கூடுமோ? ரஞ்சனர் எவ்வளவுக் கெவ்வளவு அந்த ஆட்சியை ஒழிக்க முயன்றாரோ அவ்வளவுக் கவ்வளவு அதிகாரவர்க்கத்தினரும் அந்த ஆட்சியை வளர்க்க முனைந்தனர். ரஞ்சனருடைய எண்ணம் நிறைவேறா வண்ணம் இடையூறுகள் பல அவர்முன் அரக்கர்களைப்போல் நின்றன. அதிகாரவர்க்கத்தினர், சட்டசபையின் உதவியைக் கொண்டே ரஞ்சன தாசருடைய கருத்தை யழிக்க முயன்றனர். அப்பொழுதும் ரஞ்சனர் பின் வாங்கினார் அல்லர். எறும்பு ஊரக் கல்லுந் தேயுமன்றோ? படிப்படியாக வெற்றி பெறுவோமென்றே தாசர் எண்ணினார். மிதவாதிகளும் மற்றைய கட்சியினரும் தாசருடைய எண்ணம் நிறைவேறாதென்றே எண்ணினார்கள். அறிவிலிகள் சிலர், ரஞ்சனர் கொண்ட எண்ணமே தவறென்றும் கூறுவாராயினர்.

# அத்தியாயம் 16

## உலகநாயகர் நகரத்திற்கும் நாயகராயிருத்தல்

அந்நாளில், கல்கத்தா நகரபரிபாலன (முனிசிபல்) சபையின் தேர்தலில் சுயராஜ்ய கட்சியினரே வெற்றி பெற்றனர். இதுகாறும் சட்டசபையில் பக்கத்துணை யின்றி அல்லலுற்ற சுயராஜ்ய கட்சியினர், இப்பொழுது கல்கத்தா நகரபரிபாலன சபையின் தேர்தலில் எல்லாம் சுயராஜ்ய மயமே யாக்கினர். அவ்வாறு வெற்றி பெற்ற சுயராஜ்ய கட்சியினர், தேசபந்து சித்த ரஞ்சன தாசரையே அந்தச் சபையின் தலைவ (மேய) ராகத் தேர்ந்தெடுத்தனர். இதுவரையிலும் நம் இந்தியர்க்கு அந்தச் சபையில் இத்தகைய தலைவர் பதவி கிடைத்திலது. கல்கத்தா நகரபரிபாலன சபையில் முதலில் இந்தியத்தலைவர் பதவியை வகித்து விளங்கினவர் நம் தேசபந்து தாசரே யாவர். பாரத உலகத்திற்கு நாயகராகிய அவரைக் கல்கத்தா நகரத்திற்கு நாயகராகத் தேர்ந்தெடுத்ததைப் பற்றி நாம் வியத்தற்குக் காரணமென்ன விருக்கின்றது?

சித்த ரஞ்சன தாசரைக் கல்கத்தா நகரபரிபாலன சபையின் தலைவராகத் தேர்ந்தெடுத்தநாள் அவர் அச்சபையிற் செய்த முதல் உபந்யாசமே, அவர் அந்தச் சபையின் நலத்திற்காகச் செய்தற்கிருந்த வேலைகளை யெல்லாம் தெற்றென விளக்கிற்று. பொருளில்லாமையால் கல்வி கற்க இயலாத ஏழைகளுக்கெல்லாம் ஆரம்பக் கல்வியை இலவசமாக



தாசர்

(கல்கத்தா நகர பரிபாலன சபையின் முதல் இந்தியத் தலைவர்)

நகரபரிபாலன சபையின் செலவில் கற்பித்தல், ஏழைமக்களிடம் பொருள் பெறாமல் வைத்தியம் செய்தல், சுத்தமானதும் குறைந்த விலையை யுடையதுமான உணவுகளையும், பாலையும் கொடுத்தல், வடித்ததும் வடிக்காததுமான இருவகைத் தண்ணீர் ஈதல், தங்குதற்கு வீடுக ளின்றித் தயங்கும் ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல், நகரத்தின் சுற்றுப் பக்க மிருக்கும் இடங்களைச் சீர்திருத்தல், சிறிது செலவுடன்கூடிய முன்னிலும் நல்லாட்சி முதலிய நல்ல வேலைகளை முதலில் நகரபரிபாலன சபை செய்தல் வேண்டு மென்று சித்த ரஞ்சனர் தெரிவித்தார்.

“அஃது இன்றியமையாதது—பேசுதற்கும் எனக்குக் கடினமாக விருக்கும். அத்தகைய நிலைமையில் நான் இருப்பினும்—இந்திய மகா நாட்டினர் (சுயராஜ்ய கட்சியினர்) நகர பரிபாலன சபையைப் பிடித்துக்கொண்டனர் என்று பத்திரிகைகளில் விரிவாக எழுதி யிருந்தனவற்றை நீக்குதல் இன்றியமையாத தாகும். நகர பரிபாலன சபையைப் பற்றிக் கொள்வதென்றால் என்னவென்று நான் உணர வில்லை. சிலர் (இந்நகர பரிபாலன சபையின் அங்கத்தினர் பதவிக்கு) அபேட்சகராக நின்றனர். வரி செலுத்துவோர்கள், தங்களுடைய சம்மதம் (ஓட்) அங்ஙனம் நின்றவர்க்குக் கொடுத்தார்கள். இந்தியமகா நாட்டின் சார்பில் நில்லாதவர் எவ்வுரிமையுடன் (இங்கு) வந்தனரோ அவ்வுரிமையுடனே இந்திய மகா நாட்டின் சார்பில் நின்றவரும் (இங்கு) வந்திருக்கின்றனர். இங்கு, இந்திய மகா நாட்டின் உதவியில் நில்லாதவரையும், அம்மகா நாட்டின் உதவியில் நின்றவரையும் நாம் பார்க்கிறோம்.

இந்த நகர பரிபாலன சபை அரசாங்கத்திற்கு விரோதமாக நிற்கப்போகிறது என்று சொல்லப்பட்டதும் சரி. இந்த நகர பரிபாலன சபைக்கு முன்பு (எந்தத் தீர்மானத்தையும்) கொண்டுவர உரிமையையுடைய நான் இன்றியமையாத முதன்மையான வேலைகளின் விவரத்தை உங்கள் முன்னர் வைத்திடுகிறேன். அவ்வேலைகளைச் செய்வதால், நீங்கள் எவ்வகையாலும் அரசாங்கத்திற்கு விரோதமாகச் செல்லுகின்றீர்களா என்பதை நியமித்தலை நான், உங்களுக்கே விட்டு விடுகிறேன். இந்தச் சூசிபத்திரத்தில் அரசாங்கத்திற்கு விரோதமானதும், கல்கத்தாவில் வாழ்பவர்களுடைய நலத்தைத் தேடும் எவ்வகை அரசாங்கத்திற்கும் விரோதமானதுமான எதையும் நான் காண்கிறேன் அல்லன்.

என்னுடைய இயல்பு, நியாயத்தைக் காட்டிடும் வேலையைச் செய்வதற்கு இங்கு வழி காட்டலே யாகும். நகர பரிபாலன சபையை அழித்தற்கு நாம் இங்கு வந்திருக்கிறோம் அல்லம்; கல்கத்தா நகரவாசிகளுடைய நன்மைக்காகச் சில சீர்திருத்திய வழிகளால் இதை நடத்தற்கே வந்துளோம். அரசாங்கத்தினருடன் சச்சரவிட நாம் இங்கு நுழைந்தோம் அல்லம்.

இந்த நகரபரிபாலன சபை ஐரோப்பியருக்கு விரோதமாக இருக்கப் போகிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பழிப்பான சொல்லைப் படித்ததும் நான், எனக்குள்ளாகவே சிரித்துக்கொண்டேன். இந்தியர்களுக்காக இருத்தல், ஐரோப்பியர்களுக்கு விரோதமாக இருத்தலென்றாலன்றி இந்தச் சபை எவ்வாறு ஐரோப்பியர்களுக்கு விரோதமாக இருக்க வியலும்?



ஐரோப்பியர்கள் வசிக்கும் இடம் புறக்கணிக்கப்படும் என்று கூறப்பட்டது. இங்குக் கூடியிருக்கும் நல்லோர் அதை ஒத்துக்கொள்ளமாட்டார் என்று நான் திடமாகக் கூறுவேன்.

இந்த நகரபரிபாலன சபையின் முன்னர் இருக்கும் வேலை கடினமானதே. ஆயினும், செய்ய இயலாததன்று.

இந்தியர்கள், ஏழைமக்களைத் தரித்திர நாராயணனாகக் கருதுகிறார்கள் என்பது இந்தியர்களுடைய கொள்கை. அவர்களிடம் அமலன் ஏழையாக விருக்கிறான். ஏழைகளுக்குதவுதல் அமலனுக்குப் பணி செய்தலாகும் என்பது இந்தியர்கள் துணிபு. ஆதலால், ஏழைகளுக்கு உதவி புரிய உங்களுக்கு வழி காட்ட நான் முயல்வேன். சூசி பத்திரத்தின் பல வேலைகள்,— பண மில்லாதவர்க்கு ஆரம்பக் கல்வியைச் செலவின்றி யளித்தல், ஏழைமக்களிடம் பொருள் பெறாமல் வைத்தியம் செய்தல், வீடுகளின்றி வருந்தும் ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல், ஆகிய இவைகளெல்லாம் ஏழைகளைப் பற்றியனவே யாம். இவைகளெல்லாம் ஏழைகளுக்குப் பெரிய வரங்களைப் போலாகும்" என்னும் இவை ரஞ்சன தாசர், கல்கத்தா நகர பரிபாலன சபையின் நாயகராகத் தேர்ந்தெடுத்ததும் செய்த முதல் உபந்யாசத்தின் சில பகுதிகளாம். அவருடைய மொழிகளே, அவர் ஐரோப்பியர்க்கு விரோதமானவர் அல்லர் என்பதை விளக்குகின்றன. நகர பரிபாலன சபைக்கு அவர் நாயகரானது, அந்நகர பரிபாலன சபையை அரசாங்கத்தினர்க்கு விரோதமாக்கி, ஆங்கிலேயரை வாட்டிடுமாறு செய்தற்கே யாகும் என்று சிலர் எண்ணியது முழுதவறென்பது அவருடைய உயர்ந்த மொழிகளிலிருந்தே தெரிகின்றது.

அவரைப்போல் ஏழைகளுடைய துயரங்களைப் போக்கியவர் இவ்வுலகில் எவரும் இலர். நகரபரிபாலன சபைக்குநாயகராகி, இன்றியமையாததும், உண்மையிற் செய்ய வேண்டியதும், நியாயமாகச் செய்ய வேண்டியதுமான சிறந்தவேலைகளை அவரைப் போல் வேறொருவரும் செய்தும் இலர். நகரபரிபாலன சபைக்குத் தலைவராகிய நாள்முதல் அவர், ஏழைகளுடைய நலத்தையே நாடினார். ஆதலின், அம் மாநகரத்தி லிருந்த மக்கள் அனைவரும் அவரைத் தெய்வம் போலப் போற்றலாயினர். பூவுடன் சேர்ந்த நாறும் உயர்வை யடைவதொப்ப, அவருடன் சேர்ந்து, அவர் சொற்படி நடந்து, அவரைப் போலவே ஏழைகளுடைய துயரங்களைக் களைய உழைக்கத் தொடங்கிய அவருடைய துணைவர்களும் பலமக்களால் போற்றப்பட்டார்கள்.

---

# அத்தியாயம் 17

## மாளிகையும் வழங்கிய மா பெரும் வள்ளல்

இரட்டை யாட்சியை வேருடனும் அழித்தற்குக் கங்கணம் கட்டிக்கொண்ட சித்த ரஞ்சனர், தம்முடைய முழு உள்ளத்துடனும், ஒரே எண்ணத்துடனும் தாம் கொண்ட கருத்தை நிறைவேற்ற பெருமுயற்சிகளை மேற்கொண்டு பாடுபட்டார். அறிஞர்க்கு எதுதான் செய்தற் காகாத காரியம்? சொல்பவன் சொன்னால் கல்லும் கரைந்திடு மல்லவா? தம்முடைய வாழ்வைச் சிறிதும் கருதாமலும், தம் தேக சுகத்தைப் பாராமலும் பாரத மக்களுடைய நன்மைக்காகத் தாம் மேற்கொண்ட காரியத்திலேயே பகல் இரவு என்னும்



வேறுபாடின்றிக் கண்ணுங் கருத்துமா யுழைத்தார். அதனால் அவருடைய அருமைத் திருமேனி தளர்வுற்றது. சென்ற வருடம் பெல்காம் நகரத்தில் நடைபெற்ற எல்லா இந்திய மகா நாட்டுக்குச் சென்று திரும்பியதும் நம் ரஞ்சனர், நோய் வயப்பட்டார். பின்னர், அதனின்று ஒருவாறு தேறிச் சிறிதுகாலம் ஓய்வுடன் இருக்க எண்ணி அவர், பாட்னாவுக்குச் சென்று தம்முடைய சகோதரரிடம் தங்கியிருந்தார். நோயால் வருந்திக் கொண்டிருந்த காலத்திலும், ஓய்வாக இருந்த சமயத்திலும் இரட்டையாட்சியே அவர் முன்பு எப்பொழுதும் நின்று கொண்டிருந்தது. இரட்டையாட்சியை யழித்தலே தம்முடைய கடமை யென்று அவர், உறுதியாகத் தீர்மானித்தார். அந்த ஆட்சி யழிந்துபட்ட பின்னரே தம்முடைய மனம் நிம்மதியாக இருக்குமென்று அவர் உன்னினார். இரட்டையாட்சியை யொழிக்காவிடில் நாட்டிற்கு நன்மையைச் செய்தவராக மாட்டோம் என்று அவர் நிச்சயித்திருந்தார். அதனால், அவர், தம்முடைய உடம்பின் நிலைமையையும் பொருட்படுத்தினார் அல்லர்.

இது சமயம், சித்த ரஞ்சன தாசர் வழங்கிய மகத்தாகிய தியாகத்தைப் பற்றி உலகம் நன்கு அறிந்ததே. யாம் அதைப் பற்றிப் புகழ்ந்து கூறச் சொற்களும் உளவோ? தாசர், தம்முடைய பொன்னையும் பொருளையும் எல்லையின்றியும், சாதி, மதம், காலம் முதலிய வேறுபாடுகளின்றியும் வழங்கினார் என்பது இந்நிலவுலக முற்றும் அறிந்ததே யாகும். இன்னாருக்குத்தான், இவ்வளவுதான், இன்னகாலத்தில்தான் கொடுக்க வேண்டுமென்னும் நியதி அவர் கொண்டிருந்தார் அல்லர். ஒருகாலத்தில் மகாத்மா காந்தியடிகள், தாசரிடம் ‘தருமம் செய்வதிலும் உசிதா உசித மறிந்து கொடுக்க வேண்

டும்' என்று மெதுவாகக் குறிப்பிட்டனராம். அதைக் கேட்டு ரஞ்சனர் 'நான், என்னுடைய கண் மூடித் தன்மையால் கொடுத்து ஓட்டாண்டியாகப் போகிறேன் என்று தாங்கள் எண்ண வேண்டாம்' என்று பதில் கூறினராம். படிக்கும் வாலிபர்க்கும், வறுமைப்பிணியால் வருந்தும் ஏழைகளுக்கும் நம் சித்த ரஞ்சனரைப்போலக் கொடுத்தவர் எவரும் இவ்வுலகில் எக்காலத்தும் இரார். குபேரனையொத்த அரசர் முதல் குசேலனைப்போன்ற ஏழைகள் வரையில் எவரும் தேசபந்து தாசருடைய வீட்டில் நன்றாகச் சாப்பிட்டுச் செல்லலாம்; இலவசமாக ஆடைகள் முதலியவற்றைப் பெற்றும் போகலாம். ஏழைமக்களிடம் அவர் அளவுகடந்த இரக்கம் கொள்பவர். நீதிவாதித் தொழிலில் அவருக்கு நிகரான சமர்த்தர் எவரும் இலர். ஆயினும், எளியவர்களுக்காக அவர், தம்முடைய சட்ட ஞானத்தை இலவசமாகவே கொடுத்துள்ளார். ராஜீயக்கைதிகள் பலருக்கு அவர், ஒரு தம்பிடியும் பணம் பெறாமல் வழக்குகளில் ஆஜராகி வாதித்திருக்கிறார். அரசாங்கத் துறையில் சிறைபுகுந்த பலருடைய குடும்பங்களைக் காப்பாற்றி யிருக்கின்றார் அவர். பாஞ்சாலத்தில் நடந்த ராணுவச் சட்ட அமுலைப்பற்றிய விவரங்களை விசாரிப்பதற்காக அவர், பாஞ்சாலத்திற்குச் சென்றார். அங்ஙனம் சென்றுவர நேர்ந்த செலவுகளை எல்லாம் தம்முடைய கைப்பணத்தைக் கொண்டே செய்திருக்கிறார் அவர். அந்நாளில், தம்முடைய குடும்பத்தை இராஜ குடும்பம்போல் அவர் நடத்தி வந்தார். அவரிடம் வேலையாட்களே ஒரு பட்டாளம்—சேனையைப் போலக் கணக்கின்றி யிருந்தார்கள். பாஞ்சாலத்தில் தங்கியிருந்தபோது அவர், தம்முடைய சொந்தப் பணம் ஐம்பதினாயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறார். தம்முடைய உதவியை நாடினோரை அவர், என்றும் மறுத்தறியார். கேட்போருக்கு இல்லை என்று கனவிலும் அவர் சொல்லி யறியார். இந்த உயர்ந்த குணமே ஆயிரங் கணக்கான வாலிபர்களுடையமனங்களைக் கவர்ந்தது.



தம்முடைய உயிரைப் பாரதமாதாவுக்கு வழங்கி யிருந்த அப்பெரும் வள்ளல், இப்பொழுது, தாம் வாழ்ந்திருந்ததும், கல்கத்தாவின் தென்பாகத்தில் ரஸ்ஸா சாலையில் 148-வது இலக்க முள்ளதுமாகிய அழகிய பெரிய மாளிகையைப் பொது ஜன நன்மைக்காக உபயோகித்துக்கொள்ள மிக்க களிப்புடனும், முழுமனத்துடனும் வழங்கினர். அந்த மாளிகையை மேற்சொன்ன உபயோகத்திற்காக அவர், ஒரு நம்பிக்கையாளரிடம் ஒப்புவித்த நாள், உலகமக்கள் அனைவரும் அடைந்த வியப்பிற்கும் உவப்பிற்கும் அளவே கிடையாது. மாபெரும் வள்ளலாகிய தாசர், கடைசி முறையாக வழங்கிய தியாகம் இதுவே யாகும்.

அங்ஙனம் கொடுத்த பெரிய மாளிகை, சித்த ரஞ்சன தாசருடைய பெரிய தந்தையாராகிய காளி மோகன தாசரால் கட்டப்பட்டதாகும். காளி மோகன தாசருடைய புதல்வராகிய மோகன ரஞ்சனர் இளமையிலேயே இறந்துபட்டமையால் அவருடைய இல்லக்கிழத்தியார், நம் சித்த ரஞ்சன தாசருடைய இளைய சகோதராகிய வசந்த குமாரரைத் தத்து எடுத்துக்கொண்டார். வசந்த குமாரரும் இளமையிலேயே இறந்தனர்; ஆதலால், அவர் எழுதிவைத்த விருப்ப சாசனத்தி (உயிலி)ன்படி அம்மாளிகை சித்த ரஞ்சனருடைய தாயைச் சார்ந்தது. அவருக்குப் பின்னர் அது, சித்த ரஞ்சனரையும், அவருடைய இளைய சகோதராகிய பிரபல்ல ரஞ்சன தாசரையும் அடைந்தது.

அம்மாளிகை நான்கு மைல்கள் பரப்புள்ள நிலத்தின் இடையில் மிக்க அழகுடனும், சித்திர வேலைப்பாடுடனும் கட்டப்பட்டிருக்கிறது. அதன் சுற்றிலும் பார்ப்போர் கண்களைக் கவரத்தக்க அழகிய சிங்காரவனம் அமைந்திருக்கிறது. அம்மாளிகை தற்சமயம் மூன்று லட்சத்து இருபத்தெட்டாயிரம் ரூபாய் பெறுமானமுள்ளது. அதன் மீதுள்ள சிலபந்தங்களை விலக்கச் சுமார் இரண்டு லட்சத்து இருபதினாயிரம் ரூபாய் வேண்டுமெனினும், தாசர்பெருமான் பொதுஜன நன்மைக்காகச் செய்த நன்கொடை ஒருலட்சத்து எட்டாயிரம் ரூபாய்க்கு மேலாகும் எனத் தெரிகிறது.

அம்மாளிகையிலேயே சித்த ரஞ்சனர், தம்முடைய பொன்னையும், மண்ணையும், தொழிலையும் துறந்த பின்னர் வாழ்ந்து வந்தார். தாம் ஒத்துழையாமை இயக்கத்தைச் சார்ந்து, பாரத மாதாவினிடம் தொண்டு பூண்ட பிறகு அந்த மாளிகை யொன்றே அவருக்கு உரியதாயிருந்தது. சமீபத்தில் அதையும் அவர், பொதுஜன நன்மைக்காகத் தியாகஞ் செய்தனர். தாசருடைய வள்ளல் தன்மைதான் என்னே! பெருந்தியாகி என்ற பெயர் அவருக்கே பொருத்தமுடையது.

கர்ணன் குதலைமொழிகளுடன் தவழ்ந்து நடக்கும் சிறு குழந்தையாயிருந்த காலத்தில் ஒருநாள், அவன் இருக்கும் அரண்மனையை யடைந்தார் துர்வாசர். வந்த முனிவர், தவழ்ந்து நடந்து ஆடிக்கொண்டிருக்கும் சிறு குழந்தையாகிய கர்ணனுடைய அழகைக் கண்டு மகிழ்ந்து, அவனைத் தழுவி முத்தமிடத் தம்முடைய இரண்டு கைகளாலும் வாரி யெடுக்கக் குனிந்து, மிக்க அன்புடன் கைகளை நீட்டினர். யாதோ தன்னிடம் யாசித்துப்பெற முனிபுங்க



வர் கைகளை நீட்டுகின்றனர் என்று எண்ணி அந்தக் குழந்தை, தன்னுடைய நெற்றியில் சூட்டியிருந்த சுட்டியைப் பறித்து, அதை அந்த முனிவருடைய கையில் மிக்க களிப்புடன் வைக்க நீட்டியது. அதைக் கண்டு துர்வாசர் எல்லையற்ற வியப்பையும் களிப்பையும் அடைந்தார்; “கதிரவன். மதலையாகிய இவன், இச்சிறுவயதிலேயே இத்தகைய வள்ளல் தன்மை படைத்திருக்கின்றானே! இவன் வளர்ந்து பெரியவனானால், யார் யாருக்கு என்னென்ன கொடுப்பானோ? இவன் காலத்தில் இவ்வுலகில் வறுமைநோய், இவனுடைய தந்தையைக் கண்ட இருளைப்போலப் பறந்தோடுமே!” என்று சொல்லி, அப்பிள்ளையின் குணத்தை வியந்து, அப்பிள்ளையை மிக்க பரிவுடன் எடுத்து, முத்தமிட்டுச் சென்றார். இயற்கையிலேயே அத்தகைய வள்ளல் தன்மையை வாய்ந்திருந்த கர்ணன், இப்பொழுது இருப்பானாகில், நம் சித்தரஞ்சன தாசரை நண்பராகக் கொள்ளாமல் என் செய்வான்?

போர்முகத்தில் அருச்சுனனுடைய அம்புகளின் அடிகளால் மெய் தளர்ந்து, உயிர்கலங்கித் தேர்மேற் சாய்ந்திருந்த காலத்தில், அந்தணன் வடிவங் கொண்டுவந்து யாசித்த மாயனுக்குத் தன்னுடைய புண்ணியம் அனைத்தையும் பெருமகிழ்ச்சியுடன் கர்ணன் வழங்கியதே போலத் தேசபந்து தாசரும், தம்முடைய இறுதிக்காலத்தில் மாளிகையை வழங்கினார்: ஆயினும், தாசர் கொடைக்கு உயர்வு உண்டு. எங்ஙனமெனின், மாயன் யாசிக்கக் கர்ணன் கொடுத்தான். இரவாமல் ஈந்தார் தாசர்.

மா மாயன் மூவடி மண் வேண்ட, வெள்ளி அதைத் தடுக்க,

“நினைக்கிலை யென்கை நிமிர்ந்திட வந்து
தனக்கிய லாவகை தாழ்வது தாழ்வில்

கனக்கரி யானது கைத்தல மென்னின்
எனக்கிதன் மேனலம் யாதுகொ லென்றான்.

துன்னினர் துன்னல ரென்பது சொல்லார்
முன்னிய நன்னெறி நூலவர் முன்வந்
துன்னிய தான முயர்ந்தவர் கொள்க
என்னி னிவன்றனை யாவ ருயர்ந்தார்.

வெள்ளியை யாதல் விளம்பினை மேலோய்
வள்ளிய ராகி வழங்குவ தல்லார்
எள்ளுவ தென்சில வின்னுயி ரேனுங்
கொள்ளுத றீது கொடுப்பது நன்றால்.

மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயா
தேந்திய கைகொடி ரந்தவ ரெந்தாய்
வீந்தவ ரென்பவர் வீந்தவ ரேனும்
ஈந்தவ ரல்ல திருந்தவர் யாரே.

அடுப்ப வரும்பழி செய்ஞ்ஞரு மல்லர்
கொடுப்பவர் முன்பு கொடேலென நின்று
தடுப்பவ ரேபகை தம்மையு மன்னர்
கெடுப்பவ ரன்னதோர் கேடிலை யென்றான்.

கட்டுரை யுத்தம கைத்துள போழ்தே
இட்டிசை கொண்டற னெய்த முயன்றோர்க்
குட்டெறு வெம்பகை யாவது லோபம்
விட்டிட லென்று விலக்கினர் தாமே."

என்று அந்த வெள்ளியை நோக்கிச் சினந்து கூறி, மாயனைப் பார்த்து " அடியோரு மூன்று நீ யளந்து கோள்க ; தந்தனன் " என்று அன்புடன் சொல்லி நீருடன் வழங்கிய மாவலி மன்னன், நம் ரஞ்சனருடைய கொடையை யறிந்தால் மிக்க மகிழ்ச்சி யடைவானே !



தாசர் இலட்சியமாகத் தியாகம் அளித்த மாளிகை
(148. ரெ. ரஸாரோடு. கல்கத்தா)

ஒரு புறாவின் உயிரைக் காப்பதற்காகத் தம்முடைய உடல் முழுவதும் கொய்து வழங்கிய சிபி சக்ரவர்த்தி இந்நாளில் இருப்பாராகில், சித்த ரஞ்சனரை விட்டு இணைபிரியா நண்பராக இருப்பா ரல்லவா?

ஒருகாலத்தில் நீலநாகம் ஒன்றால் கொடுக்கப்பட்ட அருமை பெருமை வாய்ந்த ஓர் ஆடையைச், சிவபிரானே அணியத் தக்க தென்று எண்ணி, அப்பிரானுக்கே மிக்க மகிழ்ச்சியுடன் அதைச் சாத்தினவனும், பரிசிலர்க்குப் பெரிய யானைகளை மிகுதியாகக் கொடுத்தவனும், தன்னுடைய அரண்மனையில் தன் மனைவியாது மாங்கல்ய சூத்திரம் ஒழிய மற்றவைகளை எல்லாம் பரிசிலர்க்கு வழங்கினவனும், கொடுக்கும் இன்பத்தை யனுபவித்து அறிந்தவனுமாகிய அண்டிரன் என்னும் பெருங்கொடையாளியாகிய வேள் - ஆய் என்பான், ரஞ்சனருடைய கொடையைக் கண்டால் மிக்க வியப்படைவானே!

கடைச்சங்க நாளில் விளங்கிய கடை யெழு வள்ளல்களில் ஒருவனும், தான் ஒரு காலத்தில் மலைவழியே செல்லும் போது மயிலொன்று சிறகை விரித்து ஆடிக்கொண்டிருந்ததைப் பார்த்து "ஓ! இது குளிருங் காற்றுது வருந்தி நடுங்குகின்றது போலும்" என்று எண்ணித் தான் மேற் போர்த்திருந்த உயர்ந்த படாத்தை யெடுத்து, அம்மயிலின் மேற் சார்த்திச் சென்றவனுமாகிய வேள்-பேகன், தாசருடைய தியாகத்தைக் கேட்டால் திகைப்பானோ!

தான் ஒருநாள் பொற்றேர் ஊர்ந்து ஒருகாட்டிற் செல்லும்போது, முல்லைக்கொடி யொன்று படர்தற்குக் கொழு கொம்பின்றி வெற்றிடையி லெழுந்து காற்றால் தளர்ந்து நடுங்குவதைப் பார்த்து, அந்த ஓரறி வுயிரினிடத்தும் மிக்க

இரக்கங்கொண்டு, தான் ஏறிவந்த பொற்றேரை அந்தக் கொடியின் பக்கத்தில் கொழுகொம்பா யிருக்க நிறுத்தித் தன்னுடைய இணையடி சிவக்கக் காட்டில் நடந்து சென்றவனும், வரம்பின்றிக் கொடுத்த வள்ளலும், “கொடுக்கி லாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை” என்று சைவ சமயாசாரியராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளால் சிறப்பித்துப் பாடப் பெற்றவனும், மாரியன்ன தம்'வரையா ஈகையால் உலகமுள்ளளவும் ஓங்குபுகழ் நிறுவிய தமிழ் வள்ளல்களுள் முதன்மையானவனுமாகிய வேள்-பாரி என்பான், இக்காலத்திருப்பானாகில், தேசபந்து தாசருடைய வள்ளல் தன்மையைப் பார்த்து மெச்சி உச்சிமேற் கொள்வானே!

பாரதமாதாவின் உண்மைத் தொண்டரும், இரவலர்க்கு இனியவரும், ஏழைப் பங்காளரும், நல்லிசை வள்ளலுமாகிய தேசபந்து சித்த ரஞ்சன தாசரைப்போல் நாம் இனி யாரைக் காணப் போகிறோம்?

# அத்தியாயம் 18

## பிரதிப்பூர் மகாநாடு

சில மாதங்களுக்கு முன்னர் வங்காள மாகாண மகாநாடு பிரதிப்பூரில் கூடிற்று. அப்பொழுது, அறிஞர் பலரும் தேசபந்துவே அம்மகாநாட்டிற்குத் தலைவராயிருக்க வேண்டிக்கொண்டனர். அங்ஙனமே அப்பெரிய கூட்டத்திற்குத் தலைவர் பதவியை வகித்து விளங்கிய தேசபந்து ரஞ்சனர் கூறிய முதுமொழிகள் மறக்கற் பாலன வல்ல.



“உரிமையைப் பற்றிச் சாதியினர் கொள்கை என்னவென்று நாம் கேட்கப்படின், அதற்குச் சுயராஜ்ய மென்னும் ஒரே பதிலையே அளிக்க வியலும். இரட்டையாட்சி, சுய ஆட்சி, என்னும் இவைகளில் ஒன்றையும் நான் நம்புகிறேன் அல்லன். நான் சுயராஜ்ய மென்று விரித்துரைத்ததில் அவை பகுதிகளாயிருக்கக் கூடும். என்னுடைய அறிவு ‘ஆட்சி’ என்னும் பதத்திற்கு எவ்வாறோ விரோதமா யிருக்கிறது. அது நாட்டாட்சியாக விருப்பினும், பிறநாட்டினர் ஆட்சியாக விருப்பினும் சரியே; சுய ஆட்சி என்னும் பதத்தை மறுப்பதன் காரணமும் அதுவே யாகும்.

பின்னர், இக்கொள்கையை ஏகாதிபத்தியத்திற்குள் ஆராய்ந்து அறிய வேண்டுமா? அல்லது, வெளியில் உற்றறிய வேண்டுமா? என்னுங் கேள்விகள் பிறக்கின்றன. அக்கேள்விகளுக்கு, ‘நம்முடைய உரிமையை ஏகாதிபத்தியம் ஒத்துக்கொண்டால் ஏகாதிபத்தியத்திற்குள்ளாகவே யாகும். ஒத்துக்கொள்ளாவிடில் வெளியிலேயே யாகும்’ என்று எல்லா இந்திய மகாநாடு, எப்பொழுதும் பதிலளித்துக்கொண்டிருக்கிறது. ஏகாதிபத்தியம், நம்முடைய சாதி வாழ்க்கையின் வளர்ச்சிக்கு வேண்டியதைச் செய்திடில், ஏகாதிபத்திய எண்ணத்தையே நாம் தெரிந்தெடுக்க வேண்டும். அதற்கு மாறாக, ஜகந்நாத ரதத்தைப்போல் ஏகாதிபத்தியம், தன் இராஜநடையின் வேகத்தால் உயிரை நசித்திடில், சுயராஜ்யத்தை ஏகாதிபத்தியத்திற்கு வெளியில் நிலைநிறுத்திடும் எண்ணம் நியாயமே யாகும்.

சமீப சீர்திருத்த சட்டத்தின் வேலையை நடாத்த அரசாங்கத்தாருடன் சேர்ந்து உழைத்தாலே சுயராஜ்யம் நம்முடைய பிடிக்குள் இருக்கிற தென்று நமக்குச் சொல்லப்

பட்டது. இந்தச் சமீபசட்டம் எத்தகைய உண்மையாகிய உத்தரவாதத்தையும் குடிகளின்மீது மாற்றியிருக்கிறதென்று நாம் சம்மதியடைந்தால், நான் தாமதமின்றி அரசாங்கத்துடன் ஒத்து உழைத்து, என்னுடைய நியாய வேலையைச் சபையறையிலேயே தொடங்குவேன். ஆனால், ஒரு பொருளை அதனுடைய சாயைக்காகப் பலியிட எனக்கு விருப்பமில்லை. இச்சீர்திருத்த சட்டம் எத்தகைய உத்தரவாதத்தையும் குடிகளினிடம் மாற்றவில்லை என்பதைக் காட்ட நான், என்னுடைய வாக்குவாதங்களால் உங்களை இன்று தாமதிக்க வைக்க மாட்டேன். இந்தச் சமீபசட்டத்தின் அடிப்படை மந்திரிகளுடைய நம்பிக்கையற்ற தன்மையேயாகும். நம்பிக்கையற்ற இடத்தில் ஒத்துழைத்தலைப்பற்றிய பேச்சு இருக்க வியலாது. இதே சமயத்தில் என்னுடைய நிலைமையை நான், உங்களுக்கு விளக்க வேண்டும். சில உண்மையான உத்தரவாதங்கள் குடிகளின்மீது மாற்றப்பட்டால், நாம் ஏன் அரசாங்கத்தாருடன் ஒத்துழையாமல், இருத்தல் வேண்டும் என்பதற்கு ஒரு காரணமும் இல்லை. ஆனால்; அத்தகைய ஒத்துழைத்தலை உண்மையானதாகவும், வன்மையானதாகவும் செய்தற்கு இரண்டு பொருள்கள் இன்றியமையாதனவாம். முதலாவது,—நம்மை யாளுபவர்களுடைய உள்ளங்கள் உண்மையாக மாறுதல் அடைய வேண்டும். இரண்டாவது,—முழு சுயராஜ்யம் சமீப எதிர்காலத்தில் உடனே அளிக்கப்பட வேண்டும். நம்முடைய கட்டிடும் வேலைகளை உடனே தொடங்க நாம் பெரிய தியாகங்களைச் செய்தல் வேண்டுமென்று நான் எப்பொழுதும் கூறியிருக்கிறேன். சுயராஜ்யத்தின் அடிப்படை உடனே போடப்பட்டால், ஆளுபவர்களுடைய உள்ளங்களும் குடிகளுடைய



177582

உள்ளங்களும் உண்மையாக மாறிவிடில், ஒரு நாட்டினருடைய சரித்திரத்தில் சில வருடங்கள் ஒன்றுமில்லையே என்பதை நீங்கள் அறிவீர்கள் என்று நான் எண்ணுகிறேன்.

அக்காலம் எப்பொழுதும் வாராதென்றே நான் எதிர்பார்க்கிறேன்—உண்மையாக நான் எங்கும் உண்மையான உள்ளத்தின் மாறுதலுடைய சைகைகளைக் காண்கிறேன்—ஆனால், சமாதான முயற்சிகளெல்லாம் தவறினால், நாம், நகரக்கட்டளைக்குக் கீழ்ப்படியாமையையே நாட வேண்டுமென்னும் உண்மையை நாம் பார்த்தே நிற்க வேண்டும்.

ஆனால், நான் கூறியவாறு சமாதானச் சைகைகளை நான் எங்கும் காண்கிறேன். சச்சரவுகளால் உலகமே களைப்புற்றிருக்கின்றது. (நியாயமான வேலையை) நிர்மாணித்தற்கும், வலியுறுத்தற்கும் உண்மையாகிய ஆசையையே நான் காண்கிறேன் என்று எண்ணுகிறேன். இந்தியா, உலக சரித்திரத்தில் பெரிய பகுதியைச் செய்ய வேண்டுமென்று நான் நம்புகிறேன். அவள் (பாரத மாதா) வெளியிட ஒரு செய்தியை வைத்துக்கொண்டிருக்கிறாள். நான் இதுகாறும் பேசிய நாட்டினருடைய பொதுக்கூட்டத்தின் சபையறையில் அதை வெளியிடக் கவலையுட னிருக்கிறாள். இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்களுக்கு 'நீங்கள் உரிமையின் சம்பிரதாயத்துடன் வந்தீர்கள். கடைசித் தீர்மானத்தில் நீங்கள் கடமையாக இருக்க வேண்டிய உங்கள் உரிமையை, நாங்கள் ஒத்துக்கொள்ளின், நீங்கள் எங்களுடைய சாதிப்போராட்டத்தில் ஒத்துழைக்க மறுக்க மாட்டீர்கள்' என்று நான் கூறுகிறேன். வங்காளக் குடிகளுக்கும் 'அரசியல் உரிமைமையைக் கொள்ளத் துணிந்ததற்கு நீங்கள் பெரிய தியாகஞ் செய்தீர்கள். உங்கள்மீது அதிகார வர்க்கத்தினருடைய

கோபமாகிய ஒரு நெருப்பு வீழ்ந்திருக்கிறது' என்று நான் சொல்லுகிறேன்.

உங்களுடைய அரசியல் ஆயுதங்களை அப்புறம் வைக்கக் காலம் வரவில்லை. வருந்திச் சண்டை செய்யுங்கள்; ஆனால், சுத்தமாகப் போர் புரியுங்கள். வருதற்குக் கடமை பட்டிருக்கும் தீர்மானக் காலம் வந்திடில், 'சமாதான ஆலோசனை சங்கத்துள், முரட்டுத் தன்மையற்று, நீங்கள் உங்களுடைய வெற்றியில் உங்களுடைய இடுக்கண் காலத்தில் இருந்ததைக் காட்டிலும் பெரியோர்களாக இருக்கிறீர்கள்' என்று பிறர் கூறுமாறு தாழ்மையுடன் நுழையுங்கள். சாதித்தத்துவம், சுய உற்றறிவு, சுய முதிர்ச்சி, சுய நிறைவேற்றம் முதலியவை அவைகளது போக்கே யாகும். அஃது, அதனுள்ளேயே முற்றுப் பெறுவ தன்று. மனிதவகுப்புக்குத், தன்னுள் தன்னை யுற்றறிதற்கும், தன்னுள்ளேயே முதிர்ச்சி பெறுதற்கும், தன்னுள்ளேயே நிறைவேற்றற்கும் சாதித் தத்துவத்தின் வளர்ச்சியும், முதிர்ச்சியும் இன்றியமையாதன வாகும். நீங்கள் தீர்மான முறைகளைப் பற்றித் தர்க்கித்திடுங்கால், மனிதவகுப்பின் பெரிய உரிமையாகிய உங்களுடைய சாதித் தத்துவத்தின் பெருமையை மறந்திடாதீர்கள் என்று உங்களை வேண்டுகின்றேன் நான். எதைத் தேடவேண்டும் என்பதனுடைய விளக்கத் தோற்றத்தை நான் உடையவனாயிருக்கிறேன். ஒவ்வோர் இராஜ்யமும், அதனதன் குடிமக்களுடைய தேர்ச்சியையும் சம்பிரதாயத்தையும் அனுசரிக்கும் உரிமையையும், ஒவ்வோர் இராஜ்யமும், மற்றொன்றுடன் எல்லாருடைய பொதுச் சேவையில் பிணிக்கப்பட்டு மனிதனுடைய சேவையின் அளவைக் கட்டிடும் உரிமையையும், உலகில் வாழும் குடிகளுக்குச் சமாதானத்தின் உருவமாகிய



ஒற்றுமையையும் உடைய உரிமையுள்ள சாதிகளின் கட்டுப்பாடாகிய மிக்க பெரியதொரு கட்டுப்பாட்டிற்குள் ஒரு பெரிய கட்டுப்பாடாகிய எல்லா இராஜ்யங்களுடைய கட்டுப்பாட்டை நான் தேடுகிறேன்."

தாசருடைய அமுதவாயினின்று பிரதிப்பூரில் நடைபெற்ற மகா நாட்டில் வெளிவந்த அரிய இம்மொழிகளைப் படிக்குந்தோறும் நம்முடைய உள்ளங்கள் உருகுகின்றனவே! அவருடைய உயர்ந்த அறிவின் இயல்பையும், அவர் பாரத மக்களிடம் கொண்ட அன்பின் பெருக்கையும் உள்ளவாறு எடுத்துக்கூற எம்மைப் போன்றவர்களால் இயலுமோ? உலக மக்கள் அனைவரும் உள்ளங்கை நெல்லிக்கனி யென அவருடைய இயல்பையும், அன்பையும், திறமையும், கண்களாரக் கண்டனர். யாம் அவற்றை எவைகளுக்கு ஒப்பிட்டுச் சொல்லக்கூடும்? அவருக்கு இணை அவரையே யன்றி வேறு எவரையும் காணோம்.

# அத்தியாயம் 19

## இரட்டையாட்சியின் அழிவு

நம் நாட்டு நாயகராகிய சித்த ரஞ்சனர் அளவுக்குமீறி யுழைத்ததால், அவருடைய உடம்பு நோயென்னும் பேய் வாயிற்பட்டு நாளுக்கு நாள் வன்மையிற் குறையலாயிற்று. சென்ற மார்ச்சுமாதம் நடைபெற்ற வங்காளச் சட்டசபைக்கு அவர், தாமாகவே வர வியலாததால், ஒரு நாற்காலியில் அவரை உட்காரவைத்து அந்தச் சட்டசபைக்கு எடுத்து

வரப்பட்டதும், அவர் வந்ததன் பயனை அமைச்சர்களுடைய சம்பளம் நிராகரிக்கப்பட்டதும் ஒவ்வொருவருடைய மனத்திலும் பதிந்து கிடக்கின்றன. சென்ற ஏப்ரல்மாதம் முதல் தேதி அவர் மீண்டும் ஒரு வருடம் கல்கத்தா நகரபரிபாலன சபையின் நாயகரா யிருக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், அவருடைய தேகபலம், அவரைவிட்டுப் பிரியத் தொடங்கியது. அப்பொழுது அவருடைய உடம்புக்கு ஓய்வு இன்றியமையாததா யிருந்தது. சுவரை வைத்துக் கொண்டல்லவா சித்திரம் எழுத வேண்டும்? இதுவரையிலும் தம்முடைய உடம்பின் சுகத்தைக் கனவிலும் கருதி யறியா ரஞ்சனர், அப்பொழுது இருந்த தம்முடைய உடம்பின் நிலைமைக்கு ஓய்வு இன்றியமையாததெனத் தெரிந்து, ஓய்வுடன் சில நாட்கள் இருக்க தார்ச்லிங்கு என்னும் நகரத்திற்குச் சென்றார்.

அரசாங்கத்தினர், தம்முடைய முழுபலத்துடன் இரட்டையாட்சியை வளர்க்க மும்முறை முயன்றனர். அந்த ஆட்சியை யழிக்கச் சுத்த வீராகிய தாசர், பெருமுயற்சிகளை மேற்கொண்டு அளவின்றி யுழைத்தார்; பாராளும் மன்றம் வரையில் சுயராஜ்ய படையை யோட்டிப் போர் புரிந்தார். அதிகார வர்க்கத்தினரால் வெற்றிபெற முடியாமற் போயிற்று. இரட்டையாட்சியை யொழித்துவிட்டே மறுவேலை பார்ப்பேன் என்று உறுதிகூறிய தேசபந்து தாசருடைய எண்ணம் நிறைவேறியது. விடாமுயற்சியினாலும், தனது தலைவருடைய புத்திக்கூர்மையினாலும் சுயராஜ்ய கட்சியே வெற்றி பெற்றது. அதனுடைய எண்ணம் ஈடேறியது. வங்கநாட்டில் இரட்டையாட்சியை நிலைபெறச் செய்ய இயலாமற் போனதால், படுகுழி வெட்டி, அந்த ஆட்சியை அக்குழியிற் போட்டு அரசாங்கத்தினரே புதைத்தனர்; ஒழித்தனர். வங்கநாட்டில் இரட்டையாட்சி முடிவு பெற்றதென்பதைக் கேட்டு எல்லா நாட்டினரும், வியப்பென்னும் பெருங்கடலுள் ஆழ்ந்தவராயினர்; சித்த ரஞ்சன தாசரே உண்மைத் தொண்டர்! பேரறிவாளர்! இணையற்ற வீரர்! மாபெரும் வள்ளல்! கடவுளருள் பெற்றவர்! என்று சொல்லிப் புகழ்ந்து கொண்டாடினர்; போற்றினர். ரஞ்சனருடைய எண்ணம் நிறைவேறாதென்றும், அவர் கொண்ட கொள்கையே தவறென்றும் எண்ணிய அறிவிலிகள், இப்பொழுதுதான் ரஞ்சனருடைய அறிவின் திறமையையும், செயலின் உண்மையையும் உணர்ந்தனர்; வெட்கக்கடலில் மூழ்கினர்; தம்முடைய அறிவற்ற தன்மைக்கு வருந்தினர்; தாசரைக் கடவுளருள் பெற்ற மெய்யடியார் எனக்கொண்டு துதிக்கலாயினர்; தாசருடைய நுண்ணறிவையும் விடாமுயற்சியையும் வியந்து மெச்சினர்.



கெடுதிகளை யழிக்கும் வேலை முடிந்த பின்னரே நியாயமான ஆட்சியைக் கட்டிடும் நிர்மாண வேலையைத் தொடங்க வேண்டுமென்பதன்றோ ரஞ்சனருடைய கருத்து? கெடுதிகளை யழிக்கும் வேலை முடிந்ததென்பதை யறிந்ததும் அவர், மிக்க களிப்படைந்தனர்; ஆயினும், நல்லாட்சியைக் கட்டிடும் தம்முடைய வேலையைத் தொடங்குவதன் முன்னர், சின்னாள் ஓய்வுடன் இருக்க எண்ணினர்; தார்ச்சிலிங் கென்னும் பதியிலேயே இருந்தனர்.

# அத்தியாயம் 20

## பாரத மாதாவின் துக்கம்

*இரட்டையாட்சி யழிந்தபின்னர் சில நாட்களே கழிந்தன. முறைக் காய்ச்சலால் சிறிது வருந்திக்கொண்டிருந்த நம் தேசபந்து, இந்தக்கொடிய குரோதன ஆண்டு, ஆனித்திங்கள் மூன்றாம் தேதி செவ்வாய்க்கிழமையன்று (16-6-1925) ஐந்து மணிக்கு, இயற்கையழகு செம்மேனி கொண்ட காலத்தில், அருக்கன் அன்பர்களுடைய துயரங்களைக் காணப்பொறாமல் ஆழ்கடலில் மூழ்கும்வேளையில் தார்ச்சிலிங்கிலிருந்து திடீரென்று திருமாமணிமண்டபம் அலங்கரிக்க எழுந்தருளினர்.*

அந்தோ தெய்வமே! அங்கம் பதறுகின்றதே! மெய் சிலிர்க்கின்றதே! மனம் நடுங்குகின்றதே! நாத் தடுமாறுகின்றதே! கண்ணீர் பெருகுகின்றதே! உள்ளம் கலங்குகின்றதே! எழுதுகோல் நகரேன் என்கிறதே! ஆ சதிகார தெய்வமே! என்ன செய்வ தென்றும் தோன்ற வில்லையே! என்ன எழுதுவ தென்றும் விளங்க வில்லையே! எழுதுகோலும் எழுதிட மறுக்கின்றதே!

வங்கச் சிங்கமே! இந்திய மணியே! நீதிமன்றக்கோளரியே! உத்தம உயர்குண உறையுளே! இரவலர் தம் இறைவனே! அமலனது அடியார்களுள் ஆதியே! தேயபக்தியே தெய்வ வழிபாடெனக் கொண்ட சோதியே! தேயபக்தி தேங்கிய தேவே! உலகநாதனே! பாரத அன்னையின் ஆருயிர்ப் புதல்வ! மன்னுயிரை உம்முயிராகக் கொண்ட தலைவ! மாற்



றலர் தம் கூற்றுவனும் மன்னா! மன்னரெலாம் புகழ்கின்ற பெருவலி சேர் மகிபா! தேசீய வீரர்களுக்கோரு வேந்தே! சுயராஜ்ய படையை யோட்டிப் பாராளு மன்றமெலாம் புகழ் பரப்பி வெற்றி கொண்ட விறலோய்! வீரர் கோவே! மீட்சிப் போரதனில் படையாண்ட புண்ணியனே! விடுதலைப்போர் வெற்றிக்கெனவே உதித்த உத்தமனே! வீரர்களுள் நாயகமே! நீதிக் கரசே! நிலையார் கீர்த்தி மாரதனே! கொடைவள்ளால்! முப்பெரும் புவியினரும் புகழும் ஒப்பிலா வீரனே! மண்ணாடர் யாவரையும் வாழ்விக்க வந்த வடிவே! நந்தாத மணி விளக்கே! ஆசிலாமணியே! மாசிலாமணியே! ஒப்பிலாமணியே! அற்புதக் கோவே!

ஏழைப்பங்காளா! இரட்டை யாட்சியை வங்கத்தில் சிதைத்த ரஞ்சன! மண்ணுலகம் போற்றும் மதியினாய்! உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் மொழியினாய்! அஞ்சாத நெஞ்சம் படைத்த அதிதீர! எம் ரஞ்சன வள்ளலே! சித்த ரஞ்சன தாசரே! தேயபந்துவே! எங்குற்றீர்? எம்மைவிட்டுப் பிரிந்தீர்கொல்! நன்னாட்டை நீத்துப் பொன்னாட்டை நாடினீர் கொல்; பூதவுடம்பைவிட்டுப் புகழுடம்பை எய்தினீர் கொல்! மண்ணினர் தளையைச் சிதைத்து, விண்ணினர் தளையைச் சிதைக்கப் போந்தீர்கொல்! அலைகடலில் எம்மை அல்லலுற விடுத்து அமலனுடைய திருவடிகளை யடைந்தீர்கொல்! கஞ்சனைக் காய்ந்த கடல்வண்ணன்பால், உலக வஞ்சனைகளைக் காய்ந்து சென்றீர்கொல்!

பெண்ணுருக்கொண்டு இன்னமுதம் வஞ்சித்த கள்வ! இன்று நீ எங்களையும் வஞ்சித்ததேன்? தாசருடைய வேலை முடிந்ததென் றெண்ணினையோ! உரிமையைப் பெற்றிடில் நாங்கள் உன்னை மறந்துவிடுவோ மென்று நினைத்தனையோ!

கலியுகத்தில் கர்ணன் இருத்தலாகா தென்று கருதி எம் சித்த ரஞ்சன வள்ளலைக்கொண்டு சென்றனையோ! ஓ மாயா! உன் மாய மென்ன மாயம்! நீ செய்தது நியாய மல்ல! அநியாயம்!

ஆ! அன்னையே! பாரத அன்னையே! நீ செய்த தவம் என்னே! இடிமேல் இடிவிழுந்ததைப்போல் உன்னுடைய அரு மருந்தன்ன மகனை—உன்னை விடுவிக்க வந்த உயர்ந்த திரு மகனை இழந்து நிற்கின்றனையே! ஐயோ! வாடுகின்றனையே! உன் கைத்தளை சிதையக் காலம் வந்திற்றிலையோ!

ஓ ரஞ்சன வள்ளலே! உம்மைப் பிரிந்து நாங்கள் என்ன செய்வோம்? எவ்வாறு உய்வோம்? எங்கு நிற்போம்? எவரை நாடுவோம்? அரசிழந்த குடியானேம்! கதி யாரு மிலர்! பாரத மாதாவை விட்டுப்பிரிய உமக்கு மனமும் வந்ததா? எங்களிடம் உமக் கென்ன வெறுப்பு?

சித்த ரஞ்சன தினகர! நீரா இறந்தீர்? நீர் அன்று சூரியனுடன் பிறந்தீரே! இன்றும் சூரியனுடனே மறைந்தீரே! ஆ உம்முடைய வீரமே வீரம்! நீர் மறையவே நம் அன்னையின் ஆசையெல்லாம் மறைந்தனவே! எங்களை அல்லல் வெளியில் விட்டு நீர் அமலன் ஒளிவெளியில் விளங்கச் சென்றது நியாயமோ! எங்கள் அருமைத் தூய மணியே! பெருஞ்சாந்த மணியே! தியாக மணியே! எங்கள் வீர சிகா மணியே! இந்திய நன் மணியே! உம்முடைய உயிராபிரிந்தது? ஐயோ தெய்வமே! என்ன செய்வோம்? ஆருத் துக்கம்! இன்று ஆறுமோ? நாளை யாறுமோ? ஆருது! ஆருது! உயிர் உள்ளளவும் ஆருத்துக்கமே! விடா வருத்தமே! துஞ்சாத் துன்பமே! பொறுக்கவொண்ணுத் துயரமே! வரைய வொண்ணு வருத்தமே!

வீர மென்னும் உடல்கொண்டு, பொறை யென்னும் அணி பூண்டு, விடாமுயற்சி யென்னும் கவசமணிந்து, நாக்கென்னும் ஆயுதங்கொண்டு, தேயபக்தி யென்னும் தேரேறித், தெய்வ பக்தியென்னும் குதிரைகளைப் பூட்டிச், சகோதர வாஞ்சை யென்னும் சேனையுடன், உரிமை யென்னும் நாட்டிற்குப் போர் புரிந்த வீரரே! நீர் சென்றதன் காரணம் தெரிந்தது! நம் நாட்டின் உரிமையைப்பற்றிய வழக்கை, விண்ணவர் நாட்டில் உரைத்து, வெற்றியைப் பெற்றுவரச் சென்ற திலக முனிவரை யழைத்துவரச் சென்றீர்போலும்! விரைவில் திரும்பிவாரும்! சுயராஜ்ய கட்சியின் வேலையைப் பாரும்! உரிமையை விரைவில் தரக் கோரும்!



பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமனே! உமக்குக் கருணை யில்லைபோலும்! கருணாகரன் என்னும் பெயர் உமக்கு யாவர் கொடுத்தவர்? எங்கள் ரஞ்சனரை ஏன் அழைத்துச் சென்றீர்? பாரதமாதாவின் உரிமையைப் பெறுதற்குரிய வழிகளை உபதேசித்தனுப்ப எங்கள் தலைவரைத் திருமாமணிமண்டபம் அழைத்துச் சென்றீர்கொல்! விரைவில் அவரை ஈண் டனுப்பும். எங்கள் அன்னை காப்பார் இன்றிக் கலங்குகின்றனள். விரைவில் அவரை இங்கு விடுப்பீராகில் நாங்கள் உமக்கு எக்காலமும் ஆட்பட்டிருப்போம்.

கண்ணு! உமக்குக் கண்ணில்லையா? நாங்கள் அனைவரும் ஒருங்கே அழுவது உமக்குத் தெரிய வில்லையா? நீர் அன்று வெண்ணெய் திருடியதனு லல்லவா நாங்கள் இன்று இவ்வாறு அழுகின்றோம்? நீர் வெண்ணெய் திருடியதற்காக ஆயர் மகளிர் உம்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க, அவ் வழக்கில் நீர் வெற்றி பெற, நிகரற்ற நீதிவாதியாகிய எங்கள் ரஞ்சனரை அழைத்துச் சென்றீர் போலும்! பாரதமாதாவின் உரிமை வழக்கில் நீதிவாதித்தொழிலை ஏற்று விளங்க இங்கு

யாரும் இலர். ஆதலின், எங்கள் ஆண்டகையை விரைவில் இங்கு அனுப்புக. உம்மை வணங்கி வாழ்த்துகின்றோம்.

எல்லா உயிர்களையும் படைக்கும் பிரம்மதேவரே! நீர் திரு நாரணனுடைய உந்தித்தாமரையில் உதித்தும், சத்திய லோகத்தில் வாழ்ந்திருந்தும் இத்தகைய கேடுதி செய்யலாமா? உம்முடைய சத்தியலோகத்தில் என்ன அசத்தியம் நடந்தது? அதை யழிக்கவா எங்கள் தேசபந்துவை யழைத்துச் சென்றீர்? உம்மிடம் அவர் அங்கிருந்தால், இங்குப் பாரத நாட்டையடையும் அசத்தியங்களை யழிக்கும் வீரர் யாவர்? விரைவில் எங்கள் ரஞ்சனரை இங்குக்கொண்டுவந்து விடுக. உம்முடைய திருவடிகளைப் பணிகின்றோம் தந்தையே!

முக்கண் மூர்த்தியே! சிவகணங்களுக்குச் சுயராஜ்ய கட்சியின் நேர்மையை யெடுத்துரைக்க எங்கள் சித்த ரஞ்சனரை நீர் கயிலையங்கிரிக்கு அழைத்துச் செல்லுதல் நியாயமாமோ? அவர் இல்லாமையால் இங்குச் சுயராஜ்ய கட்சி கதறுகின்றது. பாரத அன்னை அலறுகின்றனள். விரைவில் அவரை இவண் அனுப்புக. இன்றேல், பாரதமாதா, கயிலையங்கிரியுடன் ஒத்துழையாமைக்கு ஓர் இயக்கம் உண்டாக்குவாள். விரைவில் எங்கள் நாயகரை இங்குச் செலுத்துக. உம்மைப் போற்றித் துதிக்கின்றோம்.

ஐந்தரு நிழலில் இந்திராணியுடன் வீற்றிருக்கும் தேவராச! உம்முடைய சுதன்மையில் சட்டஞானத்தில் வல்ல நீதிவாதி ஒருவர் இருக்க வேண்டுமோ? அதற்காகவா எங்கள் ரஞ்சனரை அழைத் தேகினீர்? இங்குப் பாரத அன்னையின் உரிமையைப்பெற்றிடும் சட்டசபையில் தலைவராயிருக்கத் தக்கவர் யாவர்? உம்மிடமிருக்கும் அப்ஸ்வர பெண்களைக்கொண்டு எங்கள் சித்த ரஞ்சனரை மயக்கி அவ்விடத்திலேயே வைத்துக்



கொண்டிருக்க உம்மால் இயலாது; இயலாது. மேனகையைக் கண்டு மயங்கிய விசுவாமித்திரர் அல்லர் எங்கள் ரஞ்சனர். எங்கள் சித்த ரஞ்சன தாசருடைய அறிவை நீர் அறிவீரே! உடனே அவரை இங்கு அனுப்புக. இல்லாவிடில், எங்கள் பாரத அன்னை, உம்முடைய பொன்னுட்டை மண்ணுடாகச் சபித்திடுவள்; மறுபடியும் உம்முடைய செல்வங்களெல்லாம் கடலில் விழுமாறு சாபமிடத் துர்வாசரைத் தூண்டிடுவள்.

தென்திசைக் கோமானே! நடுநிலைமையினின்று சிறிதும் தவருத தருமர் என்று உம்மை அனைவரும் சொல்லுகின்றனரே! உம்முடைய தருமலோகத்தில் என்ன அதருமம் விளைந்தது? தருமத்தின் உரிமையை வாதித்து நிலைநாட்டிடதேற்கா எங்கள் தேயபந்துவைத் தூக்கிச் சென்றீர்? பூவுலகத்தில் விளையும் அதருமங்களை யழித்தற்கு வல்லவர் இங்கு யார் இருக்கின்றனர்? ஆதலின், உடனே எங்கள் சித்த ரஞ்சன தாசரை இங்குக் கொண்டு வந்து விடுத்துச் செல்லுக. இன்றேல், உம்முடைய செயலைப் பற்றிப் பாரத அன்னை, பரமசிவனிடம் சொல்லுவள். நீர் மறுமுறையும் மண்ணிற் சாய்ந்து கிடக்க நேரிடும்!

ஆ! கருணையங்கடலே! தியாக ராஜா! தேயபந்துவே! சித்த ரஞ்சன தாசரே! எங்குச் சென்றீர்? யாண்டிருக்கின்றீர்? எங்களை எவ்வாறு மறந்தீர்? கன்றைப் பிரிந்த கறவையைப் போல் நாங்கள் கதறுகின்றோமே! குழந்தையைப் பிரிந்த அன்னையைப்போல் நாங்கள் அலறுகின்றோமே! எங்கள் முன் விரைவில் வருக! வருக! இதுகாறும் உம்முடைய பெரு வாழ்வை—அற்புத அறிவை—அருஞ் செயல்களைப் பற்றி யெழுதிய யாம், இனி எங்ஙனம் உம்முடைய பிரி

112A

வைப்பற்றி யெழுதத் துணிவோம்? ஐம்பத்தைந்து வயதில் முப்பதுகோடி மக்களுக்கு உயிராயிருந்த உம்முடைய பிரிவை மனத்தாலும் நினைக்க முடிய வில்லை; வாயாலும் சொல்ல இயல வில்லை; எழுத்தாலும் எழுதக் கூட வில்லை; ஊன் உடல் உயிர் எல்லாமும் உருகுகின்றனவே! நடுங்குகின்றனவே! என் செய்வோம்? எங்ஙனம் உயிர்பிழைப்போம்? எவ்வாறு உம்முடைய பிரிவை ஆற்ற வல்லோம்? உம்முடைய அன்னை—பாரதமாதா எங்ஙனம் வாழ்வள்? உம்முடைய மனைவி, மக்கள், உற்றார், உறவினர் எவ்வண்ணம் உயிர் வாழ்வர்? கல்கத்தா நகரம் எப்படி வாழும்? வங்காளம் எவ்வாறு வாழ்ந்திருக்கும்? இந்திய தேசம் எங்ஙனம் வாழும்? பெறற் கரிய கற்பகத்தை இவ்வளவு விரைவில் இழந்து வருந்த நாங்கள் என்ன பாவம் செய்தோமோ? ஆ தெய்வமே? அநியாய தெய்வமே!!

*மதியிலிகள் சிலர் இம்மண்ணுலகின்கண் இருக்கின்றனர் என வெறுத்து, இவ்வுலகை யுதைத்துத் தள்ளித் தேயபந்து விண்ணுலகைத் தார்ச்சிலிங்கிலிருந்து அடையுங்கால் அவருடைய மனைவியாரும், அருமைப் புதல்வரும் அவர் பக்கலிலேயே இருந்தனர். காலனுடைய வேதனை அவரை யணுகிற்றில்லை. பேசிக்கொண்டிருந்தே அவர், தம்முடைய பூதவுடலை நீத்தனர். அவர், தம்முடைய ஐம்பத்தைந்தாவது வயதில் நம்மைவிட்டுப் பிரிந்தனர். அவர் உயிர் நீத்ததை யறிந்தவுடன் காற்றுமோதத் தளர்கின்ற பூங்கொடியைப்போன்ற உடம்பையுடைய அவருடைய பத்தினியும், புதல்வரும், அருகிலிருந்த அறிஞர் பலரும் மாவாதம் (வடதிசையினின்று வீசும் காற்று அல்லது பெருங்காற்று) சாய்த்த மாமரமே போலக் கீழே விழுந்தனர். தார்ச்சிலிங்கி*



லிருந்த மாந்தர் அனைவரும் அவ்வாறே வீழ்ந்து ஆற்றுவாராயினர்.

தேசபந்து தாசர் உயிர் நீத்தார் என்னும் செய்தி, அவர் உயிர்துறந்த சில விநாடிகளுக்குள்ளேயே காட்டுத் தீயைப் போல் எங்கெங்கும் பரவி அல்லலை விளைவித்தது. 'தேயபந்து தேவேந்திரனிடம் சென்றார்; தேவேந்திரனிடம் சென்றார்' என்னும் பேரரவம் உலகமுற்றும் நடித்தது. அச் செய்தி செவிக் கெட்டியதும், ஒரு மின்சார இடி உச்சியில் விழுந்து, உள்ளங்கால் வழியே உருவி யோடியதைப்போல் இவ்வுலகமக்கள் அனைவரும் திடுக்கிட்டுத் திகைத்தனர்; மயிர்ச்சிலிர்ப்படைந்தனர்; மெய்ம் மறந்தனர்; பூமியில் விழுந்தனர்; ஒருவாறுதேறி ஓவெனக் கூக்குரலிட்டு அலறி யழுதனர். துக்கவிருள் கொண்டல் கொண்டலாகக் கிளம்பிற்று. பின்னர், தேசபந்துவின் கட்டழகு, கல்வி, செல்வம், தியாகம், வீரம், தேசபக்தி முதலியன, ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் புகுந்து உருக்கி யுருக்கி ஆற்று நீரெனக் கண்ணீர் பெருக்கின. உருகுதற்கு ஒவ்வொருவருக்கும் உள்ள ஓர் உள்ளம் போதவில்லை; நீர்ப் பெருக்கிற்கு இருகண்கள் போதவில்லை. தாசர் பிரிவைப்பற்றி அந்நாள் இவ்வுலகில் வருந்தி யுருகாத உள்ளமே யில்லை; நீர் உகுக்காத கண்ணே யில்லை.

தேயபந்து இவ்வுலகவாழ்வை வெறுத்தார் என்ற செய்தி காதிற் கெட்டியதும் சுயராஜ்யக் கட்சியினர், வேக மடங்கிய வேழத்தைப்போலத் திகைத்தனர்; பூமியில் விழுந்து புரண்டனர்; அழுதனர்; வேதனைமுற்றிட வெந்து வெந்து, கொல்லன் ஊது உலையில் நெருப்பைப் போல் நெட்டுயிர்ப் பெறிந்தனர்; "ஆ! தலைவரே! மதக்களிப்பினை யுடைய யானையை யொத்த உம்முடைய வீரவடிவத்தை இனி எப்பொழுது

காணப் போகிறோம்? எந்நாள் உம்முடைய கட்டளையைத் தலைமேலேற்றுச் செய்யப் போகிறோம்? இனி எக்காலத்தில் எங்கள் கூட்டத்தின் மத்தியில் மாணிக்கத்தைப்போல் விளங்கப் போகின்றீர்? ஓ குருவே! உம்மைப் பிரிந்து நாங்கள் இங்கிருப்பதேன்?" என்று சொல்லிப் புலம்பினர். அவர் அங்ஙனம் அழுது வருந்தி யடைந்த வருத்தத்தினை யாவர் சொல்ல வல்லார்?

சித்த ரஞ்சன தாசர் விண்ணுலகை யடைந்ததைக் கேட்டுப் பாரதகண்டத்து மக்கள் அனைவரும், இடியோசை கேட்ட நாகங்களைப்போல் நடுங்கினர்; உயிர் பதைக்கக் கலங்கினர்; பூமியில் விழுந்தனர்; எழுந்தனர், "ஓ தெய்வமே! எங்களை இவ்வாறு கதியற்றவர்களாகச் செய்யலாமா? நாங்கள் என்ன குற்றம் செய்தோம்? எங்களை இப்படித் தண்டித்தது நியாயமாமோ? நாங்கள் இனி என்ன செய்வோம்? எவரை நாடி வாழ்வோம்" என்று பலவாறு கூறிக் கதறி யழுதனர்; மறுபடியும் கீழே விழுந்து செய்துவைத்த பதுமைகளைப்போலக் கிடந்தனர்; தேசபந்து இறந்தார் என்று சொன்னவரைப் பிடித்து மோதியடிக்க எண்ணினர்;மயங்கினர்;மிக்க நோயுடன் கூடிய புண்ணில் வேல் பாய்ந்ததேபோல் வருந்தினர்; துன்ப மிகுதியால் தேவரும் நடுங்க பெருமூச்சு விட்டனர். அவர்களுடைய நாக்குகள் உலர்ந்தன; உயிர்கள் ஓடலுற்றன; உள்ளங்கள் வாடின; கண்கள் உதிரம் சிந்தின; ஐம்புலன்களும் கலங்கின. அவர்கள் எவ்விடத்தும் விட்டழுத பேரோசை விண்ணுற்றது. கல்கத்தா நகரவாசிகளும், தாசருடைய குடும்பத்தினரும் அடைந்த துக்கத்தையும் துன்பத்தையும் அளவிட்டுச் சொல்லவுங் கூடுமோ? ஊழிக்காலம் பெயர்வதை யொத்திருந்தது பாரத வுலகம் அந்நாள்.



ஆருகி இருதடங்கண்கள் அஞ்சனவெம்புனல் சோர அளகம் சோர அம்பைப்போன்ற கண்களையுடைய வசந்தி தேவியார் அழுததை எவ்வாறு சொல்லுவோம்? நம் அன்னை வசந்தி தேவியார், தம்முடைய நாயகர் சாய்ந்து கிடப்பதைப் பார்த்து "ஆ! அழகிற் சிறந்த ஆண்தகையே! அழகரே! ஐயரே! அரும்பெற லமுதே! முப்பெரும் புவியினும் ஒப்பிலா வீரரே! நீர் இவ்வாறு சாய்ந்திருப்பதைக் காண நான் என்ன கொடிய தவம் செய்தேனோ? புன்முறுவலுடன் கூடிய உம்முடைய அழகிய முகத்தையும், அகன்ற மார்பையும் இனி எந்நாள் காணப்போகிறேன்? உம்முடைய கடைக்கண் பார்வையை எப்பொழுது கண்டு களிப்பேன்? ஐயோ நாதா! என்னை வஞ்சித்துச் சென்றீரே! பாரத அன்னையை விட்டு அகன்றீரே! உம்முடைய மனம் எங்ஙனம் ஆறுதலடைந்திருக்கிறது? ஆ காந்தா! என்னைப் பயனற்றவளாக்கிச் சென்றீரே! எனக்கு மஞ்சள் கருப்பாயிற்றே! மல்லிகைப்பூ வேம்பாயிற்றே! என்னுடைய குங்குமப் பொட்டுக் குலைந்ததே! உம்மைப் பிரிந்து நான் இங்கிருப்பது எதற்காக? இனிச் சற்றேனும் உயிர் தரித்திரேன்? உம்மிடம் வந்துசேர எனக்கும் வழி காட்டுவீர்? ஓ தெய்வங்காள்! தருமமென்பது எனக்குத் துணையாவ தில்லையோ?" என்று பலவாறு சொல்லிப் புலம்பித் தவித்தார்; வளையலணிந்த கைத்தளிரால் ஆலிலையைப்போன்ற தம்முடைய வயிற்றைப் பிசைந்து கொண்டார்; தரித்திரன் செல்வத்தைப் பெற்று இழந்ததே போலானார்; பெருமூச்செறிந்து கீழேவிழுந்து புரண்டார். அந்த அம்மையார் அடைந்த துயரத்திற்கு உவமை யெடுத்துக்கூற யாதும் இலது. தேசபந்து தாசருடைய குமாரராகிய சிர ரஞ்சன தாசர் புலம்பி வருந்தியதைச் சொல்லவும் முடியுமோ?

நம் நாட்டுப் பெண்கள் பலரும் ஆங்காங்குத் திரள் திரளாகக் கூடிச், செவ்வல்லிமலரையும் சிவந்த கொவ்வைக் கனியையும் போன்ற வாய்களும், வெண்மையாகிய முல்லை மலரைப்போன்ற பற்களும் தோன்ற, மார்புகளின்மேல் முத்துமாலை யற்று விழுந்தாற்போலும் கண்களிலிருந்து மழையைப்போல் நீர் சிந்த அழுது வருந்தினர். அவர்கள் "ஆ! காலனைப்போலக் கொடியார் பிறர் உளரோ? பாரதமாதா இனி எவ்வாறு உரிமையைப் பெற்றிடுவாள்? நிலமடந்தை செய்த பாவம் யாதோ உளது. நாம் செய்த பாவம் அதனினும் பெரிது. தேயபந்துவை இனிக் காணுதற் கில்லாமையால் நம்முடைய கண்கள் செய்த பாவம் கடலினும் பெரிது. நம்முடைய விதி கொடிது. பாரத அன்னையின் ஒப்பற்ற திருமகன் இறக்க, நாம் அதைக் கண்டு உயிருடன் இருக்கின்றோமே? நம்மினும் கொடியவர் யாவர்? என்னே கடவுளுடைய செயல் இருந்தவாறு மிகவும் நன்று! கடவுளைவிட வஞ்சகர் ஒருவர் உளரோ? தம் நேரிலாத தலைமகற்கு—தாசருக்கு இத்தாரணியை முடிசூட்டிப் பார்க்காமல் போனாரே! அக்கடவுளுடைய கொடிய எண்ணத்தை என்னென்று சொல்வது? ஆ! சித்த ரஞ்சன தாசரே! தேயபந்துவே! உலக ரஞ்சன நேசரே! உம்முடன் நாங்களும் வருகின்றோம்! வருகின்றோம்!!" என்று பலவாறு கூறிப் புலம்பினார்கள்; கண்ணீரால் தங்களுடைய வீடுகளை மெழுகினார்கள். உந்தாது நெய் வார்த்து உதவாது காலெறிய நந்தா விளக்கைப்போல் நடுங்குகின்ற அறிவிற் சிறந்த நம் நாட்டு நங்கைமார் அழுது வருந்தியதை அளவிட்டுச் சொல்லவுங் கூடுமோ?

தாசர் வள்ளல் வானுலகு அடைந்தமைக்கு மாந்தர் பலரும் இவ்வாறு துன்பக்கடலில் மூழ்கிச் செயலற்று இருக்கவே, தமக்கு இரை கொடுத்துக் காப்போர் இன்மையால் கிளிகளும் அழுதன; நாகணவாய்ப் பறவைகளும் அழுதன; பூனைகளும் அழுதன; உருத்தோன்றாத பிள்ளைகளும் அழுதன; பசுக்களும் அழுதன; அவைகளுடைய கன்றுகளும் அழுதன. எடுத்துக் கூந்தலில் அழகுபட முடித்துக்கொள்வோரின்மையால் அன்று அலர்ந்த பூக்களும் அழுதன. நீரில் வாழும் பறவைகளும் அழுதன. தேன் பொழியும் சோலைகளும் அழுதன. யானைகளும் அழுதன. குதிரைகளும் அழுதன. பாரதநாட்டு எல்லா உயிர்களுடன் பிறநாட்டு மக்கள் பலரும் அழுது வருந்தினர்.



தேயபந்து இறந்த காலத்தில் மகாத்மா காந்தி, குல்னா என்னும் நகரத்தில் இருந்தார். இந்தக்கொடிய செய்தியைக் கேட்டதும் அவர் திடுக்கிட்டார்; கையொடு கையைப் புடைத்தார்; வாயைக் கடித்தார்; வெந்தபுண்ணில் வேல் நுழைந்தாற்போல் மனம் மாறுபட்டு மயங்கினார்; அயர்ந்தார்; பெருமூச்சுவிட்டார்; நெருப்பிற்பட்ட நெய்யைப்போல் மனமுருகித் தளர்ந்தார்; "ஆ தெய்வமே!" என்றார். உடனே அவர், தாம் செல்ல எண்ணியிருந்த ஆஸாம் யாத்திரையை நிறுத்திவிட்டுக் குல்னாவிலிருந்த வேலைகளை மிக விரைவில் முடித்துக்கொண்டு கல்கத்தாவுக்குப் புறப்பட்டார். அந்நாள் அவர், ஒரு பெரிய பொதுக்கூட்டத்திற் பேச வேண்டியவராயிருந்தார். அக்கூட்டத்தில் அவர், மிக்க நடுக்கத்துடனும் துக்கத்துடனும் அரிய மொழிகள் சிலவற்றைச் சொன்னார். அவை:—

"இந்தத் துக்ககரமான சம்பவம் என் காதில் விழுந்ததும் என்னுடைய கடமைகளின் சிக்கல்கள் நினைவுக்கு வந்தன. அடுத்த வண்டியில் ஏறிக் கல்கத்தாவுக்குப் போக வேண்டியது என்னுடைய கடமையாயிருந்தபோதிலும், நீங்கள் சொன்ன

என்று சொல்வதுடன் நான் நின்றுவிடுகிறேன் அல்லன். நூற்கும் தொழிலைப் பலப்படுத்தாமல் சட்டசபை வேலைகளைப் பயன் அளிக்குமாறு செய்ய முடியாதென்றும் எண்ணுகிறேன்" என்று அவர் சொல்வதுண்டு. பாரிஸாலில் நாமசூத்திர தலைவர், தமக்கு உதவி செய்தவருள் முதலாமவர் தாசர் என்றும், அடுத்தபடியாக ஸ்ரீமான் ராய் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவினிடம் பக்தி கொண்டவனாக என்னை, நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்; ஆதலால், காலஞ்சென்ற தாசருடைய நண்பரும் சகோதரரும் என்று நான், என்னை மதித்துக்கொள்கிறேன். ஆதலின், இப்போது பகிரங்கமாகவே ஒரு விஷயம் தெரிவிக்கிறேன். என்னுடைய கொள்கைக்கு மாறுபாடின்றி, முடியுமானால், தாசரைப் பின்பற்றி நடப்பவருக்குச் சட்டசபை திட்டத்தில் இதுவரையில் நான் செய்ததைவிட அதிக உதவியும் செய்ய முயற்சிக்கின்றேன். அவருடைய வேலைக்குப் பழுது வரக் கூடிய எதையும் நான் பேசாமலும், செய்யாமலும் இருக்குமாறு கடவுள் என்னைப் பாது காப்பாராக. சட்டசபைக்குட் செல்ல எங்களுக்குள்ள அபிப்பிராய பேதம் நீங்க வில்லை; ஆயினும், மனம் ஒன்றே. வழிகளில் எப்போதும் வேற்றுமைப்பட்ட எண்ணங்கள் இருந்தே தீரும். அதற்காக மக்கள் விரோதிகளாக வேண்டாம். நான் தார்ச்சிலிங்குக்குச் சென்றபோது தாசருக்குத், தம்முடைய கட்சியை ஒப்புக்கொள்ளாதவரிடமும் அன்பு முதிர்ந்து வருவதை நான் நாடோறும் கண்டிருக்கிறேன். தேசத் தொண்டர்களுக்குள் தாசர் ஒரு ரத்னம் போன்றவர். தமக்குத் தாமே துணை என்பது அவருடைய கொள்கை. அக்கொள்கையே நமக்கு ஊக்க மளிக்கட்டும்" என்பனவேயாம். உடனே மகாத்மா கல்கத்தாவுக்குப் போகப் புறப்பட்டார்.



தார்ச்சிலிங்கி லிருந்து தாசருடைய சவத்தைக் கல்கத்தாவுக்குக் கொண்டுபோக முயற்சிகள் நடந்தன. அதை யறிந்ததும் கல்கத்தா அல்லோல கல்லோலப்பட்டது. கல்கத்தாவி லிருந்த மக்கள் அனைவரும், கல்கத்தாவுக்கு அருகிலுள்ள பல இடங்களிலும் இருக்கும் மக்கள் அனைவரும் அன்றிரவு மூதேவியை மறந்தார்கள். துக்கக் கடலாடுங்கால் தூக்கமும் வருமோ? தாசர் இறந்த மறுநாள் புதன்கிழமை இரவு இரண்டு மணியி லிருந்தே கல்கத்தா சீல்டா ரெயில்வே ஸ்டேஷனில் பலதிறத்து ஜனங்களும் திரள் திரளாகக் கூடிவிட்டார்கள். தேசபந்து தாசருடைய சவம் கல்கத்தா சீல்டா ஸ்டேஷனுக்குக் கொண்டுவரப்பட்டுப், பிறகு மயான கட்டத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட காட்சி, கல்கத்தாவில் இதுகாறும் எவரும் கண்டிலர். அக்காட்சி இவ்வுலகத்திற்கே புதியதாகும்.

கல்கத்தா வாசிகளும், மற்றும் பலரும் விடியற்காலத்தில் ரெயில்வே ஸ்டேஷனில் பெருங்கூட்டம் கூட்டமாகக் கூடியிருந்ததை எண்ண முடியாது. சூரியனும் அக்காட்சியைக் காண மெதுவாக ஒலிகடலினின்றும் தோன்றினான். சவத்தைக் கொண்டுவரும் ரெயில்வண்டி ஆறரைமணிக்கு ஸ்டேஷனுக்கு வருமென்று எதிர் பார்க்கப்பட்டது. அதற்கு நெடுநேரத்திற்கு முன்னரே ஜனங்கள், ஸ்டேஷனுக் கருகில் எங்கும் அடி வைப்பதற்கும் இடம் இல்லாமலிருந்ததால், கூரைகளின்மேலும், வேறு பல உயர்ந்த இடங்களிலும் ஏறிக் கூட்டம் கூட்டமாகக் கூடிப் பறவைகளைப் போலக் காணப்பட்டார்கள். ஹாரிசன்சாலை முழுவதும் ஒரே ஜனத்திரளா யிருந்தது. எள் இடுதற்கும் இடம் கிடையாது. ஜனங்கள் அமைதியாகவும், தங்களுக்கு நேர்ந்த துயரத்தைப் பற்றிப் பேசி வருந்திக்கொண்டும் நெடுநேரம் வரையில் காத்

துக்கொண்டிருந்தார்கள். பிறகு, ரெயில்வண்டி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ரெயில்வண்டி மெதுவாக ஸ்டேஷனுக்குள் நுழைந்தது. ஜனங்களுடைய உணர்ச்சியும் வெளித் தோன்றியது. விடியற்காலத்திலேயே ஜனங்கள் பிளாட்பாரத்திற்குள் நுழையத் தொடங்கினார்கள். நெருக்கத்தினால் எங்குச் சிலர் இறந்து விடுவாரோ என்னும் அச்சம் ஏற்படும்படியாக ஜனக்கூட்டம் அவ்வளவு அதிகமாக நெருக்கிக்கொண்டு பிளாட்பாரத்தில் இருந்தது. அக்கூட்டத்தில் பலதிறத்து மக்களும் இருந்தார்கள். இதுவரையிலும் கோஷாமுறையை மேற்கொண்டு ஒழுகிவந்த சாதிப் பெண்களும் அன்று ஸ்டேஷனில் காணப்பட்டார்கள். சிறிது நேரங் கழித்து வந்தவர்கள், தாசருடைய திருவுருவத்தைத் தரிசிக்க வேண்டுமென்னும் பேராசையினால், ஸ்டேஷன் கொட்டகைக்கு மேலிருந்த இரும்புத் தகடுகளின்மேலும், ரெயில் வண்டிகளின்மேலும், மரக்கிளைகள்மீதும் ஏறி, வௌவால்களைப் போலத் தொத்திக்கொண்டிருந்தார்கள்.

வண்டி ஸ்டேஷனுக்கு வருவதற்குமுன் ஜனங்கள், வங்காளத்துக்கு நேர்ந்த பெரிய கஷ்டத்தைப்பற்றித் தங்களுக்குள் மிக்க துக்கத்துடன் பேசிக்கொண் டிருந்தார்கள். ஏழேகால் மணிக்குச் சற்றுமேல் ரெயில்வண்டி பிளாட்பாரத்தில் நுழைந்தது. ஜனக்கூட்டம் முழுவதும் துக்கத்தில் மூழ்கிவிட்டது. தாசருடைய சவம் இருந்த வண்டிக்குச் சரியாக ஒரு வெள்ளைக்கொடி காணப்பட்டது. அந்த வண்டியின்மீது ஜனங்கள் மோத ஆரம்பித்தார்கள். தொண்டர்களும் போலீஸாரும் ஜனங்களிடம் ஒழுங்கை யுண்டுபண்ணப் பெரிதும் வருந்தினார்கள். சவத்தை எடுத்துச் செல்வதற்காக அமைக்கப்பட்ட புஷ்பப் பல்லக்கை நிறுத்தி யிருந்த



இடத்திற்கு நேராகவே சவமிருந்த வண்டியும் வந்து நின்றது. பாரக்பூரிலிருந்து அந்த வண்டியுடன் வந்த மகாத்மா காந்தி, பிரேத மிருந்த வண்டியின் அறைக்குள் கதவின் பின்புறம் குவிந்த கையுடன் நின்றிருந்தார். அவருக்குப் பின்னால் தாசருடைய குமாரர் நின்றார். அந்தக் குமாரருடன் தாசருடைய மனைவி ஸ்ரீமதி வசந்திதேவி, வெண் தூசு அணிந்து துக்கம் நிரம்பிய முகத்துடன் காணப்பட்டார். அம்மூவரையும் அக்கோலத்துடன் கண்ட ஜனங்களுடைய துக்கம், அடக்க முடியாதபடி வெளிக் கிளம்பிற்று.

ஜனங்களுடைய பரபரப்புச் சிறிது அடங்கியதும் தேசபந்துவின் பிரேதத்தை மகாத்மா காந்தி, எல். ஆர். தாசர், மௌலானா அபுல்கலாம் அஸத், ஸர். பி. ஸி. ராய், பாபு ஷியாம சுந்தர சக்ரவர்த்தி, பாபு சுதிர்சந்திரரே, பாபு நிஷித்சேன், பி. ஸி. சட்டர்ச்சி, நிரஞ்சன தாசர் ஆகிய இவர்கள் புஷ்பப் பல்லக்கிற்குத் தூக்கிச் சென்றார்கள். வெண்மையான ஆடைகளைத் தரித்த ஆயிரங்கணக்கான ஆண்களும், பெண்களும், சவம் எடுத்துச் செல்லப்பட்ட வழியில் மௌனமாய்த் துக்கக்குறியுடன் நின்ற காட்சி வருணித்து எழுதக் கூடியதன்று.

ஏழரைமணிக்குச் சற்றுமேல் பிரேதம் அடங்கிய புஷ்பப் பல்லக்கு ஸ்டேஷனுக்கு வெளியே கொண்டுவரப்பட்டது. அப்போது, ஜனங்கள் உரத்த குரலுடன் அழத்தொடங்கினார்கள். அங்குலக் கணக்காகவே இடம்விட்டு நடந்து அந்தப் பல்லக்கு எடுத்துச் செல்லப்பட்டது. தாசருடைய திருமேனியை ஒவ்வொருவரும் கைகளால் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொள்ள முயற்சித்தனர். பூ மாலைகளும், வாசனைப்பொடிகளும் அந்தப் பல்லக்கின் மேல் விழுந்த வண்ணமாகவே இருந்தன.. இப்படியும் அப்படியும் அசைத்துக் கொண்டு

மெதுவாக அந்தப் பல்லக்கு ஸ்டேஷன் எல்லைப் புறத்துக்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டது. பல்லக்கு நெருங்கி வர வர வெளியே நின்றுகொண்டிருந்த ஜனங்களுடைய உணர்ச்சி, சொல்ல முடியாதபடி யாகிவிட்டது? அப்பொழுது, தம்முடைய ஒற்றை யாடையுடன் விளங்கினார் மகாத்மா. சிலர் ஒன்று சேர்ந்து, தங்கள் தோள்மீது அவரைத் தூக்கிக் கொண்டார்கள். ஒரு தலைவர், தம்முடைய கடைசியிடம் சென்று கொண்டிருக்க, மற்றொரு தலைவரான காந்தியடிகள் மிக்க வணக்கத்துடன் அவர் அருகிற் சென்று கொண்டிருந்த காட்சியைக் கண்டதும் ஜனங்களுக்கு ஒருவகையான வெறி யுண்டாயிற்று.

ஊர்வலம், குறித்த சில தெருக்களின் வழியாகச் செல்வதென்று ஏற்பாடாயிருந்தது. தேசபந்துவின் பெயரையும், பாரத மாதாவின் பெயரையும் பொறித்த பல கொடிகளைத் தாங்கிக்கொண்டு பிரேதத்திற்கு முன்னே பலர் சென்றனர். ஆங்கில ஏகாதிபத்தியத்திற்குள் இரண்டாவது பெரிய நகரமென்று கொண்டாடப்படும் கல்கத்தாவின் மக்கள் அனைவருடைய மனங்களையும் கலக்கிவிட்ட தேசபந்து தாசருடைய பெருமையை யாரால் புகழ்ந்து சொல்லக் கூடும்? ஊர்வலம் போதற்கெனக் குறித்த தெருக்கள் சுமார் ஒரு மையில் தூரம் இருந்தன. அத்தெருக்களிலும் லட்சம் கணக்கான ஜனங்கள் கூடியிருந்தார்கள். ஒவ்வொரு வீட்டிலுமிருந்த ஆடவரும் மகளிரும், பூமாலைகளையும் வாசனைச் சுண்ணங்களையும் மெதுவாக வீசி வணங்கினார்கள். ஐரோப்பியர்களும் அவ்வாறே புஷ்பமாரி சொரிந்தார்கள். பிரேதத்திற்கு முன்பு சிலர், பாதி இராணுவ உடைகளுடன் சென்றனர்; சிலர் கறுப்பு உடைகளைத் தரித்துச் சென்றனர். மலைநாட்டுச் சாதியாரிற் சிலர், தோற்கருவி வாத்தியங்களை முழக்கிக்கொண்டு ஒரு வரிசையாகச் சென்றனர். கூட்டத்தின் இடையே ஆங்காங்கு வந்துகொண்டிருந்த பஜனை கோஷ்டிகளுக்கோ கணக்கே கிடையாது. பல இடங்களிலிருந்தும் பஜனைகள் வந்து கூட்டத்திற் கலந்துகொண்டே இருந்தன. வாட்களை உயரத் தூக்கிப் பிடித்துக்கொண்டே அகாலியர் சென்ற காட்சி, ஒவ்வொருவருடைய மனத்தையும் உருக்கியது. எவ்விடத்தும் சுயராஜ்யக் கொடிகள் வீசி விளங்கிக் கொண்டே இருந்தன. இலட்சம் கணக்கான ஜனக் கூட்டத்தால் பிரேத பல்லக்கு, ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து பவானிப்பூருக்குச் செல்வதற்கு எட்டுமணி நேரமாயிற்று. வெயில் ஏற ஏற ஜனங்கள் புழுங்கினார்கள். ஆங்காங்கு விசிறிகளைக்கொண்டு விசிறப்பட்டது. சில சமயங்களில் குளிர்ந்த காற்றும் வீசிக்கொண்டிருந்தது. ஜனங்கள் தாக சாந்தி செய்து கொள்ளும்பொருட்டு நகரபரிபாலன சபையினர், பல வசதிகளை ஆங்காங்கு ஏற்படுத்தி வைத்தனர். பல்லக்கு நகரபரிபாலன சபையின் காரியாலயத்தை யடைந்ததும், நகரபரிபாலன சபையின் அங்கத்தினர் அனைவரும், மற்றும் பல சிப்பந்திகளும் தாசர்மீது பூமாரி சொரிந்து வணங்கினார்கள். சௌரங்கியில் பல ஆங்கிலேயர்களும் வந்து சவத்தைத் தரிசனம் செய்தார்கள். மெதுவாக அசைந்துகொண்டே ஊர்வலம் சென்ற பூப்பல்லக்கு, ரஸ்ஸா சாலையில் 148-வது எண்ணுள்ள தாசர் பெருமான் வாழ்ந்திருந்து தியாகஞ் செய்த மாளிகையின் முன்னர் வந்தது. அங்குச் சிறிது நேரம் பல்லக்கு நிறுத்தப்பட்டது. தாசருடைய உறவினர் அனைவரும் பல மரியாதைகளைச் செய்தனர். பின்னர், ஊர்வலம் மயானத்தை நோக்கிச் சென்றது.



மயானத்திற் கூடியிருந்த ஜனங்களை எண்ணவே முடியாது. ஐரோப்பியரும் நூற்றுக் கணக்காகக் கூடியிருந்த

ளர். சந்தனக்கட்டைகளால் காஷ்டம் அடுக்கப்பட்டிருந்தது. பிரேதகிரியைகள் நடத்தும் இடம் மூங்கில்கள் நட்டுத் தடுக்கப்பட்டிருந்தது. தேசபக்துவின் பிரேதம் அவ்விடத்தை யடைந்ததும் மகாத்மா எவ்வளவு சொல்லியும் ஜனங்கள் உள்ளே மிக்க ஆவலுடன் தள்ளிக்கொண்டே போனார்கள். பிரேதகிரியைகள் அரைமணிநேரம் வரையில் முறையே நடத்தப்பட்டன. பின்னர் தாசருடைய குமாரர் தீ மூட்டப் போகும் தருவாயில் ஜனங்கள், உள்ளே தள்ளிக் கொண்டு போய்க் கடைசிமுறையாகத் தேயபந்துவைத் தரிசனம் செய்ய விரும்பினார்கள். உரிமை என்னும் ஞானத்தை உலகமுற்றும் ஊட்டிக் கொடுமை என்னும் தீயைக் காலால் உதைத்த உத்தமகுண உயர்வள்ளல் தேயபந்து தாசருடைய பிரேதத்திற்குத் தீ மூட்டத், தீயிற்பட்ட தளிர்போன்ற முகத்துடனும், கண்களிலிருந்து நீர் ஊற்றென வெதும்பியூற்றிக்கொண்டிருப்பதுடனும் சிர ரஞ்சன தாசர் எழுந்தார். ஜனங்கள் ஓவென்று வாய்விட்டு அலறினார்கள்; முகத்தில் அறைந்துகொண்டார்கள். வேருடன் திடீரென்று சாயும் மரங்களைப்போலப் பலர், தொப்புத் தொப்பென்று புழுதியில் விழுந்தனர்; புரண்டனர். பலர் "ஐயோ! ஐயோ!! எங்கள் உயிர் நீங்கிற்றே! நீங்கிற்றே!!" என்று கதறியழுதார்கள். மற்றும் பலர், பலவாறு சொல்லி யழுதார்கள். அவ்விடம் இந்திய மக்கள் காட்டிய அன்பு, ஈண்டு எழுதுதற்கும் முடியுமோ? மனம் துணியாமல் தீ மூட்டி மெய்ம் மறந்து நின்றார் சிர ரஞ்சன தாசர். உலகமுற்றும் நெருப்புப் பற்றிக்கொண்டதென நினைத்துத் திகைத்தார்கள் ஜனங்கள். ஒரு மணிநேரம் தகனகிரியை நடந்தது. நெடுநேரம் கூட்டம் கலையவே யில்லை. பாரத மக்கள் துக்கம் நீங்கவே இல்லை.



ஆ! சித்த ரஞ்சன தாசரே! உலக ரஞ்சன வண்மையோய்! தேச ரஞ்சன நேசரே! 'நாச வேலையை முடித்து நல்ல வேலையைத் தொடங்குவேன்' என்று வீரமொழி கூறிய எங்கள் தந்தையே! 'இந்தியர்களுடைய ஆட்சியை இந்தியர்களுக்கே ஈவேன்' என்று வீர முழக்கம் செய்த சிங்கமே! 'இந்தியாவை யாளுதல் இந்தியர்களுடைய உரிமை' என்று பேரோசை செய்த பெரியோய்! எங்களைக் கைவிட வேண்டாம். காப்பாற்ற வருக.

"எனக்கு என்ன நேர்ந்திடுமோ? இத் தலைமுறைக்கென்ன நேருமோ? கல்வி கற்ற இந்தியர்களுக்கென்ன நேர்ந்திடுமோ? என்று நான் கவலை யுறுகிறேன் அல்லன். இந்தக் குலம் முன்னேற்ற மடைய வேண்டுமென்பதே என்னுடைய கவலை யாகும். இந்தச் சாதி முன்னேற்ற மடைந்து அழகுடன் விளங்க வேண்டுமென்பதே என் முழுமனம். அதுசமயம் நான் இருப்பேனோ அல்லது இறந்துபடுவேனோ என்று நான் எண்ணுகிறேன் அல்லன். என் புதல்வர்களுடைய வாழ்நாளிலாயினும் அக்காலம் வருமோ என்று நான் கருதுகிறேன் அல்லன்.

அக்காலம் விரைவில் வருமாறு உழைக்க வேண்டியதே என்னுடைய கடமை என்று ஓர் உணர்ச்சி எனக்குத் தோன்றியிருக்கிறது.

அவ்வேலை செய்திடுங் காலத்திலேயே நான் இறந்துபடுவேனானால், மீண்டும் இத்தேயத்திற் பிறப்பேன்; மீண்டும் இத்தேயத்திற் பிறப்பேன்." என்று மொழிந்த வீரத்தொண்டரே! விரைவில் வருக. எங்களிடை வருக. உம்மைப் பிரிந்து பாரதமாதா, ஆதரிப்பாரின்றி வாய்விட்டு அலறுகின்றனள். நீர் மீண்டும் இங்குப் பிறக்கும் வரையில் அந்த அன்னையின் துக்கம் நீங்காது; நீங்காது. குறையை மனம் பற்றுக; விரைவில் காக்க வருக. கடவுள் அருள்புரிக.

# அத்தியாயம் 21

## தலைவர்கள் துயரம்

தேசபந்து இவ்வுலக வாழ்வை நீத்தார் என்ற செய்தியைக் கேட்டு உலகமுற்றும் நடுங்கிய தென்பது அனைவரும் அறிவர். அவருடைய மனைவியாரையும், குமாரரையும், மற்றுமுள்ள உறவின் முறையினரையும் துக்கத்தினின்று சிறிதாயினும் தேற்றுதற்கும், உலகினருடைய துயரத்தைக் கொஞ்சமேனும் ஆற்றுதற்கும், தங்களுடைய துக்கத்தைச் சிறிதளவேனும் குறையச் செய்தற்கும் தங்கள் துயரத்தையும் அன்பையும் குறித்து நம் நாட்டுத் தலைவர் பலரும், பிறநாட்டினரும் பல அநுதாபச் செய்திகளைக் கடிதங்கள் மூலமாகவும், பத்திரிகைகளின் மூலமாகவும் வசந்தி தேவியாருக்கு அனுப்பினார்கள். உலகினர் பலரும் அந்த அநுதாபங்களை யறிதற் பொருட்டு ஈண்டு அவற்றை யெடுத்தெழுதலாயினம்.

"துக்கம் உள்ளத்தை யூடுருவுங்கால் எழுதுகோல் நகர மறுக்கின்றது. யௌவன இந்தியாவின் வாசகர்களுக்கு அதிகம் தெரிவிக்க இயலாதவாறு நான் துயரத்திற்குள் அழுந்தி யிருக்கிறேன். அந்தப் பெரிய தேசபக்தருடன் ஐந்து நாட்கள் தார்ச்சிலிங்கில் பழகியது, நாங்கள் முன்னிருந்ததைவிட, எங்களை அதிகமாக ஒன்றுபடுத்தியது. தேசபந்து எவ்வளவு பெரியவர் என்பதை நான் உற்றறிந்ததுடன் அவர் எவ்வளவு நல்லவர் என்பதையும் உணர்ந்தேன். இந்தியா ஒரு பூஷணத்தை இழந்தது; ஆனால், நாம்



சுயராஜ்யத்தைப் பெற்றிடும் முறையிலேயே அந்தப் பூஷணத்தை மீண்டும் பெற்றிட வேண்டும்."

"மனிதருக்குள் மகத்தான சக்தி பெற்றவர் போய் விட்டார். வங்காளம் இன்று மாங்கல்யம் இழந்த மங்கையைப் போலாகி விட்டது. தேசபந்துவிற்குச் சமமாக எவரும் அவருடைய ஸ்தானத்திற் கிடைக்க மாட்டார். கவி ரவீந்திரருடைய ஸ்தானத்திற்கு வேறு கவி எவரையேனும் நான் கூற முடியுமானால், தேசபந்து தாசருக்குப் பதில் தலைவரையும் நான் சொல்ல முடியும். எண்ணிறந்த சண்டைகளில் வெற்றிமாலை சூடியவர் நம்முடைய தேசபந்துவே யாவர்.

கொடிய விதி லோகமான்ய திலகரை நம்மிடமிருந்து கவர்ந்து சென்றிடுங்கால், நான் தனியனாக விடப்பட்டவனானேன். அந்த இடியிலிருந்து நான் இன்னமும் மீண்டேன் அல்லன்; ஏனெனில், நான் இன்னமும் அவருடைய அன்பார்ந்த சீடர்களுடைய நட்பை நாடி நிற்கின்றேன். தேசபந்துவின் பிரிவோ என்னை முன்னிலும் கொடிய நிலைமையில் வைத்துச் சென்றது. ஏனெனில், லோகமான்யர் பிரிந்த காலத்தில் நாட்டில் நம்பிக்கை யிருந்தது. மகமதியர்களும், இந்துக்களும் எப்பொழுதும் நட்பினால் பிணிக்கப்பட்டவர்களாய் இருந்தார்கள். இதுசமயம் நாம் போர் முனையில் ஒரு சண்டையை யெதிர்த்து நிற்பவரா யிருக்கின்றோம்."

மகாத்மா காந்தியடிகள்

---

"அருமைத் தங்கை அம்ம!

துயரத்தை எவ்வாறாயினும் தாங்கிக் கொள்க. நம்முடைய நஷ்டத்தை நோக்க மிக்க பயங்கரமா யிருக்கிறது. ஆனால், எல்லாம் கடவுள் செயல். மிக்க தூரம் புகைவண்டி

யில் பிரயாணஞ் செய்ய நான் சக்தியற்றவனா யிருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் அங்கு வந்தடைவேன்."

பண்டித மதிலால் நேஹ்ரு

---

"இந்தியா ஓர் அரசனை இழந்தது. துயரக்கடலில் மூழ்கி யிருக்கிறது. தேசபந்து தாசர், ஒவ்வொரு நடையிலும் ஓர் அரசனையே ஒத்திருந்தார். தயாளச்சிந்தையிலும், தியாகத்திலும் அவரை அரசனென்றே கூறலாம். அவர், எல்லாப் பெரியோர்களைப் போலவே இருந்து இறந்தார். வெற்றி பெற்றிடுங்காலத்தில் — புகழுடனும் பெருமையுடனும் வன்மையுடனும் பொலிந்து நின்றபொழுதில், அழிந்திருந்த தன்மையை நீத்து, அழியாத் தன்மை யெய்தினார். தேயத்தின் தெய்வம்போலிருந்து ஒப்புயர்வற்ற ஆற்றலுடன் சேவை செய்தார். அவர் உலக வாழ்க்கையை நீத்திடுங்கால், அவ்வீரரை வணங்கிக் காவல் புரிந்து நின்ற இமயமலையின் அழியாத் தன்மையைப் போலும், காலத்தின் அவபக்தியையும், மாறுதலின் பிடிவாதத்தையும் பொருட்படுத்தாமல் அவருடைய பெயர், அழியாதிருக்கும் என்பதற்கோர் ஐயமுமில்லை. ஒப்பிடுதற்கு அரிய அவருடைய தியாகமும், மாசில்லாத் தைரியமும், குற்றமற்ற விடுதலைப்பசியும், அவர், தம்முடைய வீரவடிவுடன் நின்று கலக்கிய சந்ததியார்களுக்கு ஓர் அழியா அருளாக நின்றிடும். பின்சந்ததியார் அவருடைய சரித்திரத்தை யறிந்திடுங்கால், அஃது ஒரு கற்பனையோ, தெய்விகப் புராணமோ என்று ஐயுறுமாறு அவர் விளங்குவர். அவருடைய சுபலம் இழந்த உடலின் சுண்ணம் கங்கை நதிக்கரையில் பார்த்து கிடக்கின்றது; ஆனால், அவருடைய ஈடும் எடுப்புமற்ற ஆத்மா, தெய்வத்தன்மை



யுடன் நம்மிடையே நடித்து, எரிகிற ஒரு விளக்கைப்போலச் சுயராஜ்ய வாயிலைக் காட்டி நிற்கின்றது."

ஸ்ரீமதி சரோஜனி தேவியார்

---

"தாசர் மனைவியாராகிய வசந்திதேவி யம்மா!

தயைசெய்து உம்முடைய பயங்கரமான நஷ்டத்திற்கு என்னுடைய அநுதாபத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். என்னுடைய சொற்களில் ஒன்றும், உம்முடைய துயரத்தைப் போக்கிவிடா தென்று நான் அஞ்சுகிறேன். கடவுளே உம்மைத் தேற்ற வேண்டும். நீர் அடைந்த பெரும் நஷ்டத்திற்காக நம் நாட்டினர் அனைவரும் உம்முடன் துக்கிக்கின்றதை நீர் அறிவீராகில், ஒருவாறு தேறுத லடைவீர்."

சுரேந்திரநாத் பானர்ஜி

---

"நாட்டினர் நஷ்டத்திற்காக என்னுடைய வருத்தமும், உம்முடைய துயரத்திற்காக என்னுடைய அநுதாபமும் (செலுத்துகின்றனன்.)"

கவி ரவீந்திரநாத் தாகூர்

---

"தேயபந்து இறந்துபட்டார் என்ற செய்தியைச் செவியுற்றதும் திடுக்கிட்டேன். தம் நலம் மறுத்தலிலும், தயாளச்சிந்தையிலும் ஒரு தனியாளராக இருந்த பெருமை மிக்க புதல்வருள் ஒருவரை இந்தியா இழந்துவிட்டது. தயை செய்து இப்பெரிய துக்கத்திற்காக என்னுடைய அநுதாபத்தை அங்கீகரிக்கவும்." லாலா லஜீபதி ராய்

---

"உம்முடைய நஷ்டத்தைக் கேட்க வருந்துகின்றேன். உம்முடைய நஷ்டம் நாட்டின் நஷ்டம். அது நாட்டினருக்கு

ஒரு பெரிய கலக்கமு மாகும். உம்முடைய பெருமை மிக்க கணவருடைய பணிகள் இன்றியமையாதனவா யிருந்தகாலத்தில் அவர் சென்றார். கடவுள் உம்முடைய துக்கத்தையும், உம்முடைய குழந்தைகளுடைய துயரத்தையும் ஆற்றுவாராக."

பண்டித மதன் மோகன மாளவியா

---

"இந்தியாவிலும் வங்காளத்திலுமுள்ள மக்களுக்கு இஃது ஒரு பெரிய கஷ்டமாகும். மிகப் பெரிய வீரபுத்திரர்களுள் ஒருவரை இந்தியா இழந்ததற்காக நானும், சென்னைச் சுயராஜ்யக் கட்சியினரும், எல்லா இந்திய மகா நாட்டினரும் எங்கள் துயரத்தைக் காட்ட வங்காளத்துடன் சேர்கின்றோம்."

எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார்

---

"அன்பார்ந்த தங்கை யம்மா !

உம்முடைய பயங்கரமான கஷ்டத்திற்காக என்னுடைய மனைவி மக்களின் அநுதாபத்தையும், என் அநுதாபத்தையும் அங்கீகரிக்கவும். கடவுள், இந்தியாவினுடைய உரிமையாசையைப் பரிசோதிக்கிறார். உலக வாழ்க்கையின் இறுதியில் அவர் நன்றாக உறங்குகின்றார். ஆனால், நாம் அவருடைய வாழ்க்கையின் வேலையை, அவருடைய தைரிய வழி பற்றியே செய்ய வேண்டும். குலஇச்சையும் வெறுப்பும் மூண்டு நிற்கும் இந்நாளில் எல்லார்க்கும் பொதுவாக நின்றும், ஒற்றுமையையும் உரிமையையும் குலத்தின் நன்மைகளுக்கு மேலாகவே எண்ணியும் இருந்த அவ்விச்சையே சித்தரஞ்சனரை ஓர் உண்மையான நாட்டினராகவும், நம்முடைய தலைவராகிய மகாத்மா காந்தியடிகளுடைய துணைவராகவும் செய்தது. எங்களுடைய உள்ளங்கள் உம்முடைய குடும்பத்தின் துக்கத்தையே நாடுகின்றன. ஆனால், அஃது



உம்முடைய துயர மன்று; நம்முடைய சாதியின் துக்கமாகும் என்பதை நீர் மறக்க வேண்டாம் என்று நான், உம்மை வேண்டுகின்றேன். அவர் என்னுடைய பழைய அன்பார்ந்த நண்பராதலின், நானும் உம்முடைய அநுதாபத்தையே வேண்டுகின்றேன். கடவுள் நம்மை எல்லாரையும் காத்தருள்வாராக."

மகமத் ஆலி

---

"நாடெங்குமுள்ளமுஸ்லீம்களுடையதுக்கத்தைத் தாசர் மனைவியாராகிய அம்மைக்கு நான் அறிவிக்கிறேன். மகாத்மா காந்தியடிகளுக்கு அடுத்தவராக நாங்கள் எண்ணியிருந்த தலைவர் உயிர்நீத்தார். ஆனால், தெய்வ சங்கல்பத்திற்கு எவர் என்ன செய்வது? மகாத்மா காந்தியடிகள் அனுப்பிய தந்தியினால் நான் ஒருவாறு ஆறுதலடைந்திருக்கிறேன். என் தாய் பீ அம்மாவைப்போல் மற்றொரு வீரர் இப்பொழுது நம்மை விட்டுச் சென்றார். தம்முடைய வேலை முடிவதற்கு முன்னரே அவர், உலக வாழ்வைத் துறந்தார். இந்தியாவிற்காகவும், இஸ்லாமிற்காகவும் நான் உழைத்துக் கொண்டிருக்கையிலேயே இறந்துபடுவேனாகில், நான் மிக்க இன்பத்தை யடைந்தவனாவேன். ஸ்ரீமான் தாசர் இறந்ததன் ஞாபகச் சின்னமாக இந்துக்களும் முஸல்மான்களும், தங்களுக்குள் உண்டாகும் சச்சரவை ஒழித்துவிட வேண்டும். வரும் பக்ரீத்பண்டிகையின் காலம் எத்தகைய போராட்டமும் இருத்தலாகாது. இந்துக்களும் முஸல்மான்களும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டுமென்பதே தேசபந்து தாசருடைய பேராசை என்று நான் அறிவேன். அவருடைய ஆசையை நாம் நிறைவேற்ற வேண்டாமா? சாதாரண மொழிகளும், தீர்மானங்களும் பயன் அற்றவை. காரியத்திலேயே நம்முடைய உணர்ச்சியை நாம், இந்தியாவின் விரோதிகளுக்கு

அறிவிக்க வேண்டும். ஒரு பெரிய தலைவரை நம் நாடு இழந்து நிற்கின்றது. ஒரு சகாய கர்த்தாவை நாம் பறிகொடுத்து விட்டோம். ஒரு பெரிய போராட்டம் தொடங்கும் சமயத்தில் அவர் சென்றுவிட்டார். அவரைப் போலப் பலர் இந்த நாட்டில் தோன்றுவது திண்ணம். ஒரு யுத்தவீரர் சென்றால் எண்ணிறந்த யுத்தவீரர்கள் தோன்றுவார்கள்."

மௌலானா ஷவுக்கத் தலி

---

"உம்முடைய கணவர் திடீரென்று இறந்ததைக் கேட்டவுடன் மிகத் திடுக்கிடலானேன். அவர், தம்முடைய நாட்டிற்காகத் தம்முடைய கடைசித் தியாகத்தையும் செய்துவிட்டார். உமக்கு என்னுடைய அநுதாபங்கள் (செலுத்துகின்றேன்)."

அண்ட்ரூஸ்

---

"ஸி. ஆர். தாசர் மனைவியாராகிய அம்மையே!

உம்முடைய கணவரது மரணத்தை வருத்தத்துடன் இப்பொழுதே கேள்விப்பட்டேன். உம்முடைய கஷ்டத்திற்காக என்னுடைய அநுதாபத்தை யறிவிக்கிறேன்."

இராஜப் பிரதிநிதி

---

"தேசபந்து தாசருடைய கொள்கைகள் அனைத்தையும் ஒத்துக்கொள்ளுகிறோமென்று நாம் கூறினால், நீங்கள் அதை வெளிப் பேச்சென்று எண்ணி வெறுப்பீர்கள். ஆனால், வாழ்நாள் இறுதியடைந்த பின்னர் வித்தியாசங்களைப் பாராட்டும் வழக்கம் எம்மிடம் இல்லை. தேசபந்து, தாம் மேற்கொண்ட வேலைகளை முடித்தற்கு உண்மையாக உழைத்தார் என்பதை ஒருவரும் மறுக்க வியலாது. அங்ஙனம்



மேற்கொண்ட வேலைக் கிடையில் என்ன நேர்ந்தாலும் அவர் பயப்படுகின்றவர் அல்லர். தியாக மளிக்கப் பின் வாங்கார். கல்வி ஞானம் மிக்க அவர், இறந்தமையால் நாம் மிகவும் வருந்துகின்றோம்."

லார்ட் பர்க்கன் ஹெட்
இந்திய அமைச்சர்

---

"தேசபந்து உயிர் துறந்ததற்காக இந்தியாவில் அனைவரும் மிகத் துயருறுவர். கட்டாயமாக வங்காளம் மிக்க துக்கத்துக்குள் அழுந்தும். அங்கு, அவருடைய கொள்கையை மறுத்தவர்கள் மாத்திரமல்ல, அவருக்கு எதிரிகளாக நின்றவர்களும் துயரத்தில் அழுந்துவார்கள். அபிப்பிராய பேதங்கள் எவ்வளவிருந்தாலும், ஒருவர் இறந்த பின்னர், அவை பறந்தோடி விடுகின்றன. தேசபந்து இந்தியாவினிடம் மாசில்லாப் பக்திகொண்டு தமக்கு நன்றெனத் தோன்றிய வழியில் இந்தியாவின் நன்மையை நாடி நின்றார் என்பதை உலக மறியும். தம்முடைய கொள்கைக்காகச் சுயநலத்தைத் தியாகம் செய்த தேசபந்துவை இழந்து பரிதவிக்கும் அவருடைய குடும்பத்தினருக்கு எம்முடைய ஆழ்ந்த அநுதாபத்தை யறிவித்திருக்கின்றோம்."

லார்ட் ரீடிங்
இந்திய இராஜப் பிரதிநிதி

---

இங்ஙனம் உலகில் எல்லாப் பக்கங்களிலு மிருந்து பெரியார் பலர் எண்ணிறந்த அநுதாபங்களை யனுப்பினர். அவைகளுக் கெல்லாம் பொதுவாக வசந்திதேவியார், தம்முடைய அநுதாபத்தையும் நன்றியறிதலையும் வணக்கத்துடன் தெரிவித்தார். தேசபந்து இறந்த நாள் முதல் இதுவரையிலும்

நாட்டில் எவ்விடத்தும் அநுதாபக் கூட்டங்கள் நடைபெற்ற வண்ணமாகவே இருந்தன. ஒவ்வொரு மாகாணத்திலும், ஒவ்வொரு சில்லாவிலும், ஒவ்வொரு தாலுக்காவிலும், ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு கிராமத்திலும் கணக்கற்ற அநுதாபக் கூட்டங்கள் கூடின. இன்னமும் கூடிக்கொண்டே இருக்கின்றன. அவரை நாம் இழந்தமைக்கு எவ்வளவு அநுதாபப்பட்டாலும் போதுமோ?

தேயபந்து தாசருக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கருமாதிகளையும் சிரார்த்தங்களையும், அவர் இறந்த பதினாறும் நாளாகிய புதன்கிழமை அவருடைய குமாரரும், மற்றைய குடும்பத்தினரும் முறையே செவ்வையாகச் செய்தனர். தாசர் இறந்த பதினாறும் நாள், அவருடைய ஆத்மா சாந்தியடையக் கடவுளைத் துதித்து அநுதாபத்தைக் கொண்டாடும் நாளாக மகாத்மா முதலிய தலைவர் நியமித்தனர். அந்நாளில் பாரத வுலக முற்றுமுள்ள பலவகை உத்தியோகசாலைகள், கலாசாலைகள், கழகங்கள், கடைகள் முதலியவைகளெல்லாம் விடுமுறைக்காக மூடப்பட்டன. உலகமக்கள் அனைவரும் அத்தினத்தில் தலைவர் கட்டளைக் கிணங்க ஆங்காங்குத் திரள் திரளாகக்கூடி அநுதாபப்பட்டார்கள்; பாரத வுலகத்திற்குத் திடீரென்று நேர்ந்த பொறுக்க முடியாத துயரத்தைக் காட்டினார்கள்; எல்லையின்றி வருந்தினார்கள்; தேயபந்துவின் ஆத்மா சாந்தியுறுமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சினார்கள். தேயபந்து இறந்தமைக்குப் பலதிறத்து மக்களும் அடைந்த துயரங்களை இவ்வளவென்று எடுத்துக் கூற எவராலும் இயலாது. இந்நன்னாட்டுத் தலைவர் அனைவரும் அடைந்த துக்கம் எந்நாட்டினும் பெரிதாகும்.

---

# அத்தியாயம் 22

## முடிவுரை

சுயராஜ்யக் கட்சியை நிலை நாட்டினவரும், மாபெருந் தலைவருமாகிய சித்த ரஞ்சன தாசர், அற்பாயுளில் இவ்வுலக வாழ்வை நீத்துச் சென்றார். இணையற்ற பக்தியுடன் தேசத்துக்குத் தொண்டுபுரிந்து நிகரற்ற புகழுடன் விளங்கிய காலத்தில் அவர், நம்மை விட்டகன்றார். அவருடைய புத்திக்கூர்மையும், அறிவின் திறமையும், வீரத்தன்மையும், பரந்த நோக்கமும், தயாளச்சிந்தையும், உக்ரமான தேசாபிமானமும், மஹத்தான தியாகமும் எல்லாரும் நன்கு அறிந்தனவே யாம். நாகரிக உலகமெல்லாம் அவரைப் போற்றுகின்றது. தேயபந்து தாசரைப் போலத் தாய் நாட்டின் தொண்டில் முழுமனத்துடன் ஈடுபட்டு, அத்தொண்டிலேயே தேய்ந்து உயிர்விட்ட வேறொருவரை நாம் சரித்திரத்தில் காணமுடியாது. தம்முடைய அறிவினாலும் திறமையினாலும் குபேர சம்பத்தை யடைந்த காலத்திலும் அவர், பொருளைத் துச்சமாகக் கருதித் தரித்திரத்தை ஆபரணமாகக்கொண்டு, தம்முடைய வாழ்நாள் முழுவதையும் தேசத்துக்கே உரிமை யாக்கினார். அவருடைய தேசாபிமானம் குறுகிய தேசாபிமான மன்று. அவர் பரம காருண்ய மூர்த்தி யாவர். எல்லாரிடமும் அவர், ஒரே படித்தான அன்பைப் பாராட்டி வந்தார். அவர் கொண்டிருந்த கருத்தை, அவருடைய சொற்களிலிருந்தே நன்கு அறியலாம். அவர் கடைசியாகச் செய்த ஓர் உபந்யாசத்தில்:—

"தேசீயம் என்பது தன்னைத் தானே அறிந்து, தனக்குத் தானே முன்னேற்ற மடைந்து, தன்னுடைய கருத்தைச் சுய

முயற்சியினால் அடைதலே யாம். ஆனால், முடிவான கருத்து
அஃதன்று. மக்கள் வகுப்பினர் உய்ய வேண்டுமானால், ஒவ்
வொரு தேசமும் தேசீய உணர்ச்சியை வளர்த்தாக வேண்
டும். கடைசியாக நீங்கள் வெற்றியை யடைந்து சமாதான
நிபந்தனைகளைப் பேசுங்காலத்திலும் உங்கள் தேசத்தின் வெற்
றியைக் குறித்து மட்டும் வீண்பெருமை கொள்ளாதீர்கள்.
நான் சம்பந்தப் பட்டவரையில் ஒன்று எனக்கு உண்மையாக
மனத்திற் படுகின்றது. இந்தியா, பல சமஸ்தானங்களின்
அல்லது பல ராச்சியங்களின் ஐக்கியமாக இருக்கப்போகிறது.
அதது, தன் தன் கல்வி, நாகரிகம், பரம்பரை முதலியவற்றை
யநுசரித்து நடக்கப்போகின்றது. தொண்டு புரிவதில் எல்லா
மும் ஒன்று சேரப்போகிறது. சுவாதீனமடைந்த பல சாதி
களின் ஐக்கியமாக உலகம் இருக்கப்போகிறது. மக்கள்
வகுப்பினர்க்குத் தொண்டுபுரிவதே எல்லாருடைய கருத்
தாகும். எல்லாரும் ஒன்றுபட்டாலன்றிச் சமாதானத்திற்கு
வழியில்லை.'' என்று சொல்லி யருளினர். பொன்னினும்
சிறந்த இம்மொழிகளை வெளியிட்ட தேசபந்துவின் அறி
வின் முதிர்ச்சியை என்னென்று சொல்லலாம்? இத்தகைய
உயர்ந்த நோக்கத்தை யடைந்திருந்த பெரியார் நம்மை
விட்டுப் பிரிந்தார். நம்முடைய கெட்டகாலம் அவரை
அங்ஙனம் பிரியச் செய்தது போலும்?

உதாரகுணம் அளவுக்குமீறி இருந்ததைப் போலவே
தேசபந்துவினிடம் தைரியமும் வீரமும் குடிகொண்டிருந்
தன. சுயராஜ்யம் விரைவில் பெற விரும்பி அவர், அமிருத
சரஸில் இடிமுழக்கம்போலச் செய்த உபந்யாசங்கள், ஒவ்
வொருவரையும் திடுக்கிடச் செய்தன. தேசத்தினிடம் அவர்
கொண்டிருந்த அன்பின் பெருக்கை, அந்த உபந்யாசங்களே
தெற்றென விளக்கும். சொல்லமுடியாத ஊக்கத்தாலும், விடா



முயற்சியாலும் அவர், தம்முடைய சுயராஜ்யக் கட்சியை எவ்
விடத்தும் வெற்றிபெற்று விளங்குமாறு செய்தார். பிரதிப்
பூரில் அவர் பேசிய பேச்சுக்களை நன்கு ஆராய்ந்து பார்த்தால்
அவருடைய உயர்ந்த அறிவும், மிக்க ஆராய்ச்சியுடன்கூடிய
குணமும் வெளிப்படும். சிறந்த இராஜதந்திரங்களும் அந்
தப் பேச்சுக்களிற் பொலிகின்றன. பாரத உலகத்தின் மக்
கள் ஒவ்வொருவரும், அந்தப் பேச்சுக்களின் பொருள்களை
யுள்ளவாறு ஆராய்ந்து அறிந்து நடப்பாராகில், இவ்வுலகம்
விரைவில் முன்னேற்ற 'மடையும் என்பதற் கோர் ஐயமும்
உண்டோ?

அஹிம்சா தருமம் என்னும் வழி இந்தியாவுக்கு உரிமை
யைக் கொடுக்கும் என்று அவர் உறுதியாக எண்ணியிருந்தார்.
அவ்வழியை இந்தியர் அனைவரும் பின்பற்றி நடந்தால் உரி
மையும் கிடைக்காமல் போகுமோ? உரிமையைப் பெற அதை
விட உயர்ந்தவழி வேறு யாதேனும் உளதோ? தேசபந்து
தாசருடைய கொள்கைகளை மேற்கொண்டு சட்டசபைகளுக்
குட் சென்ற சுயராஜ்யக் கட்சியினர் செய்த வேலைகளின் பெரு
மையை எவரும் மறுக்க முடியாது. அவ்வளவு பெருமையும்
நம் சித்த ரஞ்சனருக்கே சொந்தமான தாகும். அவருடைய
அற்புதத்திறமைக்கு அந்தப் பெருமை போதிய தாகுமோ?

பெறுதற்கு அரிய அந்தப் பெரியாரைப் பாரதமாதா
பெற்றிருந்ததால் நாம் அடைந்த நன்மைகளுக்கு அளவே
இல்லை. நமக்காக அவர், எல்லாமும் துறந்து, உழைத்து,
மேற்கொண்ட வருத்தத்தை வாய்விட்டுச் சொல்லவுங்
கூடுமோ? அங்ஙனம் நம்பொருட்டுப் பாடுபட்ட அவருக்கு
நாம் என்ன கைம்மாறு செய்வது? அவருடைய கொள்கை
களை மேற்கொண்டு நடப்போமாகில் சாஸ்திர விதியின்படி
அவருடைய ஆத்மா சாந்தியடையும். அஃது ஒருவகையில்

காம் செய்யும் கைம்மாருகும். அங்ஙனம் செய்வோமாகில் நம்மைவிட உயர்ந்தவர் ஒருவர், எவ்வுலகினும் இரார்.

"தாய் நாட்டினிடம் அன்பு பாராட்டுவது குற்றமாகுமானல் நானும் ஒரு குற்றவாளிதான். என்னுடைய நாட்டின் சுதந்திரத்திற்காக உயிர்விட வேண்டுமோனலும் நான் சித்தமாக இருக்கிறேன் என்பதை இப்பொழுது உங்கள் எல்லாருக்கும் தெரிவிக்கிறேன்." என்னும் தாசருடைய அரிய மொழிகளை இந்நாட்டினர் ஒவ்வொருவரும் மனத்திற்கொண்டு ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். யாதினும் உயர்ந்த அவருடைய சொற்களைப் பின்பற்றி, நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைத்தல் வேண்டும்; பாரத மாதாவின் உரிமையைப் பெற ஒற்றுமையை விருத்தி செய்ய வேண்டும்.

பஞ்சாப்பிலுள்ள இந்துக்களும் முகமதியர்களும் தேசபந்துவின் இறப்பு என்னும் இடிவீழ்ச்சியினல் தங்களுடைய சண்டைகளை மறந்திருக்கிருர்கள். அந்த இருசமூகத்தவர்களும் இனிமேல் தங்களுடைய சண்டைகளை யொழித்து ஒற்றுமையுடன் விளங்க முயற்சிப்பார்களா? அங்ஙனம் முயற்சித்து ஒற்றுமையுடன் இருப்பார்களானல், இந்நாடு அடையும் பெருமையை அளவிடக் கூடுமோ?

தேயபந்து சித்த ரஞ்சன தாசருடைய ஆத்மா சாந்தியுறுமாறு நாமெல்லாரும் ஒற்றுமையுடன் எல்லாம் வல்ல இறைவனை மன மொழி மெய்களால் வணங்கி வாழ்த்துவோமாக.

சுபம்

177582
சென்னை-600 008.

# தேசபந்து பிள்ளைத்தமிழ்

[அச்சில் இருக்கிறது]

விலை எட்டணவுக்கு மேலாகாது

இது, மிகவும் எளிய நடையில் அழகிய சந்தங்களுடன் சிறந்த தமிழ்ப் பண்டிதர் ஒருவரால் பாடப்பட்ட அரிய நூல். தமிழ் நாட்டினர் ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய புத்தகம். படிக்கப் படிக்க இன்பம் பயப்பது; நினைக்க நினைக்க உள்ளத்தை யுருக்குவது. கொஞ்சம் பிரதிகளே வெளியாகின்றன. உடனே உங்கள் விலாசங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள். புத்தகங்கள் வெளியானதும் வி. பி. ல் அனுப்புகின்றேம். புத்தகங்கள் கிடைக்காமைக்குப் பின்னிட்டு வருந்தவேண்டாம். உடனே எழுதுங்கள்.

---

தாதாபாய் நௌரோஜி
கோபாலகிருஷ்ண கோகலே
லோகமான்ய பால கங்காதர திலகர்
மகாத்மா காந்தியடிகள்
} விரைவில் வெளியிடப் படும்

முதலிய நம் நாட்டுத் திருத்தொண்டர்களுடைய அருமைச் சரித்திரங்களும், அற்புதச் செயல்களும், உயர்ந்த சொற்பொழிவுகளும் எல்லாரும் நன்ருகப் படித்தறியுமாறு எளிய தமிழ்வசன நடையில் தக்க பெரியவர்களால் அழகாக எழுதப்பட்டவை. விரைவில் வெளிப்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கின்றனம்.

சேந்தமிழ்ச்சிந்தாமணிப் புத்தகசாலை
பெரியமேட், சென்னை

## "செந்தமிழ்ச்சிந்தாமணி"

மாதந்தோறும் வெளிவரும் ஓர் உயர்ந்த தமிழ்ப்பத்திரிகை

தமிழ்மொழியின் வளர்ச்சியையும், இந்தியர் முன்னேற்றத்தையும் கருதித் தக்க பெரியவர்களால் எளிய நடையி எழுதப்படும் தெய்வபக்தி, கல்வி, சமயஞானம், பூதபௌதி ரசாயன கலாஞானம், சரித்திரஞானம், சாஸ்திரஞானம், புராண இதிகாசஞானம், நல்லொழுக்கம், நூல்ஆராய்ச்சி, பெண்களின் முன்னேற்றம், ஒற்றுமை, அரசியல்முறை, நவீனகாவல், விநோதவர்த்தமானங்கள், வேடிக்கைக் குறிப்புக்கள், பொதுச் செய்திகள் முதலிய பல அருமையான விஷயங்களை இப்பத்திரிகையில் நன்குக்காணலாம். தற்காலத்திற்கு வேண்டிய பற்பல அரிய விஷயங்களைத் தாங்கி வெளிவருவது இஃதொன்றே யாகும். இஃது, ஆடவரும் மகளிரும் படித்து இன்புறத்தக்க நன்மணிகளின் களஞ்சிய மாகும். நேரில் படித்துப் பார்ப்பின் இதன் பெருமை நன்கு விளங்கும்.

இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்; தமிழ்த் தாயை யாதரியுங்கள்; உலக நிகழ்ச்சிகளை நன்கு அறியுங்கள்; உங்களுக்கெல்லா நன்மைகளும் உண்டாகும். ஒவ்வொருவரும் படித்தற்குரிய பத்திரிகை இஃதொன்றே. நம் நாட்டினர் முன்னேற்றத்திற்காக உழைக்க முன்வந்துள்ள இதைக் கை விடாதீர்கள்.

பலபெரியவர்களுடைய நல்லபிப்பிராயங்களையும், நற்சாட்சிப்பத்திரங்களையும் பெற்றுச் சிறக்க [illegible]குவதும், பல்வேறுமக்களால் கொண்டாடப்பட்டு உலாவி வருவதும் நம்முடைய "செந்தமிழ்ச்சிந்தாமணி"யே யாகும்.

வருடசந்தா (உள்நாடு) ரூபாய் 2—0—0
" (வெளிநாடு) " 2—8—0

"செந்தமிழ்ச்சிந்தாமணி"
பத்திரிகாலயம்
பெரியமெட், சென்னை.

தமிழ்நாடு ஆவண காப்பகம்
சென்னை-600 008
நூலகம்